30.1.2023
திங்கட் கிழமை

*பெரிய பிராட்டி திருவாய்மொழியில் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. ப்ரதானமாக, ஈஸ்வர தத்வத்தை நிர்தேசிக்கும் தன்மைகளாவது, மூன்று :

***ஜகத் காரணத்வம்*** (உலக படைப்பிற்கு காரணம்) - ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய காரணம்

***அனந்தத்வம்*** (அனைத்திலும் வ்யாபித்திருப்பது) - விபுத்வம் - ஸர்வ அந்தர்யாமித்வம்

***ஸித்தோபாயத்வம்*** (பலனை அளிக்கும் தன்மை) - பல ப்ரதத்வம்

இவை அனைத்தும் பிராட்டியோடு கூடிய எம்பெருமானுக்கு பொதுவானவை ; ஆக, ஸ்ரீமந் நாராயணனே பர தத்வம் என அறிய வேண்டும். இவை அனைத்தையும்உணர்த்துகிறது, ப்ரமாணங்கள் :

# ***ஜகத் காரணத்வம்*** - தைத்ரீய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணம் -

***யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி***

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள்*** என கொள்ள வேண்டும்.

***மாயா வா ஏஷா நாரஸிம்ஹி ஸர்வமிதம் ச்ருஜதி ஸர்வமிதம் ஸம்ஹரதி ஸர்வமிதம் ரக்ஷதி***

என்று ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத் பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் உண்டு (ச்ருஜதி, ஸம்ஹரதி, ரக்ஷதி) என ஸ்பஷ்டமாகக் கூறுகிறது.

இதனால், பிராட்டிக்கும் ஜகத் காரணத்வம் உள்ளது என அறியலாம்.

# ***அனந்தத்வம்*** - தைத்தீரிய உபநிஷத்- நாராயண அநுவாகத்தில்,

***அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:***

அதாவது,

எல்லா த்ரவ்யங்களுக்கும் அந்தர்யாமியாக உள்ளும் , ப்ரபஞ்சமாக வெளியேயும் வியாபித்து இருப்பவன் நாராயணன் என்னும் பரம் பொருள், எனப்படுகிறது

பிராட்டியோடு கூடிய எம்பெருமானுக்கே விபுத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள்*** என கொள்ள வேண்டும்.

***ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ*** என்கிற ஸ்ருதி வாக்யத்தை வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

***அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி*** எனக் கூறி,

பிராட்டியின் ஸ்வரூபம் எம்பெருமானைப் போன்றதே என அருளுகிறார்.

எனவே, ***அனந்த*** பதம் கொண்டு, பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

***யதா ஸர்வ கதோ விஷ்ணு: ததை வையம் த்விஜோத்தம*** என்று பராசர மஹரிஷியும்,

எம்பெருமான் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பது போல், பிராட்டியும் வ்யாபித்திருக்கிறாள், என்கிறார்.

இதனால், பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

# ***ஸித்தோபாயத்வம்*** - உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ***ப்ருஹ்ம ஸூத்ரம்*** (3-2-8-37) மற்றும் அதற்கு விளக்க உரையாக இருக்கிற ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீ பாஷ்யத்திலும் இது விளக்கப் படுகிறது :

***பலமத உபபத்தே:***

அதாவது,

ஸகல பலனும் ப்ருஹ்மத்திடமிருந்தே.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணைத் தவிர வேறு ஒரு தேவதை பலன் அளிப்பதாக சாஸ்த்திரங்கள் கூறினாலும், அவை அனைத்தும் பரம்பொருளான் எம்பெருமானின் அனுக்ரஹத்தாலேயே என உணர வேண்டும், என்பதாகிறது.

பிராட்டிக்கு ஸித்தோபாயத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள்*** என கொள்ள வேண்டும்.

***தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே***

என்கிற ஸ்ருதி வாக்யத்தால், லக்ஷ்மி தேவியை சரணமடைந்து இல்லாமையைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

***லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே*** என்கிற பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும்,

எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம்.

***யக்ஞ வித்யா மஹாவித்யா குஹ்ய வித்யா ச ஷோபனே. ஆத்ம வித்யா ச தேவி, த்வம் விமுக்தி பல தாயிநி*** என்று பராசர மஹரிஷி,

பெரிய பிராட்டியாருக்கு முக்தி அளிக்கும் தன்மை உடையவள் என்கிறார்.

இதனாலும், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

# ஸ்ரீ பராசர பட்டர் ஸ்ரீகுணரத்னகோஸத்தில்,

***தத் அந்தர்பாவாத்வாம் ந ப்ருகபிததே ஸ்ருதிரபி***

என அருளினார்.

அதாவது, எம்பெருமானுடன் சேர்ந்தே இருப்பதினால், பிராட்டியை தனியாக ஸ்ருதிகள் கூறவில்லை.

இதையே ஸ்வாமி தேசிகன், ஸந்நியோகஸிஷ்ட வ்யாகரண நியாயத்தாலே ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் விவரித்தார்.

அதாவது,

*ஸஹவா ப்ரவ்ருத்தி, ஸஹவா நிவ்ருத்தி*

(சேர்ந்தே இருக்கும் அல்லது சேர்ந்தே போகும்)

என்கிற அந்த நியாயம் என்னவென்றால், ஒரே இடத்தில் சேர்ந்தே இருக்கக் கூடியவைகளைக் கூறும் போது, ஒன்றை சொல்லும் போது மற்றொன்றும் கூறியதாகும்.

இதனால், எம்பெருமானை சொல்லும்மிடமெங்கும், 'அகலகில்லேன்' என்று இருக்கும் பிராட்டியையும் சொல்லிற்றாம் என்பதாக விளக்கப் படுகிறது.

# பராசர மஹரிஷி அருளிய விஷ்ணு புராணத்தில்,

***தேவ த்ரியக் மநுஷ்யாணாம் புன்னாமா பகவான் ஹரி: ஸ்த்ரி நாம்நி லக்ஷ்மிர்மைத்ரேய நாந்யோர் வித்யதே பரம்***

என்று கூறியதால்,

பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் மற்றும் ஹரியைத் தவிர வேறு யாரும், ஸர்வ சேஷியாக, அதாவது பரமாத்மாவாக மாட்டார்கள்.

ஆக, ஶ்ரீமந் நாராயணனே ஸர்வ சேஷி, என்பதாகிறது ;

# ஸ்வாமி தேசிகனின் ***ஸித்தோபாய சோதனாதிகார*** வரிகளாவது :

***எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்றாம் - என்று தொடங்கி உடையவர் அருளிச் செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்***

# ஆக, ஜீவர்கள் விஷயத்தில் திவ்ய தம்பதிகள், ஸித்தோபாயமாகவும் ஸித்தோபேயமாகவும் இருக்கிறார்கள் என்பது ப்ரமாண ஸித்தம்.

2. உபாய உபேய பதங்களின் அர்த்தங்களைக் கவனிப்போம் :

# ஒரு பலனை அடைய இரண்டு உபாயங்கள் உள்ளன; இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி ஹ்ருதயம்*** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***ப்ராப்தி உபாயமாவது இஜ்ஜீவன் சம்சார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப் படுகைக்கு அனபாய ஸாதனமாக ஸ்வ புத்தியாலே கோரும்படி சாஸ்த்தர உக்தமான அர்த்தம். இது ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் இரண்டு படியாய் இருக்கும்***

***ஸித்தோபாயம்* -** பலன் கொடுப்பனிடம், எப்போதுமே பலன் தர தயாராக இருக்கக் கூடியதான நிலை; அது, ஒரு உபாயம். இதுவே ப்ரதான உபாயம்.

திவ்ய தம்பதிகள் ஸர்வ சேஷி, என சாஸ்த்திரங்கள் அறிவிக்கின்றன. ஆக, பிராட்டியோடு கூடிய பெருமாளே ஸித்தோபாயம்.

***ஸாத்யோபாயம்*** - பலன் பெறுபவனால், ஸித்தோபாயனின் விதிப்படி, செய்ய வேண்டிய அனுஷ்டானம்; அது, ஒரு உபாயம். இது பகவத் அதீனமான அப்ரதான உபாயம். பகவத் சாஸ்த்திர விதி இருப்பதால், ஸாத்யோபாய அனுஷ்டானமும் பலனுக்கு தேவையாகிறது.

# பகவத் கைங்கர்யமாவது ஜீவர்களின் ஸ்வரூப ப்ராப்த செயல் ; இதுவே உபேய பரமாகும். இதிலும் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரு வகைகளாக உள்ளன :

***ஸித்தோபேயம்*** - ஜீவர்களின் கைங்கர்யங்களை ஸ்வீகரிக்கும் திவ்ய தம்பதிகள்

திவ்ய தம்பதிகள் ஸர்வ சேஷி, என சாஸ்த்திரங்கள் அறிவிக்கின்றன. ஆக, பிராட்டியோடு கூடிய பெருமாளே ஸித்தோபேயம்.

***ஸாத்யோபேயம்*** - ஜீவர்களின் கைங்கர்ய ப்ரகாரம் ; ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி*** வரி :

***கைங்கர்யமாவது ஸ்வாமி உகந்த ஏவல் தொழில் செய்கையாலே இது யதா சாஸ்திரம் பண்ணினால் உகப்பாம்***

இங்கு செய்யும் பகவத் கைங்கர்யமும் சாஸ்த்திர விதிப்படியே செய்ய வேண்டும், என்று தெளிவிக்கிறார்

பகவான் திருவடிகளை ***உபேயம்*** என பூர்வர்கள் அருளினர் ;

திருப்பாவை * **உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்*** - தங்கத் தாமரை ஒத்த திருவடிகளை மங்களாசாசனம் செய்ய நாங்கள் வந்திருப்பதன் நோக்கத்தை நீ கேட்பாயாக !

அமலனாதிபிரான் ***திருக்கமல பாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே*** - எம்பெருமான் திருவடிகளே போக்யம்.

அதிகார ஸங்க்ரஹம் ***நின்ற புராணன் அடியிணை ஏந்தும் நெடும் பயனும் பொன்றுதலே நிலை*** - பிராட்டியுடன் நின்ற பகவானுடைய திருவடிகளை ஏந்தி கைங்கர்யம் செய்வதாகிய பரம புருஷார்த்தமே ஸ்வபாவம்.

திருவாய்மொழி ***நாளும் நம் திருவுடையடிகள் தம் நலம் கழல் வணங்கி, மாளும் ஓர் இடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே*** - பிராட்டியுடன் நின்ற பகவானுடைய திருவடிகளை வணங்கி கைங்கர்யம் செய்வதாகும்.

அதிகார ஸங்க்ரஹம், ***கண்ணன் அடியிணை எமக்கு காட்டும் வெற்பு*** - ஸர்வேஸ்வரனான கண்ணனின் திருவடிகளை பரம போக்யமாக எங்களுக்கு காட்டித் தருகின்ற திருமலை.

3. த்வய மந்திர விளக்கத்தில், ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் ***ஶ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே*** என்னும் பூர்வ கண்டத்தில், எம்பெருமான் மட்டுமே ஸித்தோபாயமாய் இருக்க, பிராட்டி உபலக்ஷணமாகிறாள், (அதாவது, பிராட்டி புருஷகார பூதையிக மட்டுமே இருக்கிறாள்) என்றும் ***ஶ்ரீமதே நாராணாய நம:*** என்னும் உத்தர கண்டத்தில், எம்பெருமானோடு ஸித்தோபேயமாய் பிராட்டி விசேஷணமாகிறாள் என்றும் கூறுகின்றனர். ஆக, கைங்கர்யத்தை, பிராட்டி எம்பெருமானோடு கூடி ஸ்வீகரிக்கிறாள் என்றும், ஸித்தோபாய விஷயத்தில் பிராட்டி விலகி நிற்கிறாள் என்றும் பூர்வபக்ஷிகள் கூறுகின்றனர். இவ்வாறு பூர்வபக்ஷிகளின் முமுக்ஷுபடி க்ரந்தம் விளக்கும் :

***இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஸ்வரன் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது ; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையையிரக்கிறது*** (எண் - 122 ) - அதாவது, த்வய மந்திரத்தில் முன்

வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டிக்கு ஸித்தோபாயம் கிடையாது என உரைத்து, பின் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டியோடு சேர்ந்த ஈஸ்வரனுக்கு கைங்கர்யத்தை ஏற்கும் தன்மை உள்ளதாகக் கூறி, பிராட்டியின் ஈஸ்வரத்வத்தை நிஷேதிக்கின்றனர்.

# ஸ்வாமி தேசிகன் ***ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்*** ,

***நாராயண சப்தத்திலும் சரண சப்தத்திலும் தோற்றுகிற குண விசேஷ விக்ரஹ விசேஷாதி விசிஷ்டமான ஏகம் உபாயமானாற் போலே துல்ய யோகக்ஷேமமான ஸ்ரீமத் சப்தத்தில் தோற்றின நித்ய பத்நி சம்பந்த விசிஷ்டமானாலும் உபாயைக்யத்துக்கு குறையில்லை***

என அருளியுள்ளார். இதன் பொருளாவது:

***நாராயண சப்தத்திலும்* -** த்வய மந்திரத்தில் உள்ள நாராயண பத அர்த்த்தினாலும்

***சரண சப்தத்திலும்* -** த்வய மந்திரத்தில் உள்ள சரண பத அர்த்த்தினாலும்

***தோற்றுகிற குண விசேஷ* -** தெளிவிக்கிற குணங்களோடு கூடிய

***விக்ரஹ விசேஷாதி விசிஷ்டமான* -** மற்றும் திருமேனியோடு கூடிய

***ஏகம் உபாயமானாற் போலே* -** எம்பெருமான் ஒருவனே ஸித்தோபாயம் என்கிற பொருள் போல

***துல்ய யோகக்ஷேமமான* -** அதே ந்யாயத்தைக் கொண்டு

***ஸ்ரீமத் சப்தத்தில்* -** த்வய மந்திரத்தில் உள்ள ஸ்ரீமத் பத அர்த்த்திலும்

***தோற்றின நித்ய பத்நி சம்பந்த விசிஷ்டமானாலும்* -** 'அகலகில்லேன்' எனும்படியாக பிராட்டியை மனைவியாகக் கொண்டு அவளுடன் கூடிய ஸ்ரீமந் நாராயணன்

***உபாயைக்யத்துக்கு குறையில்லை* -** ஸித்தோபாயம் என்கிற அர்த்த நிர்ணயம் தோஷங்கள் அற்றதே

ஆக, பெரிய பிராட்டிக்கு உபாயத்வம் கிடையாது எனும் பக்ஷம் ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

# ஆக த்வய மந்திரத்தில், ஸித்தோபாயத்வமும், ஸித்தோபேயத்வமும் திவ்ய தம்பதிகளுக்கு, பொதுவான லக்ஷணமாகிறது.

***ஸ்ரீமன் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே***
***ஸ்ரீமதே நாராயணாய நம:***

எனக் கூறப் படுகிறது.

இதில் பூர்வ கண்டம் உபாய பரம் மற்றும் உத்தர கண்டம் உபேய பரம்.

இதில் ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமானது, உபாய உபேய தசைகளில், பிராட்டி எம்பெருமானுக்கு ***விசேஷணமாகிறாள்*** என்பதாகிறது.

***ஸ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே***

என்கிற பகவத் ராமானுஜரின் ***சரணாகதி கத்ய*** வரிகளால், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் திருவடிகளில் ஸ்வ நிஷ்டையாக சரணாகதி அனுஷ்டானம் செய்ததாயிற்று.

ஆக, பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயார் ஈஸ்வர தத்வமே, என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (4-5-11) :

***மாரி மாறாத தண்அம் மலைவேங்கடத்து அண்ணலை வாரி மாறாத பைம்பூம் பொழில்சூழ் குருகூர்நகர்க் காரி மாறன் சடகோபன் சொல்ஆயிரத்து இப்பத்தால் வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்குமே***

அதாவது,

அழகிய திருமலையில் எழுந்தருளியிருக்கின்ற திருவேங்கடமுடையானை, திருக்குருகூரிலே எழுந்தருளியிருக்கின்ற காரிமாறரான சடகோபரால் அருளிச்செய்யப்பட்ட ஆயிரத்துள் இப்பத்துத் திருப்பாசுரங்களையும் சொல்லுகிறவர்கட்கு, வாசனை மாறாத தாமரைப் பூவில், எழுந்தருளியிருக்கின்ற பெரிய பிராட்டியார் வினையைத் தீர்ப்பார்.

என்கிறது. ஆக, வினையை தீர்க்கும் ரக்ஷகத்வம் பிராட்டிக்கு உண்டென்பது உணரத்தக்கது.

# ஸ்வாமி தேசிகனின் ***துவயச்சுருக்கு***

***சேர்க்கும் திருமகள் சேர்த்தியின் மன்னுதல் சீர்ப்பெரியோற்கு ஏற்கும் குணங்கள் இலக்காம் வடிவில் இணை அடிகள் பார்க்கும் சரண் அதில் பற்றுதல் நம் நிலை நாம் பெறும் பேறு ஏற்கின்ற எல்லைகள் எல்லாக் களை அறவு எண்ணினமே***

அதாவது, த்வய மந்திரத்தில், பூர்வ பாகத்தில் திவ்ய தம்பதிகளின் ஸித்தோபாயத்வமும் உத்தர பாகத்தில் உள்ள அவர்களின் ஸித்தோபேயத்வமும் விளக்கப் படுகிறது :

***சேர்க்கும் திருமகள்*** - ஶ்ரீ

***சேர்த்தியின் மன்னுதல்*** - மந்

***சீர்ப்பெரியோற்கு ஏற்கும் குணங்கள்*** - நாராயண

***இலக்காம் வடிவில் இணை அடிகள்*** - சரணௌ

***பார்க்கும் சரண்*** - சரணம்

***அதில் பற்றுதல்*** - ப்ர

***நம் நிலை*** - பத்யே

***நாம் பெறும் பேறு*** - ஶ்ரீமதே நாராயண

***ஏற்கின்ற எல்லைகள்*** - ஆய

***எல்லாக் களை அறவு எண்ணினமே*** - நம:

# ஜீவர்கள் விஷயத்தில் திவ்ய தம்பதிகள், ஸித்தோபாயமாகவும் ஸித்தோபேயமாகவும் இருக்கிறார்கள் என்பது ப்ரமாண ஸித்தம்

4. ஆழ்வார்களும் ஜீவர்கள் விஷயத்தில் திவ்ய தம்பதிகள், ஸித்தோபாயமாகவும் ஸித்தோபேயமாகவும் இருக்கிறார்கள் என்பதனை தங்களது பாசுரங்களில் விளக்கி உள்ளனர் :

# ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி (9-2-1) திவ்ய தம்பதிகளின் ஸித்தோபாயத்வத்தை தெளிவிக்கிறது :

*பண்டை நாளாலே நின் திரு அருளும் பங்கயத்தாள் திரு அருளும் கொண்டு, நின்கோயில் சீய்த்துப், பல் படிகால் குடி குடி வழி வந்து ஆள் செய்யும் தொண்டரோர்க்கு, அருளி சோதி வாய் திறந்து, உன் தாமரைக் கண்களால் நோக்காய், தெண் திரை பொருநல் தண் பணை சூழ்ந்த திருப்புளிங்குடிக் கிடந்தானே*

அதாவது, ஏதோ ஒரு காலத்தில் செய்து போந்த அக்ஞாத ஸுஹ்ருதத்தினால் உனது க்ருபையையும் பெரிய பிராட்டியாருடைய க்ருபையையும் ஒன்று சேர கிடைக்கப் பெற்று அதனால் ப்ராப்தி விரோதி பாபங்களை களைய ஹேதுவாகி, அதனால் உன்னுடைய ஸந்நதியில் சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட ஓர் ஸாத்ய அனுஷ்டானத்தைப் பண்ணி, அதன் பிறகு உத்தரக்ருத்யமாக பரம்பரையாக பாகவத கைங்கர்யம் செய்து போருகிற அடியோங்கள் விஷயத்திலே, உன் திருவாய் மலர்ந்து பரம புருஷார்த்தம் ஸித்திக்கட்டும் என அருளி, உனது தாமரை திருக்கண்களாலே கடாக்ஷிக்க வேணும் ; தெளிந்த அலைகளையுடைய தாமிரபர்ணியோடு சேர்ந்த அழகிய சீர் நிலங்களால் குழப்பட்ட திருப்புளிங்குடியிலே சயனித்தருள்பவனே!

பெரிய பிராட்டியைக் குறித்து, நடாதூர் அம்மாள் அருளிச் செய்த ஸ்லோகம்:

*ஆகாரத்ரய ஸம்பன்னாம் அரவிந்த நிவாஸிநீம் அசேஷ ஜகதீசித்ரீம் வந்தே வரத வல்லபாம்*

அதாவது, சேஷத்வ பாரதந்த்ர்ய போக்யதைகளில் அவனையன்றி அறியாதமை என்று சொல்லக்கூடிய முப்பெருமை பெற்றவளும் தாமரையில் வசிப்பவளுமான எல்லா உலகையும் நியமித்து நடத்துமவளுமான வரதனுடைய அன்புக்குரியவளை வணங்குகிறேன். பெரிய பிராட்டியின் மூன்று உயர்ந்த குணங்கள் சம்சாரி ஜீவர்களின் நலனுக்கு ஹேதுவாகின்றன.

***புருஷகாரம், உபாயம், உபேயம்*** என்று மூன்று குணங்களை பிராட்டியின் குணங்கள் என்று சிறப்பாகச் சொல்வது வழக்கம்.

***புருஷகாரமாவது*** - சம்சாரி ஜீவர்களின் பாபங்களைக் களைய செய்யும் பரிந்துரை. அதாவது, உபாய விரோதியான பாபங்களைக் களைவது. சரணாகதி அனுஷ்டிக்க தடையான பாபங்களைப் போக்குவது.

***உபாயமாவது*** - சம்சாரி ஜீவர்களின் உபேய விரோதியான பாபங்களைக் களைவது. அதாவது, மோக்ஷ பலனாற்கு தடையான பாபங்களைப் போக்குவது.

***உபேயமாவது*** ஜீவர்களின் கைங்கர்யத்தை ஸ்வீகரிப்பது.

ஸ்வாமி தேசிகனின் ***அர்த்த பஞ்சக அதிகாரம்*** வரிகள் :

*அவ்விடங்களில் அனுஸந்திக்கும் போது … 'நின் திரு அருளும் பங்கயத்தாள் திரு அருளும்' …. என்றும் ப்ரமாணங்கள் சொல்லுகிறபடியே ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸர்வ அவஸ்தையிலும் ஸஹ தர்ம சாரிணியான பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாத முழு நலமான அனந்த ஞானானந்த ஸ்வரூபமாக அனுஸந்திக்க வேண்டும்*

ஆக, பெரிய பிராட்டியோடு கூடிய எம்பெருமனே, அதாவது திவ்ய தம்பதிகளே, ஸித்தோபாயம் என்றபடி ; இதனை விளக்கும் பொருட்டு, ***நின் திரு அருளும் பங்கயத்தாள் திரு அருளும்*** - உனது க்ருபையையும் பெரிய பிராட்டியாருடைய க்ருபையையும் ஒன்று சேர கிடைக்கப் பெற்று அதனால் ப்ராப்தி விரோதி

பாபங்களை களைய ஹேதுவாகி - என அருளிச் செய்தார் ஆழ்வார் ; ஜீவ காருண்யத்தில் ஸ்த்ரீ ப்ரயுக்தமான புருஷகாரம், பிராட்டிக்கு அதிகப்படியான ஏற்றம், என்பது ப்ரமாண ஸித்தம்.

இப்பாசுரத்தில் எம்பெருமானும் பெரிய பிராட்டியும், அதாவது திவ்ய தம்பதிகள், முமுக்ஷுவான அடியார்களின் ஸாத்யோபாய அநுஷ்டானத்தை ஸ்வீகரித்து, பலன் அளிக்கும் ஸித்தோபாயமாகிறார்கள், என்றபடி.

# ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி (9-2-3) திவ்ய தம்பதிகளின் ஸித்தோபேயத்வத்தை தெளிவிக்கிறது :

*கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம் கிடத்தி உன் திரு உடம்பு அசைய தொடர்ந்து குற்றவேல் செய்து தொல் அடிமை தொல் அடிமை வழிவரும் தொண்டரோர்க்கு அருளி தடம் கொள் தாமரை கண் விழித்து நீ எழுந்து உன் தாமரை மங்கையும் நீயும் இடம் கொள் மூ உலகும் தொழ இருந்து அருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே*

அதாவது, இங்கு அர்ச்சாரூபியாக சயனிக்கத் தொடங்கின காலம் முதலாக இப்படியே பல காலமாகச் சயனித்துக் கொண்டிருக்கிறாய் ; உன் திருமேனி நோக இன்னும் எத்தனை காலம் இப்படியே சயனித்திருப்பாய் ? நிரந்தரமான கைங்கரியம் செய்து அநாதியான தாஸத்வ வழியிலே அந்வயித்து இருக்கின்ற அடியோமுக்கு அருள் செய்து தேவரீரது திவ்ய கடாக்ஷத்துக்கு விஷயமான தாமரைக் கண்களைப் பார்க்க பெரிய பிராட்டியுடனே தேவரீர் விசாலமான மூவுலகமும் தொழும் படியாக வீற்றிருந்து ஸேவை ஸாதிக்க வேணும் திருப்புளிங்குடியிலே திருக்கண் வளர்ந்தருளுகிறவனே.

ஆக, பெரிய பிராட்டியோடு கூடிய எம்பெருமனே, அதாவது திவ்ய தம்பதிகளே, ஸித்தோபேயம் என்றபடி ; இதனை விளக்கும் பொருட்டு, *தாமரை மங்கையும் நீயும் இடம் கொள் மூ உலகும் தொழ* - பெரிய பிராட்டியுடனே தேவரீர் விசாலமான மூவுலகமும் தொழும் படியாக வீற்றிருந்து ஸேவை ஸாதிக்க - என அருளிச் செய்தார் ஆழ்வார்.

இப்பாசுரத்தில் பெரிய பிராட்டியோடு கூடிய எம்பெருமான், அதாவது திவ்ய தம்பதிகள், அடியார்களின் கைங்கர்யங்களை ஸ்வீகரித்து, ஸித்தோபேயமாகிறார்கள், என்றபடி.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

31.1.2023
செவ்வாய் கிழமை

*ப்ருஹ்ம பதத்தில் மூர்த்தம் மற்றும் அமூர்த்த பதம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயசாரம் க்ரந்தத்தில் *ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகில தனு முக்தித: முக்த போக்ய:* எனப் படுகிறது. அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே ப்ராப்யமாயும் ப்ராபகமாயும் உள்ள பரம் பொருள் ஆகிறான்.

# சதுஸ்லோகி ஸ்லோகத்தில், ஸ்ரீஆளவந்தார்,

*ஆஹு: ஸ்வைரனுரூப ரூப விபவை காடோப கூடாநிதே*

என்று பெருமாளும் பிராட்டியும் ஸ்வரூபத்தாலும் திருமேனிகளாலும் பிரிக்க முடியாதவர்கள் என்கிறார்.

# ஸ்ரீ குணரத்னகோசம் - 22வது ஸ்லோகம், பட்டர் அருளியதாவது :

*ஹேலாயாம் அகிலம் சராசரம் இதம் போகே விபூதி: பரா: தந்யா: தே பரிசாரகர்மணி ஸதா பச்யந்தி யே ஸூரய: ஸ்ரீரங்கேச்வர தேவி கேவலக்ருபா நிர்வாஹ்ய வர்கே வயம் சேஷித்வே பரம: புமாந் பரிகரா ஹ்யேதே தவ ஸ்பாரணே*

அதாவது,

ஸ்ரீரங்க நாயகியே ! அனைத்து பொருட்களும் உனது உகப்பிற்காகவே உள்ளன. அப்படி எம்பெருமானுடன் சேர்ந்து நிற்கும் உங்களை சேவித்த வண்ணம் உள்ளனர் நித்யர்கள். உங்கள் கட்டளைக்காக காத்து நிற்கின்றனர். சேஷியான உன்னுடைய க்ருபையை வெளிப் படுத்தவே, நாங்கள் இங்கு காத்து உள்ளோம்.

# ஸ்ரீநடாதூர் அம்மாள் *ப்ரபந்ந பாரிஜாதம்* என்கிற தனது க்ரந்தத்தில்

*மயா வ்யாப்தா ததா ஸாபிதயா வ்யாப்தோஹம் ஈஸ்வர:*

என்று விஷ்வக்ஸேந ஸம்ஹிதா வாக்யத்தைக் கொண்டு விளக்குகிறார்.

அதாவது, 'பிராட்டி எப்படி என்னால் சூழப்பட்டிருக்கிறாளோ அதேபோல் நானும் பிராட்டியின் ஸ்வரூபத்தால், சூழப்பட்டிருக்கிறேன்' என்கிறது எம்பெருமானின் திருவாக்கு.

# பராசர மஹரிஷியும்,

*யதா ஸர்வ கதோ விஷ்ணு: ததை வையம் த்விஜோத்தம*

என்று எம்பெருமான் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பது போல், பிராட்டியும் வ்யாபித்திருக்கிறாள், என்கிறார்.

இதனால், திவ்ய தம்பதிகளே பரம் பொருள் என அறியலாம்

2. பகவத் ராமானுஜர், ஸ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில், சேதந அசேதநங்களுக்கு பகவானோடு உள்ள சரீர- ஆத்ம சம்பந்தத்தை விளக்குகிறார்.

*யஸ்ய சேதனஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷு நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதரஹ சரீரி*

என பொதுவான சரீர ஆத்ம இலக்கணத்தை அருளினார்.

அதாவது,

ஆத்மா ஆதாரம் - ஆத்மா இல்லாமல், அதனுடைய சரீரம் நிலை குலையக்கூடியது.
ஆத்மா நியந்தா - ஆத்மாவின் விருப்பப்படியே, அதனுடைய சரீரம் இயங்கக்கூடியது.
ஆத்மா சேஷி - ஆத்மாவின் உபயோகத்திற்காகவே அதனுடைய சரீரம் இருக்கிறது.

மேற் கூறிய இலக்கணத்தினால், ஸர்வேஸ்வரன் (பரம்) ஆத்மா, சேதன அசேதனங்கள் அவனுக்கு சரீரம் என்றாகிறது. இதில் உணர வேண்டியது, *சரீரி என்னும் ஆத்மாவானது சேதனத்வ த்ரவ்யமாய் இருக்க வேண்டும் ; சரீரமானது சேதனமாகவோ அல்லது அசேதனமாகவோ இருக்கக் கூடும்*

# தைத்திரீய உபநிஷத் (நாராயண ஸூக்தம்)

*நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சித் ஜகத் யஸ்மிந் த்ருஸ்யதே ஸ்ரூயதேபி வா அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:*

என்கிறது.

ஆக, நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனே பரதத்வம், நாராயணனே பரஞ்சோதி, நாராயணனே பரமாத்மா, இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாக எந்தெந்தப் பொருள்கள் உள்ளனவோ, அவையனைத்திலும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குபவன் நாராயணனே.

# சாஸ்த்திரங்கள் கூறுவது யாதெனில்,

*ஸூக்ஷ்ம சேதன அசேதன விசிஷ்டனான எம்பெருமான், ஸ்தூல சேதன அசேதன விசிஷ்டனான எம்பெருமான் ஆகிறான், என்பதே ஜகத் ஸ்ருஷ்டி*

*ஸ்தூல சேதன அசேதன விசிஷ்டனான எம்பெருமான், ஸூக்ஷ்ம சேதன அசேதன விசிஷ்டனான எம்பெருமான் ஆகிறான், என்பதே மஹா ப்ரளயம்*

# தைத்ரீய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணம் -

*யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி*

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

# பராசர மஹரிஷி அருளிய விஷ்ணு புராணத்தில்,

*தேவ த்ரியக் மநுஷ்யாணாம் புன்னாமா பகவான் ஹரி: ஸ்த்ரி நாம்நி லக்ஷ்மிர்மைத்ரேய நாந்யோர் வித்யதே பரம்*

என்று கூறியதால்,

பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் மற்றும் ஹரியைத் தவிர வேறு யாரும், ஸர்வ சேஷியாக, அதாவது பரமாத்மாவாக மாட்டார்கள்.

# ***ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ*** என்கிற ஸ்ருதி வாக்யத்தை வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

***அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி*** எனக் கூறி,

பிராட்டியின் ஸ்வரூபம் எம்பெருமானைப் போன்றதே என அருளுகிறார்.

ஆக, திவ்ய தம்பதிகளே பரமாத்மாவாகிறார்கள்.

3. பராசர மஹரிஷியின் விஷ்ணு புராணம் :

*ஹிரண்யகர்ப்போ பகவான் வாஸவோ அத ப்ரஜாபதி: ....... அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவாத்யா : கர்மயோநய:*

என்பதனால், சதுர்முகன், இந்திரன் தேவர்கள் ஆகியோர் பூர்வ கர்மத்தின் அடிப்படையில் கர்ம அநுகுண பிறவி எடுத்தவர்கள்—ஆதலால், அவர்கள் தூய்மையற்றவர்கள், என்கிறபடி.

# யோகிகள் த்யானம் செய்வதாயிருந்தால் , ப்ராணாயாமத்தினால் வாயுவையும், ப்ரத்யாஹாரத்தினால் இந்த்ரியங்களையும் வசப்படுத்தி மனஸ்ஸைப் பகவானிடம் செலுத்தவேண்டும் .

இப்படி த்யானிக்கப்படும் எம்பெருமானின் ஸ்வரூபம் , ***மூர்த்தம்*** என்றும் ***அமூர்த்தம்*** என்றும் இரண்டு வகையாக உள்ளது.

இதில், ***மூர்த்த ப்ருஹ்ம த்யானம்*** என்றும் ***அமூர்த்த ப்ருஹ்ம த்யானம்*** என்றும் சொல்லப்படும்.

ஸகல சேதந அசேதநங்களும் பகவானுக்கு சரீரம் என்பது ப்ரமாண ஸித்தம்.

இதில், ***மூர்த்த ப்ருஹ்ம த்யானமாவது*** அசுத்தமானதுவும் கர்ம க்ருதமானதுவுமான ஹிரண்யகர்பன், மருத்துக்கள், வஸுக்கள், ருத்ரர்கள், ஸூர்யன், நக்ஷத்ரங்கள், கந்தர்வ, யக்ஷ தேவ வர்க்கங்கள், மனிதன், விலங்கு, மலைகள் ,கடல்கள், மரங்கள், இவையெல்லாம் உள்ள பூமி ஆகியவற்றை தனக்கு சரீரமாக க் கொண்டவனாக செய்யப் படும் த்யானம்

இதில், ***அமூர்த்த ப்ருஹ்ம த்யானமாவது*** ப்ருஹ்மத்தை ஸ்வரூப நிரூபக தர்மங்களால் செய்யப்படும் த்யானம் ; ஈஸ்வர ஸ்வரூப நிரூபக தர்மமாவது,

***ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம*** ***ஆனந்தம் ப்ருஹ்ம*** ***அமலம் ப்ருஹ்ம*** ***ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ***

என்கிறது தைத்ரீய உபநிஷத் வரி.

***ஸத்யம்*** (மாறுதலற்றது) ***ஞானம்*** (அறிவு கொண்டது), ***அனந்தம்*** (அனைத்திலும் வ்யாபித்திருப்பது), ***ஆனந்தம்*** (இன்பமயமானது), ***அமலம்*** (குற்றமற்றது) மற்றும் ***ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ*** பெரிய பிராட்டியை பத்நியாக உடையவன் - பகவத் இலக்கணம்.

# இங்கு கூறப்பட்ட இருவிதத் த்யானங்களும் மிகச் சிறந்தது எதுவெனில் அழகான திவ்யமங்கள விக்ரஹத்தோடு அனந்த கல்யாண குணங்களோடு த்யானிப்பது. இது, சுபாச்ரய ப்ருஹ்ம த்யானம் எனப்படும்.

***சுபாஸ்ரயத்வம்*** என்பதாவது, ***சுபம்*** என்பதும் மற்றும் ***ஆஸ்ரயத்வம்*** என்பதும்

அதாவது ***சுபமாவது*** மங்களகரமானது, அதாவது பாபத்தை போக்க வல்லது.

***ஆஸ்ரயய்யத்வமாவது*** தியானிக்க இனிமையான திருவுருவம்.

எந்த உருவத்தைச் த்யானிக்கும் போது, த்யானிப்பவர்களின் மனமானது மோஹம் முதலிய தோஷங்களால் வரும் கலக்கமின்றித் தெளிவு பெறுமோ, அத்தகையதும் தனக்கு மேற்பட்ட ஒன்று இல்லாததும் ஆகிய ஸ்ரீமந் நாராயணனின் திருவுருவமே சுபாஸ்ரயம் எனப்படும்.

ஆக, பகவத் சிந்தனம், அர்ச்சாரவதார சேவை, அனைத்தும் ***மோக்ஷ உபாய விரோதியான பாபங்கள் களைய பரம்பரையாக மோக்ஷ ஸாதனம்*** - பக்தி ப்ரபத்தியே மோக்ஷ ஸாதனம் : இதனை, அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில்,

***பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே I ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி:***

என்று சொல்லப் படுகிறது ; அதாவது, ஸ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளபடி பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் பக்தி யோகத்தை செய்தாவது அல்லது சரணாகதியை செய்தாவது என்னை அடைய வேண்டும். இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது.

4. ஸ்ரீ ஆளவந்தாரின் சதுஸ்லோகி :

*சாந்தானந்த மஹாவிபூதி பரமம் யத்ப்ரஹ்ம ரூபம் ஹரே: மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம் யாந்யந்யானி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாநி ஆஹுஸ்வை: அநுரூப ரூப விபவை: காடோப கூடாநி தே**"**

அதாவது, பெரிய பிராட்டியின் பகவத் சம்பந்த தன்மை விளக்கப் படுகிறது ; சித் அசித் விசிஷ்ட மூர்த்த ப்ருஹ்மமான பகவானுடைய எல்லா நிலைகளிலும் பிராட்டியின் சேர்த்தி சொல்லப்பட்டது ; பகவானுடைய எல்லா வகையான உருவங்களிலும் பிராட்டி சம்பந்தம் உண்டென்பது இதில் பேசப்படுகிறது.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

1.2.2023
புதன் கிழமை

***க்ரந்த வரிகளில் பூர்வக்ஷ நிரசன பூர்வகமான ஸித்தாந்த ஸ்தாபனம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1.. பகவத் ராமாநுஜர் 1017ம் ஆண்டு சித்திரை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். 120 திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளியிருந்து, ***லக்ஷ்மி நாத ஸமாரம்பாம்*** என்று பகவானிடமிருந்து தொடங்கிய ஸித்தாந்தத்தை புநஸ்தாபனம் செய்தவர்.

***ஆரண நூல் வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்கு ஓர் வாரணமாயவர் வாதக்கதலிகள் மாய்த்த பிரான் ஏரணி கீர்த்தி ராமாநுஜமுனி இன்னுரைசேர் சீரணி சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே***

என்கிறார் ஸ்வாமி தேசிகன் குருபரம்பராஸாரத்தில் ; அதாவது, வேத வரிகளுக்கு குதர்க்கமாக அர்த்தம் கற்பித்தவர்களை ஸத் தர்க்கம் கொண்டு, வலிமை உடைய ஒரு யானை காட்டை அழிப்பது போல, வாத வலிமையால் நிரஸித்தவர் எம்பெருமானார் ; ஆக, பகவத் ராமாநுஜருக்கு ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை, ***பர மத நிரசனம் செய்து*** நிலை நாட்டிய பெருமை சேரும்.

பரமத நிரசன பூர்வகமாக ஸித்தாந்தத்தை நிலை நாட்டிய ஸத் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர் ஸ்ரீ ராமாநுஜர் :

***பர தத்வம்*** (ஸ்ரீமந் நாராயணனே) - வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது, ***அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி*** எனக் கூறி, பிராட்டியின் தன்மை எம்பெருமானைப் போன்றதே என்கிறார். ஆக, ஸ்ரீ விசிஷ்டனான எம்பெருமானே பரம்பொருள் என்பது ஸித்தாந்தம்.

***பரம ஹிதம்*** (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம்) - ***நாந்யப்பந்தா அயனாய வித்யதே*** என்கிற தைத்ரீய உபநிஷத், ப்ருஹ்ம வித்யையைத் தவிர (மோக்ஷ உபாயமான உபாஸநம் மற்றும் ப்ரபத்தி

அநுஷ்டானம் தவிர) மோக்ஷத்திற்கு வேறு ஒரு வழி கிடையாது என்கிறது. ஆக, ஸாத்யோபாயம் அநுஷ்டேயம் என்பது ஸித்தாந்தம்.

*பரம புருஷார்த்தம்* (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) - *மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே* என்கிற பகவத் கீதை வரியாவது, மோக்ஷ பலனாக என்னையே அடைகிறவர்கள் மட்டுமே மறு பிறவியை பெற மாட்டார்கள்' ; ஆக, சதுர்வித புருஷார்த்தங்களில் நித்யமானதுவும் ஸ்ரேஷ்டமானதுவும் மோக்ஷம் என்பது ஸித்தாந்தம்.

2. உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளின *ப்ருஹ்ம ஸூத்ரமும்*, அதற்கு விளக்கமாக அருளப்பட்ட ஸ்ரீ ராமானுஜரின் *ஸ்ரீ பாஷ்யமும்* பரமத நிரசன பூர்வகமாக ஸித்தாந்த ஸ்தாபனம் செய்யப்பட்டதாகவே விளக்குகிறது.

# இந்த *ப்ருஹ்ம ஸூத்ரம்* விளக்கமான *ஸ்ரீ பாஷ்யம்* 4 அத்யாயங்களாக பிரிக்கப் பட்டுள்ளது:

*ஸமன்வயாத்யாயம்* - காரணத்வம் - ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா) உலக படைப்பிற்கு காரணமாய் இருத்தல்.

*அவிரோதாத்யாயம்* - அபாத்யத்வம் - அவனது ஏற்றத்தை மறுக்க முடியாமை.

*சாதனாத்யாயம்* - உபாயத்வம் - மோக்ஷத்தை அடைய ஸாத்யோபாயம் அவசியமே.

*பலாத்யாயம்* - உபேயித்வம் - பிறவிப் பிணியிலிருந்து விடுபட்ட ஜீவர்கள் அடையும் துக்கமற்ற இன்ப நிலையைப் பற்றிய விளக்கம்.

# ஆக, ஸ்ரீ ராமனுஜர் அருளிய *ஸ்ரீ பாஷ்யம்* (உபநிஷத் சாரமான வேதவ்யாஸரின் ப்ருஹ்ம ஸூத்ர விளக்கம்) ; இந்த *ப்ருஹ்ம ஸூத்ரம்* 4 அத்யாயங்களாக பிரிக்கப் பட்டுள்ளது: ஒவ்வொரு அத்யாயத்திலும் நான்கு பாதங்கள். மொத்தம் 16 பாதங்கள்.

ஒவ்வொரு பாதத்திலும் பல அதிகரணங்கள் (மொத்தம் 156 அதிகரணங்கள்); அதில் பல ஸூத்ரங்கள் ( மொத்தம் 545 ஸூத்ரங்கள்).

ஒவ்வொரு அதிகரணமும் 5 அங்கங்களைக் கொண்டது:

*விஷயம்* - இது சம்பந்தமான உபநிஷத் வரிகள்

*சம்சயம்* - அந்த உபநிஷத் வரிகளில் ஏற்படும் சந்தேகங்கள்

*பூர்வபக்ஷம்* - உபநிஷத் சொல்லும் பொருளுக்கு மாறான அர்த்தத்தை தரக் கூடிய இதர மதங்களின் பக்ஷங்கள்

*ஸித்தாந்தம்* - இதர மதங்களின் பக்ஷங்களைக் கண்டித்து அருளப்படும் உபநிஷத்தின் உண்மைப் பொருள்

*ப்ரயோஜனம்* - இந்த விஷயத்தின் உபயோகம்

ஆக, *பரமத நிரசன* பூர்வகமாக , ஸ்ரீராமானுஜரால் அருளப்பட்டது இக்கரந்தம்.

அப்போது இருந்த கால கட்டத்தில் வைதீக மதங்களுக்குள் அத்வைத, த்வைத, விஸிஷ்டாத்வைத மதங்களே ப்ரஸித்தி பெற்றவைகளாக திகழ்ந்தன. வைதீக மத ஸ்தாபனர்கள் அனைவரும் ப்ருஹ்ம விசாரத்தில் உபநிஷத் பாகத்தையும், வேத வ்யாசர் அருளின சாரீரக சாஸ்த்ர பாகத்தையுமே(ப்ருஹ்ம ஸூத்ரத்தையுமே) முக்கிய ப்ரமாணமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அதில் உள்ள ஆபாதப்ரதீதியால்

தோற்றுகின்ற முரண்பாடுகள் நீங்க, அதில் உள்ள ***பேத***, ***அபேத*** ஸ்ருதிகளில் வெளிப்படையாக தெரிய வரும் வேற்றுமைகளை ***கடக*** ஸ்ருதியால் நிவ்ருத்தி செய்து ***இதி ஸர்வம் ஸமஞ்சஸம்*** என்று ஸ்ரீபாஷ்யக்காரருடைய ஸ்ரீபாஷ்யத்தில் மட்டுமே நிறைவு செய்யப் பெற்றது. இதனால் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை மட்டுமே வ்யாஸ ஸித்தாந்தம் என்றும் அழைப்பதுண்டு. ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தில், இதர வைதீக மற்றும் அவைதீக மதங்களையும் பகவத் ராமாநுஜர், ப்ரமாணங்களைக் கொண்டு நிரசித்து ஸித்தாந்த ஸ்தாபனம் செய்துள்ளார்.

3. ஸ்வாமி தேசிகன் 1268ம் ஆண்டு புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். 101 திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளியிருந்து, ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை புநஸ்தாபனம் செய்வித்தவர். இதற்கு ப்ரதான காரணம் ஒன்று உண்டு :

# ஸ்ரீபாஷ்யக்காரரால் இவ்வளவு தெளிவு பட சாஸ்த்திர அர்த்தங்களை அருளிய போதும், ஆபாதப்ரதீதியைக் கொண்டும், சில ஆழ்வார் பாசுரங்களையும், பாஷ்யக்காரருடைய ஸ்ரீஸுக்திகளையும் கையாண்டு அதற்கு சிகரம் போல் சில இடை செருகலையும், பொருந்தாத வேறு சில லௌகீக த்ருஷ்டாந்தத்தையும் மேற் கோள் காட்டி அவர் காலத்திற்கு பிறகு பரம ப்ராமாணிகமான ராமாநுஜ மார்கத்தை திசை திருப்ப முயற்சித்தனர் சிலர். மேலும், சாஸ்த்ரங்களுக்கு ஒவ்வாத விஷயங்களை, ஸ்ரீபாஷ்யக்காரருடைய ஸ்ரீஸுக்திகளை கைவிட்டும், வியாக்யானம் செய்து வந்தனர் சிலர்.

# இந்த பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை, அவர் நேரடி சிஷ்ய பரம்பரையடியாக (முறையே மடைப்பள்ளி ஆச்சான், கிடாம்பி ராமாநுஜாச்சார், கிடாம்பி ரங்கராஜாச்சார், கிடாம்பி அப்புள்ளார் வழியாக) பிழையற காலக்ஷேபம் செய்து க்ரஹித்தவர் ஸ்வாமி தேசிகன் ; அதனால், ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை புநஸ்தாபனம் செய்வித்த பெருமை ஸ்வாமி தேசிகனைச் சாரும்.

4. அந்த ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களில், ஸாத்யோபாய அநுஷ்டான பரமாண சாஸ்த்ரீய விளக்கங்களை கை விட்டு, நடத்திய, துர்வாதங்களை நிரஸித்து, ஸ்ரீராமானுஜ தர்சனத்தை நிலை நாட்டிய பெருமை, ஸ்வாமி தேசிகனைச் சேரும்.

உபநிஷத்தில், ஸர்வ சுதந்திரனான பகவானுடைய செயலை, வர்ணிக்கிறது. அதாவது,

***நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்***

என்கிறது கடோபநிஷத்.

அதாவது, இந்தப் பரம்பொருளை வேதங்களின் மூலமோ, பக்தி யோகம் மூலமோ, அவனைப் பற்றியே கேட்டுக் கொண்டிருப்பதன் மூலமோ அடைய இயலாது; அந்தப் பரம்பொருள் எந்த ஒருவன் தன்னை அடையத்தக்கவன் என்று தேர்ந்தெடுக்கிறானோ அந்த ஒருவனுக்கு மட்டுமே தன்னை உணர்த்துகிறான் என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

இதை ப்ரமாணமாகக் கொண்டு, ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கர்ம யோக ஞான யோக பக்தி யோகத்தை ஸ்வரூபேண த்யாஜ்யம் என்பர்.

ஆனால், ***ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:***

என்கிறது ப்ருஹதாரண்யக உபநிஷத்.

அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ஆக, இரண்டு உபநிஷத் வரிகளுக்குள் முரண்பாடு இருப்பதாக ஒரு தோற்றம் உண்டாகிறது. உபநிஷத் வரிகளில், ஒன்றை ஏற்று ஒன்றை விடுவது முறையாகாது. அது சாஸ்த்திரத்தை மீறிய செயலாகும்.

அதற்கு ஸ்ரீராமானுஜர் அருளிய விளக்கத்தை கவனித்தால், சாஸ்த்திர விரோதம் இல்லாமல், முரண்பாடு கூடியதாக தோற்றமுள்ள வரிகளை எவ்வாறு விளக்கமளிக்க வேண்டுமென புலப்படும்.

ஸ்ரீ பாஷ்யத்தில் இவ்விரண்டு உபநிஷத் வாக்யங்களும் முரண் படாதபடி, உபநிஷத் விஷயங்களை ஆராய்ந்து, கீழ் உள்ளவாறு, அருளிச் செய்தார் ஸ்ரீ ராமானுஜர்:

*__ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி__*

அதாவது,

தன் பக்கல் அன்புடன் பக்தி யோகம் செய்பவர்கள் இந்தப் பரம்பொருளை அடைய முடியும் என்று பிரகதாரண்யக உபநிஷத் விஷயத்தையும்,

தன் பக்கல் அன்பு இல்லாதவர்கள் இந்தப் பரம்பொருளை பக்தி யோகத்தால் அடைய முடியாது என்று கட உபநிஷத் விஷயத்தையும்,

ஒன்று படுத்தி கூறி அருளினார் ஸ்ரீ ராமானுஜர்.

ஆக, பக்தி யோகம் செய்யத் தகாதது என்கிற பக்ஷம், ஸ்ரீ ராமானுஜ க்ரந்தங்களோடு விரோதிக்கும்.

5. காலப் போக்கில், ஸ்வாமி தேசிக வழி வந்த சில ஸம்ப்ரதாய மஹநீயர்கள், க்யாதி லாப பூஜா அபேக்ஷகர்களான படியால், ஸ்வாமி தேசிகன் வரிகளை வேத விரோதமாக, ஸ்ரீ ராமாநுஜ க்ரந்த விரோதமாக, ஸ்வாமி தேசிக க்ரந்த விரோதமாக பாமரர்களை வஞ்சிக்கும் வகையிலும் ஸாஹஸமாக விளக்க முயற்சிக்கின்றனர் :

# ஸ்வாமி தேசிகன், ***சிஷ்ய க்ருத்யாதிகாரத்தில்*** சிஷ்யர்கள், கவனமாக இருக்க வேண்டியதை அருள்கிறார்:

***பண்டிதை: அர்த்த கார்பண்யாத் பண்ய ஸ்த்ரீபிரவ ஸ்வயம்; ஆத்மா ஸம்ஸ்க்ருத்ய ஸம்ஸ்க்ருத்ய பரோபகாரணீக்ருத:***

அதாவது,

விலை மாதர்கள் தங்கள் அழகை பெருக்கிக் கொண்டு பிறருக்கு பயன்பட்டு லாபத்தை அடைவது போல், சில பண்டிதர்கள் தன் ஞானத்தை வ்யாபாரமாக்க முற்படுவர்.ஆக, தன் பாண்டித்யத்தை விலை பேசி, உலக போக்கை அனுசரித்து, ஸம்ப்ரதாய பூர்வர்களின் வழி மறந்து விளக்கம் அளிப்பதாகிய குற்றம் புரியும் பண்டிதர்களை கை விடுவது ஏற்றது.

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், தனது க்ரந்தமான, ***ஸ்ரீஸம்ப்ரதாய பரிசுத்தியில்***

***ஸ்ரீபாஷ்யகார்ருடைய சிஷ்ய ஸம்ப்தாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதம் இல்லை. வாக்ய யோஜநா பேதமே உள்ளது***

என அருளினார். இதைக் கொண்டு இரு கலை பேதத்தை, இல்லாததாக ஆக்கினார் ஸ்வாமி தேசிகன் என்று, ஸம்ப்ரதாய நவீன பாகவதர்களால், சொல்லப் படுகிறது. அதாவது, ஸாத்யோபாய அநுஷ்டானத்தை ஸ்வரூப விருத்தம் என்னும் பக்ஷத்தையும், வேத மார்க்கமான, பகவத் ராமானுஜ ஸித்தாந்தமான, ஸ்வாமி தேசிக க்ரந்த விளக்கமான ஸாத்யோபாயம் அநுஷ்டேயம் என்கிற பக்ஷத்தையும் அர்த்த வேறுபாடு

அற்றதாக விளக்கும் பாங்கு, *ஸம்ப்ரதாய குத்ருஷ்டி பக்ஷ ப்ரவேசம்* என்பதில் சம்சயமில்லை, ஏனெனில் வாக்ய யோஜநா பேத விஷயத்தை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்திலே விவரித்துள்ளார்.

# ஸ்ரீபாஷ்யகார காலக்ஷேப காலத்தில் *சரமஸ்லோக விவாதம்* ஏற்பட்டது; அதில், ஸ்ரீ ராமானுஜரின் கருத்துக்கு மாற்றம் அல்லாமல், எந்த பதங்கள், சில விஷயங்களை விளக்க வந்தது, என்கிற விவாதம், அவருடைய சிஷ்யர்களுக்குள் ஏற்பட்டது ; அதாவது, சரணாகதி அனுஷ்டானத்திற்கு *அதிகாரம்* மற்றும் *தர்மாந்தர நைரபேக்ஷ்யம்* (வேறொரு செயலையும் எதிர்பார்க்காது) , என்பதை விவரிக்கும் சரமஸ்லோக பதம் பற்றியது.

சிலர், *ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய* என்னுமிடத்தில் *அதிகாரம்* ஸித்திக்கிறது என்றும் *ஏக* சப்தத்தில் *தர்மாந்தர நைரபேக்ஷ்யம்* ஸித்திக்கிறது என்றும் கூறினார்கள்.

மற்றும் சிலர், *ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய* என்னுமிடத்தில் *தர்மாந்தர நைரபேக்ஷ்யம்* ஸித்திக்கிறது என்றும், *மாசுச:* என்னும் இடத்தில் *அதிகாரம்* ஸித்திக்கிறது என்றும் கூறினார்கள்.

இதில் அர்த்த விரோதமில்லை (கருத்து வேற்றுமை இல்லை) ; வாக்ய யோஜநா பேதம் (பதங்களில் த்வநிக்கும் அர்த்த விசேஷங்களில் வேறுபாடுகள்) மட்டுமே இருந்தன என்பதில் தாத்பர்யம்.

# இதை ஸ்வாமி தேசிகன் *சரமஸ்லோகாதிகாரத்தில்* காரிகைகளைக் கொண்டு விளக்கியுள்ளார்.

***இத்தம் அர்த்தம் அவிஷேஷபி யோஜநா பேத மாத்ரத: ப்ராசாம் விவாத: ஸவ்ருத: பாஷ்யகாரை: அவாரித:***

அதாவது, இவ்வாறு *அர்த்தத்தில் வேறுபாடு இல்லாத* போது, வேண்டிய அர்த்தத்தை எந்தந்த பதங்கள் கூறும் என்கிற *யோஜனையில் வேறுபாடு மாத்திரத்தால்* , பூர்வர்களுக்குள் விவாதம் ஏற்பட்டது; ஆகையால் ஸ்ரீபாஷ்யகாரர் அந்த விவாதத்தை தடுக்கவில்லை.

# அர்த்த பேதம் உண்டானால், அது ஸம்ப்ரதாய விரோதமாகும், என மேலும் சரமஸ்லோகாதிகாரத்தில் ஸ்வாமி தேசிகன் விளக்கினார்.

***அக்ஞாத பூர்வ வ்ருத்தாந்தை: யத் தத்ர ஆரோபிதம் பரை: தத்து ஸ்ரீவிஷ்ணுசித்தாத்யை: நிர்மூலம் இதி தர்ஷிதம்***

அதாவது, முந்தின வரலாற்றை அறியாத மற்றவர்களால், சரமஸ்லோகத்தில் *ஸாத்யோபாய த்யாகத்தை ஆரோபித்து* (அதாவது ஸாத்யோபாயம் ஸ்வரூப விருத்தம் போன்ற கூற்று) சொல்வது ஆதாரமற்றது அன்றோ! இது எங்களாழ்வான் போன்ற பல ஆசார்யர்களால் விளக்கிக் காட்டப் பட்டுவிட்டது.

6. ஆக, முன்னோர்கள் வழி மீறாத க்ரந்தங்களை, ஸ்வாமி நம்மாழ்வார், ஸ்ரீமந் நாதமுனி, ஸ்ரீ யாமுன முனி மற்றும் ஸ்ரீ ராமாநுஜ முனி ஆகியோர் விசதமாக பர பக்ஷ நிரசன பூர்வகமாக, ப்ரமாண பலத்தினால், நிர்தேசம் பண்ணி, பர தத்வம், பரம ஹிதம், பரம புருஷார்த்தம் ஆகியவற்றை அருளின போதும், ஸித்தாந்த பூர்வ பக்ஷிகளால் விபரீதம் உண்டான போது, ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம், விரோத பரிஹாரம், நிக்ஷேபரக்ஷை போன்ற பல க்ரந்தங்களிலும் ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பூர்வ பக்ஷ வாத நிரஸன பூர்வமான ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஸ்தாபனம் செய்தருளியதை நினைவில் கொள்ள வேணும் ;

அதாவது, *ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் பக்ஷம்* :

*பர தத்வம்* (ஸ்ரீமந் நாராயணனே) - முமுக்ஷூபடி க்ரந்தத்தில், *இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஸ்வரன் திருவடிகளை உபாயமாக் பற்றுகிறது ; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையையிரக்கிறது* (எண் - 122 ) எனப் படுகிறது ; த்வய மந்திரத்தில் முன் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டிக்கு ஸித்தோபாயம் கிடையாது என உரைத்து, பின் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில்,

பிராட்டியோடு சேர்ந்த ஈஸ்வரனுக்கு ஸித்தோபேயம் உள்ளதாகக் கூறி, பிராட்டியின் ஈஸ்வரத்வத்தை நிஷேதிக்கின்றனர்.

*பரம ஹிதம்* (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அனுஷ்டானம்) - வசன பூஷண க்ரந்தத்தில் ***ஸ்வ யத்ன நிவ்ருத்தி பாரதந்த்ரிய பலம்; ஸ்வ ப்ரயோஜன நிவ்ருத்தி சேஷத்வ பலம்*** (எண் - 71 ) - ஆக, ஸாத்யோபாய அனுஷ்டானமன்றிக்கே ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம், எனப்படுகிறது.

*பரம புருஷார்த்தம்* (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) - கைவல்யம் என்கிற ஆத்மானுபவம் நித்யமென்றும் ஸர்வ கர்மங்களிலிருந்தும் விடுபட்டு பரமபதத்தை அடைந்து அங்கு தன்னை மட்டும் அனுபவிக்கிறதாகிற ஆத்மானுபவத்தை பெறுகிறான் என்று பூர்வபக்ஷிகள் சொல்லியிருக்கறார்கள் - ஸ்வாமி நம்மாழ்வார்,ஆத்மானுபவத்தை அருளியதாவது : ***குறுகா நீளா இறுதி கூடா எனையூழி, சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகா லின்றி மாயோ னுனக்கே யாளாகும், சிறுகா லத்தை யுறுமோ அந்தோ தெரியிலே?*** அதில், ***இறுதி கூடா*** என்று அருளியுள்ளார். ஆகையால், அதன் தாத்பர்யமான நிண்ட கால அனுபவம் என்பதனை உணராது, கைவல்ய ஆத்ம அனுபவ புருஷார்த்தமாவது, பரம பதத்தில், நித்யமானது என்பர்.

7. தற்போது, வேத மார்க்கமான, ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமான பல ஸ்ரீ தேசிக க்ரந்தகளுக்கும் விபரீத அர்த்தங்களை சொற்பொழிவுகளிலும், ஸம்ப்ரதாய பத்திரிகை கட்டுரைகளிலும் காண நேர்கிறது ; உதாரணமாக :

# *முனிவாஹனபோகம்* என்கிற ஸ்வாமி ஸ்ரீ தேசிகனின் க்ரந்தத்திற்கு விளக்கமாக தி ஹிந்து - தமிழ் திசையில், ஸ்ரீவேதாந்த தேசிகரின் 750 திருநக்ஷத்திரத்தையொட்டி வெளியான மலரில், விபரீத அர்த்த பதிவு செய்திருந்தது ஒரு சான்று.

# *ஸ்ரீஸுக்தி நிர்வாகம்* ஸ்ரீரங்கநாத பாதுகா இதழ்கள் ஆடி 2019 வரி :

***ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் அருளிய பரந்தபடி.....*அ* என்பதற்கு காப்பாற்றுபவன் எனும் அர்த்தம் ஆவதால், உபாயம் எனும் அர்த்தம் கிடைக்கிறது***

இதை பூர்வபக்ஷம் என்று பதிவிக்காத போது, இதனை ஸித்தாந்தமாக பலர் கொள்ள வழி வகுக்கும் ; அகாரத்தால் உபாயம் என்கிற அர்த்தம் ஸ்வாமி தேசிக வரிகளோடு முரணானது ; ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் *மூல மந்த்ராதிகாரத்தில்* உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

***இந்த ரக்ஷகத்வம் (அவ ரக்ஷணே) அவச்சேதகமில்லாமையாலே ஸர்வ விஷயம். ரக்ஷா ப்ரகாரங்கள் விஷயங்கள் தோறும் ப்ரமாணங்கள் காட்டினபடியிலே விசித்திரங்களாயிருக்கும்***

ஆக, நம் ஸித்தாந்தத்தில், நாராயண சப்தத்தில் 'அயந' பதத்தில் ஸித்தோபாயமும், நமஸ்ஸில் ஸாத்யோபாயமும் விளக்கப் படுகின்றன.

# சொற்பொழிவுகளிலும் குழப்பும் ஸாஹஸம், தற்போது பல உபந்யாஸகர்களிடம் உள்ளன ; தன் அந்திம தசையில், பகவத் ராமானுஜர் 74 ஸிம்ஹாஸநாதிபதிகளை *ஸ்ரீ ராமானுஜ ஸம்ப்ரதாய ஸ்தாபனத்திற்காக* நிறுவினார்.

அதில் ஒரு ஸ்ம்ப்ரதாயம், காலப் போக்கில், ஸ்ரீ பாஷ்ய க்ரந்த விரோதமாக அர்த்தங்களை கூறிக் கொண்டு, அதையும் *ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தமாக* ப்ரகடன படுத்திக் குழப்புகின்றனர். ஸ்வாமி தேசிகன், தனது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம், நிக்ஷேப ரக்ஷை போன்ற க்ரந்தங்களில் இந்த ஸித்தாந்த பூர்வபக்ஷிகளை தெளிவாக கண்டித்துள்ளார். இருப்பினும் ஸ்ரீ ராமானுஜ க்ரந்த விரோத பக்ஷங்களையும், ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமாக விளக்கி குழப்பத்திற்கு காரணமாகின்றனர், சில ப்ரவர்த்தகர்கள்.

# ஒரு சில ப்ரபலமான ப்ரவர்த்தகர்களால், ஸ்வாமி தேசிகனின் *ந்யாஸ தசகம்* என்னும் ஸ்தோத்திர க்ரந்தத்தைக் கொண்டு, அதல் உள்ள பல *ஸ்வ* சப்தத்தினால், ஸ்வாமி தேசிகன் ஸாத்யோபாயத்தை

வாள் கொண்டு அறுத்து எறிந்தார் என விபரீத விளக்கமளிப்பது, ஸ்வாமி தேசிகனின் வ்யாக்யானங்களுக்கு களங்கமாகிறது.

# இந்த நிலையில், ஒவ்வொரு ஸித்தாந்த க்ரந்த வரிகளையும் பூர்வபக்ஷ ஸித்தாந்த ரீதியாக விளக்க வேண்டுவதாகிறது ; பிற்காலத்தில் இளைய தலைமுறையினர், பாதை தவறி, ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாயத்தை தவறாக புரிந்து போகக் கூடாது என்பதாலும், இந்த ஸத் ஸம்ப்ரதாய ஒரு சில பாகவதர்கள், ஏதோ லௌகீக காரணம் கொண்டு, ஸ்வாமி தேசிகன் வழியை மாற்றக் கூடாது என்பதாலும், இம்மாதிரி சாஸ்த்ரீயமான கொள்கை தழுவிய பூர்வபக்ஷ ஸித்தாந்த ரீதியான பதிவுகள் இடம் பெற ப்ராப்தம். இங்கு, ஸத் ஸம்ப்ரதாய விரோத போக்கு விமர்சிக்கப் படுகிறதே அன்றி, இதில் வ்யக்தி தூஷணத்திற்கோ பர மத தூஷணத்திற்கோ வழி கூடாது.

8. ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகத்தில், பூர்வாசார்ய வழி மீறுவது ப்ரத்யவாயகரம் என்பது, ***சிஷ்யக்ருத்யாதிகார*** வரி விளக்குகிறது :

***குருவை ப்ரகாசிப்பிக்கா நிற்க செய்தே அவன் பண்ணின சாஸ்த்ரீய உபதேசத்திற்கு  விருத்தம் சொல்லுமாகில் விப்ரலம்பகம் பேருமாய்…என்கிறபடியே பாபிஷ்டனாம்***

விப்ரலம்பகமாவது, சிஷ்யர்களை வஞ்சிக்கும் தன்மையைக் குறிக்கும் ; இது ஆசார்யனுடைய பாபச் செயலாகும் என்கிறார் ஸ்வாமி தேசிகன் ; ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகமாவது, தனது பாண்டித்யத்தினால், அதாவது வ்யாகரண தர்க்க சாஸ்த்திர அறிவினால், உலக போக்கை அனுஸரித்து, பூர்வர்களின் வழியை சிதைப்பது,  இழிவானவன் செய்யும் செயலாக, ***ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில்*** ஸ்வாமி தேசிகன் நிந்திக்கிறார்.

***ஏகஸ்த்வ அபவர்கார்த்தம் அனுஷ்டானாது கௌஷலம்; லோக அனுஸாரஸ்த்வேகத்ர குரு: பஸ்சாது தீரித:***

அதாவது, முமுக்ஷுவின் க்ருத்யங்களைச் செய்து கொண்டு, உலக போக்கை அனுஸரித்து விஷய மாற்றம் செய்யும் பண்டிதனும் இழிவானவனே.

இப்படிப் பட்ட ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்கள், தங்கள் நிலைகளை மாற்றிக் கொண்டு, முன்னோர் வழி மீறாத ப்ரவர்த்தகத்தில் ஈடுபட்டால், ஸ்வாமி தேசிக க்ரந்தங்களுக்கும் பூர்வபக்ஷ ஸித்தாந்த விளக்கங்கள் தேவை அற்றதாகும்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

2.2.2023
வியாழன் கிழமை

***இந்த்ரிய நிக்ரஹம் உள்ளவனுக்கு மட்டுமே அநுஷ்டானங்கள் ப்ரயோஜநகரமாம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்***

1. குருக்ஷேத்ர யுத்த ஆரம்ப தினமன்று, தன் உறவினர்களோடு போரிடுவதைக் குறித்து கலங்கிய அர்ஜுனனுக்கு, ஸர்வேஸ்வரனான கண்ணன் நிவ்ருத்தி மார்க்கமான பக்தி யோகத்தை விளக்கலானான்.

*கார்பண்ய தோஷோ உபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸமூடசேதா:யத் ஸ்ரேய: ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந் மே சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்*

அதாவது, நான் தர்ம விஷயத்தில் குழம்பியவனாக உள்ளேன். (மதிப்பிற்குறிய உறவினர்களை கொல்வது தர்மமா?) ஸ்ரேயோ மார்க்த்தை (பரம புருஷார்த்த்தை) தெளிய விரும்புகிறேன். எனக்கு எது நன்மையானதென்று உன்னால் நிச்சயிக்க பட்டதோ, அதை உன் சிஷ்யனாய் உன்னை சரணமடைந்த எனக்கு, கூறி செயல் புரிய கட்டளையிட வேண்டும். கலங்கிய அர்ஜுனனால், இங்கு கேட்கப்பட்ட கேள்வி, தன் செயல், தர்ம வழி மீறாமல் இருக்க, என்னவாக வேண்டும் என்பதே!

***பக்தி யோகமாவது*** குறிப்பிட்டபடி ஆசனத்தில் அமர்ந்து மனதை கட்டு படுத்தி ஸதாசார்யன் உபதேசத்திற்கு ஏற்ப சாஸ்த்ரங்களில் உள்ள படி ஸர்வேஸ்வரனை குறிப்பிட்ட ப்ரகாரத்தில் த்யானிப்பது.

***பக்தி யோகத்திற்கு*** அங்கமாக ***கர்ம யோகம்*** மற்றும் ***ஞான யோகம்*** விதிக்க பட்டிருக்கின்றன.

***கர்ம யோகமாவது***, தபஸ், யக்ஞம், தானம், தேவார்ச்சனை, தீர்த்த யாத்திரை, வேத அத்ய்யனம் முதலானவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து பலனை பெறுமளவும் விடாமல் அனுஷ்டிப்பதாகும். கர்ம யோகத்தினால் புலன் அடக்கம் (இந்த்ரிய நிக்ரஹம்) ஏற்படுகிறது.

***தைவமேவாபரே யஜ்ஞம் யோகின: பர்யுபாஸதே ப்ருஹ்மாக்நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி***

அதன் பிறகு செய்யப்படும் ***ஞான யோகத்தினால்*** (உலக விஷயங்களிலிருந்து மனதை முற்றிலுமாக அகற்றி, ஆசார்யன் மூலமாக கற்ற ஆத்ம விவரங்களை கொண்டு, தன்னுடைய ஆத்ம சிந்தனத்தில் ஈடுபடுவதால்) தன்னுடைய ஆத்மாவை காண முடிகிறது, அதாவது, ***ஆத்ம ஸாக்ஷாத்காரம்*** (தன் ஆத்மாவை தரிசிக்க முடிகிற நிலை) பெற முடிகிறது;

***ஆத்ம ஸாக்ஷாத்காரம்*** பெற்றவன் தான் ***பகவத் ஸாக்ஷாத்காரத்தைப்*** பெற ***பக்தி யோகம்*** செய்ய முடியும்.

2. மோக்ஷ சாதனமான (அங்கியான) ***பக்தி யோகத்திற்கு*** ப்ரதான அங்கங்களாக ***கர்ம யோகம்*** மற்றும் ***ஞான யோகம்*** சாஸ்த்ரங்ளில் விதிக்க பட்டிருக்கின்றன.

# பக்தி யோகத்தின் அங்கமாக, கர்ம யோக தொடக்கமானது, வர்ண ஆஸ்ரம தர்மங்களை அங்கமாகக் கொண்டது ; உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (3ம் அத்யாயம் 4ம் பாதம் 8வது அதிகரணம் 33ம் ஸூத்ரம்)

***ஸஹகாரித்வேந ச***

அதாவது, வர்ணாஸ்ரம தர்மம் பக்தி யோகத்திற்கு அங்கம் ; அதாவது, கர்ம யோகம் தொடங்க வர்ண ஆஸ்ரம கர்மாக்களைச் செய்து போக வேண்டும் ; இந்த ஸூத்ரம் விஹிதத்வாதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு விளக்கப்படுவது, 'பக்தி யோகம் செய்பவன் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அதன் அங்கமாக கண்டிப்பாக அனுஷ்டிக்க வேண்டும்' என்பது.

# கர்ம யோகத்துக்கு அதிகாரம் - விசத ஞானமும் அனுஷ்டான சக்தியும் ; கர்ம யோகத்துக்கு பலன் - புலனடக்கம் ; ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில்

***நேஹாபி க்ரம நாஸ்தோதி ப்ரத்யவாயோ ந வித்யதே, ஸ்வல்ப்பம் அப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்*** (பகவத் கீதை 2-40)

என்று மோக்ஷத்திற்காக அனுஷ்டிக்கப் படும் பக்தி யோகத்திற்கு அங்கமான கர்ம யோகத்தை பாதியில் விடுபவனுக்கு, எந்த ஒரு கெடுதலும் விளையாது; மேலும் ஒரு காலத்தில், மோக்ஷ சாதனமான யோகத்தின் தொடர்ச்சி கை கூடும், என கண்ணன் அருளிகிறான்.

# ஆக, வர்ண ஆஸ்ரம தர்மங்களைச் செய்பவன் தான் கர்ம யோகத்தைத் தொடங்க முடியும் என்றும், கர்ம யோகத்தின் பலன் இந்த்ரிய நிக்ரஹம் என்றும் ப்ரமாணங்கள் அறுதியிடும் போது, இந்த்ரிய நிக்ரஹம் உள்ளவனுக்கு மட்டுமே வர்ண ஆஸ்ரம கர்ம அநுஷ்டானங்கள் ப்ரயோஜநகரமாம் என்பது முற்றிலும் அநுபபன்னம்.

3. சாஸ்த்திரத்தில் விளக்கப் பட்ட ***தேவ கடன்*** - ***ரிஷி கடன்*** மற்றும் ***பித்ரு கடன்*** பரிஹரியாதபோது, ப்ரத்யவாயம் உண்டென்று சாஸ்த்திரத்தினால் தெளியலாம் :

# ஶ்ரீ பாஷ்யகாரரும் தனது ***நித்யம்*** எனும் க்ரந்தத்தில் இதை அருளியுள்ளார்.

***தேவாந்ருஷீந் பித்ரூந் பகவத் ஆத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்ய:***

அதாவது, தேவர்களையும் ரிஷிகளையும் பித்ருக்களையும் எம்பெருமானை அந்தர்யாமியாக உடையவராகவே எண்ணி அநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும் ; இதைத் தவிர்த்து, சாஸ்த்திர விதி இல்லாத கர்மங்களினால் மற்றபடி தேவதாந்தர சம்பந்தம் / சப்த ப்ரயோகம் கூடாது.

# நாம் வாழும் வாழ்க்கையில், தேவர்களாகிய சூர்யன், மழை (வருணன்), காற்று (வாயு) போன்ற தேவர்களுக்கு கடன் பட்டுள்ளோம்; ஏனெனில் அவர்களுடைய உதவியின்ற எந்த பயிரும் விளையாது; நமக்கு ஆகாரம் கிடைக்காது. அதுவே ***தேவ கடன்*** ; இவர்களின் கடனைத் தீர்க்க, ஸந்த்யாவந்தனத்தில் ***அர்க்கயம்*** விட்டு வணங்குகிறோம்; இது சாஸ்த்திர விதி.

அது போல, உலக துவக்கத்தில், சட்டம் ஒழங்கு ஆகியவற்றை வகுத்து கொடுத்தவர்கள், மந்வாதி ரிஷிகள்; அவர்களுக்கு நாம் கடன் பட்டுள்ளோம். அதுவே ***ரிஷி கடன்*** ; இவர்களின் கடனைத் தீர்க்க, ***வேத அத்யயனம்*** (வேதத்தை தினம் சொல்லுதல்) விதிக்கப் பட்டிருக்கிறது; இதுவும் சாஸ்த்திர விதி.

நமக்கு, நமது சரீரத்தை பரம்பரையாக முன்னோர்களால் அளிக்கப் பட்டது. நாம் அதனால் ***பித்ரு கடன்*** உள்ளவர்கள் ஆகிறோம் ; இந்த கடனைக் களைய ***பித்ரு கார்யங்களும்*** ***வம்ச வ்ருத்தியும்*** சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்டிருக்கின்றன.

# இந்த கடன்களை களைய செய்ய வேண்டிய செயல்களில் ப்ரதானம் ஸந்த்யாவந்தனம் ; தக்ஷ ஸ்ம்ருதியில்,

***ஸந்த்யா ஹீநோ அசுசிர் நித்யம் அநர்ஹ ஸர்வ கர்மஸூ. யத்யந்த குருதே கர்ம ந தஸ்ய பல பாக் பவேத்***

என சொல்லப் படுகிறது. அதாவது, சாஸ்த்திர விதிப்படி ஸந்த்யாவந்தனம் செய்யாமல் போனால், அவன் எந்த ஒரு வைதீக கர்மாக்களுக்கும் தகுதி அற்றவனாகிறான். அப்படி, அவன் மற்ற வைதீக கர்மாக்களை செய்யும் போது, ஸர்வேஸ்வரன் உகக்காத படியால், அதன் பலன்களை அடையாமலே இருக்கிறான்.

# வைதீக கர்மாக்களாவது:

***நித்ய கர்மாக்கள்*** : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள் (தினமும் செய்ய வேண்டுவபவை)

***நைமித்திக கர்மாக்கள்*** : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட விவாஹ, ஸீமந்த, க்ருஹப்ரவேஸ, ஏகாதசி விரதம், ஸ்ராத்தம், தர்ப்பணம் போன்றவைகள் (ஒரு காலத்தில் செய்ய வேண்டுவபவை)

*காம்ய கர்மாக்கள்* : கோவில் செல்லுதல், புண்ய நதியில் நீராட்டம், அன்ன தானம், ஞான சம்பாத்யம் போன்றவைகள் ( சமயம் கிடைக்கும் போது செய்யலாம்)

*நித்ய கர்மாக்கள்* மற்றும் *நைமித்திக கர்மாக்கள்* இரண்டும் பகவத் ஆணைகள். மீறுவதால் பகவத் தண்டனைக்கு ஆளாக நேரிடுகிறது, என்பது சாஸ்த்திர விளக்கம்.

# சாஸ்த்திரம் விதித்த செயல்கள், ஆக்ஞா அனுக்ஞா கைங்கர்யங்களாக இரு வகைகளாக உள்ளன :

***ஆக்ஞா அனுக்ஞா விபாகேன த்விதா சாஸ்த்ரீய பத்ததி நிக்ரஹ அனுதயா ஆத்யா பல தத்தத் ஆப்தயே***

அதாவது,

சாஸ்த்ரத்தில் விதித்த பகவத் கைங்கர்யம் இரு வகையாக சொல்லப் படுகிறது:

*ஆக்ஞா கைங்கர்யம்* (செய்தே போக வேண்டிய நித்ய நைமித்திக கர்மாக்கள்)

*அனுக்ஞா கைங்கர்யம்* (கோவிலுக்கு செல்லுதல், புனித நதியில் நீராட்டம் போன்றவை)

*ஆக்ஞா கைங்கர்யம்* செய்வதினால் மன ஸூத்தி, புலனடக்கம் போன்றவை ஏற்படுமே அன்றிக்கு ஒரு தனிப்பட்ட புண்யம் வந்து சேராது; அவைகளை செய்யாமல் போனால் பாபம் வந்து சேரும். தீங்கு விளையும்.

*அனுக்ஞா கைங்கர்யம்* செய்வதினால் புண்யம் வந்து சேரும்; அவைகளை செய்யாமல் போனால் பாபம் வந்து சேராது.

ஆக, நித்ய நைமித்திக கர்மாக்கள் சாஸ்த்ரப்படி செய்ய வேண்டுபவன; அவைகளை, அறியாமையாலோ அல்லது உடல் ஸ்ரமம் காரணத்தினால் செய்யாமல் தவிர்ப்பதோ சாஸ்த்ரத்தை மீறிய செயலாகும் என்று தெளிவுபட விளக்கியுள்ளான் கண்ணன் பகவத் கீதையில்.

# 18ம் அத்யாயம் 7 வது ஸ்லோகம் -

***நியதஸ்ய து ஸன்யாஸ: கர்மணா நோப பத்யதே. மோஹாதஸ்ய பரித்யாக தாமஸ: பரிகீர்த்தித:***

அதாவது,

‘அறியாமையால் சாஸ்த்திரம் விதித்த கர்மாவை த்யாகம் செய்வது தாமஸ த்யாகமாகும்’ - என்கிறான் கண்ணன்.

# 18ம் அத்யாயம் 8 வது ஸ்லோகம் -

***துக்கமித்யேவ யத் கர்ம காயக்லேஷ பயா த்யஜேத். ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாக பலம் லபேத்***

அதாவது,

‘உடல் ஸ்ரமம் அல்லது பண செலவினால் கர்மாவை த்யாகம் செய்வது ராஜஸ த்யாகமாகும். அதனால் த்யாகத்தின் பலன் கிடைக்காது.’ - என்கிறான் கண்ணன்.

# இந்த்ரிய நிக்ரஹம் உள்ளவளுக்கு மட்டுமே வர்ண ஆஸ்ரம கர்ம அநுஷ்டானங்கள் அநுஷ்டேயம் என்பது பஹுவித ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

4. இவ்விஷயத்தில், விஷ்ணு தர்ம ப்ரமாணங்கள் கூறுவதாவது :

*ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:*

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி,

வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன் – என்கிறான் ஸர்வேஸ்வரன் .

# பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தன் திருவாக்கினால் கூறப்பட்டது:

*அவிப்லவாய தர்மாணாம் பால நாய குலச்ய ச சங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாப நாய ச ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவ தேவஸ்ய சாரங்கிண மநீஷீ வைதிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்*

அதாவது, ‘தர்மங்கள் மாறாமல் இருக்கவும், குலங்களை காப்பாற்றவும், இந்த உலகை தூய்மையான வழியில் நிலையாக நிறுத்தவும் , சாஸ்த்ரங்களுக்கான மரியாதை என்றும் பாதுகாக்கவும், சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்டவைகளை மீறுவதற்கு மனதாலும் நினைக்கக் கூடாது. ஏன் எனில் உகந்து ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானின் மகிழ்ச்சிக்காக’ என்கிறாள் மஹாலக்ஷ்மி தாயார்.

# ஆக, சாஸ்த்திர விதியில், இந்த்ரிய நிக்ரஹம் உள்ளவளுக்கு மட்டுமே வர்ண ஆஸ்ரம அநுஷ்டானங்கள் ப்ரயோஜநகரமாம், என்பதற்கு ப்ரமாணமில்லை ; மாறாக, வர்ண ஆஸ்ரம விஹித கரமாக்களின் விஷயத்தில், பகவத் கீதையில் (16-24) கண்ணனின் உபதேசமாவது:

*தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி*

அதாவது, ‘இது செய்யத் தக்கது’ மற்றும் ‘இது செய்யத் தகாதது’ என்ற முடிவை எடுப்பதற்கு சாஸ்த்ரமே ப்ரமாணம்.

# இதையே, உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, ‘ப்ருஹ்ம ஸூத்ரம்’ (3ம் அத்யாயம் 4ம் பாதம் 8வது அதிகரணம் 32ம் ஸூத்ரம்)

*விஹிதத்வாத் ச ஆஸ்ரம கர்மாபி*

வலியுறுத்துகிறது. அதாவது, பக்தி யோகத்தை அனுஷ்டிக்காதவனும் ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டும், என விதிக்கப் பட்டிருக்கறது. எக்காரணத்தினாலும் வர்ண ஆஸ்ரம தர்மங்களை கை விடலாகாது என்பது ப்ரமாண ஸித்தம்.

# மேலும் வர்ண ஆஸ்ரம தர்மத்தினால், பாபங்கள் களையப் பட்டு ரஜோ தமோ குண கார்யமான விஷயங்களில் ஈடுபாடு குறையும் ; புலனடக்கம் உண்டாகும் ; தர்ம சாஸ்த்திர ப்ரமாண வாக்யமானது,

*தர்மேண பாபம் அபநுததி*

என்று தர்ம அனுஷ்டானத்தாலே பாபத்தைப் போக்குவான், என்கிறது ; ஆக, விதிக்கப் பட்ட கர்மாக்களை, வர்ண ஆஸ்ரம தர்மங்களுக்கு ஏற்ப அனுஷ்டிப்பதில், ஆத்ம ஞான சம்பாத்யத்திற்கு விரோதியான பாபங்கள் விலகுகிறது, என்றபடி.

# வர்ண ஆஸ்ரம தர்மத்தின் கர்மாக்கள் முக்கியம் என்று விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதை (18-45) ஸ்லோகத்தில்.

***ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ஸ்வ கர்ம நிரத: ஸித்திம் யதா விந்த்தி தச்ருணு***

அதாவது, தன் தன் வர்ணத்துக்கான செயல்களில் ஈடுபட்டவன் மோக்ஷ ருசி உண்டாகி கால க்ரமேண பரம பலனை அடைகிறான். அந்த வழியை சொல்கிறேன் கேள்' - என்கிறான் கண்ணன்.

ஆக, புலனடக்கமே வர்ண ஆஸ்ரம தர்ம அநுஷ்டானத்துக்கு அதிகாரம் என்பது ஸகல ப்ரமாண விரோதம் ; மாறாக, சாஸ்த்திரம் விதித்த கர்மாக்களை அநுஷ்டிக்கும் போது ஸத்வ குணம் மேலோங்குகிறது. காலக் க்ரமேண நற் பண்புகள் உண்டாகின்றன.

5. ஐந்தாவது வேதமாக போற்ளப்படும் மஹாபாரத வரிகளைக் கொண்டு கலியுகத்தில் வைதீக ஆசாரம் உள்ள நிலையை உணரலாம்:

***ஏக பாத ஸ்திதே தர்மே யத்ர க்வசன காமினி. கதம் வஸ்தவ்யம் அஸ்மாபி: பகவன்ஸ்த்வத் வதஸ்வந:***

என்று தேவர்களும் ரிஷிகளும் பகவானிடத்தில் ப்ரார்த்திக்கின்றனர்.

அதாவது, 'கலி யுகத்தில் தர்மம் ஒரே காலில் நின்று கொண்டிருக்கும் போது, நாங்கள் வசிக்க உகந்த இடம் எது என்பதை விவரிக்க வேண்டும்?'

# எம்பெருமான் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும், கலி யுகத்தில், வசிக்க உகந்த வாசஸ்தானத்தை, உரைக்கிறான்.

***குரவோ யத்ர பூஜ்யந்தே ஸாதுவ்ருத்தா: சமந்விதா: வஸ்தவ்யம் தத்ர யுஷ்மாபி: யத்ர தர்மோ ந ஹீயதே. யத்ர வேதாஸ்ச யக்ஞாஸ்ச தப: ஸத்யம் தமஸ்ததா. ஹிம்ஸா ச தர்ம ஸம்யுக்தா ப்ரசரேயு: ஸுரோத்தமா***

என்கிறான். இது, மஹாபாரத வரி.

அதாவது, 'முனிவர்களே! எந்த இடங்களில் நல்ல ஒழுக்கம் மற்றும் அடக்கம் ஆகியவற்றுடன் கூடிய ஆசார்யர்கள், இருப்பது மட்டுமின்றி, அவர்கள் மதிக்கப்படுகின்றனறோ, ***எந்த இடத்தில் கர்மா அனுஷ்டானம் குறைவற்றவைகளாக உள்ளதோ*** அங்கு சென்று வாழுங்கள்; வேதங்கள், யாகங்கள், தவங்கள், ஸத்யம், புலனடக்கம், தவறு செய்பவர்களை தண்டிக்கும் பொருட்டு தர்மத்தை அடியொற்றிய ஹிம்ஸை ஆகியவை எங்கு உள்ளனவோ அந்த இடங்களே உங்களுக்கு ஏற்ற இடமாகும்; அங்கே உங்களிடம் அதர்மம் காலடி வைக்காது' என்கிறான் ஸர்வேஸ்வரன்.

# வர்ண ஆஸ்ரம தர்மத்தின் கர்மாக்கள் முக்கியம் என்று விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதை (18-45) ஸ்லோகத்தில்.

***ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ஸ்வ கர்ம நிரத: ஸித்திம் யதா விந்த்தி தச்ருணு***

அதாவது, தன் தன் வர்ணத்துக்கான செயல்களில் ஈடுபட்டவன் மோக்ஷ ருசி உண்டாகி கால க்ரமேண பரம பலனை அடைகிறான். அந்த வழியை சொல்கிறேன் கேள்' - என்கிறான் கண்ணன்.

# ஆக, வர்ண ஆஸ்ரம விதி மீறுவது ப்ரத்யவாயகரம் என்பதாகிறது.

6. மோக்ஷ உபாயமாக, அகிஞ்சனனுக்கு ப்ரபத்தி அநுஷ்டானம் விதிக்கப் பட்டிருக்கிறது ; ***தர்மாந்தர நைரபேக்ஷ்யத்தை*** (மோக்ஷ பலனிற்காக, சரணாகதனிடம் ஐந்து அங்கங்களோடு கூடிய அங்கியைத் தவிர வேறோரு செயலையும் எதிர் பாராதது) என்பதனை ***ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய*** என்கிற கண்ணன் வாக்கு தெளிவிக்கிறது. ஆக, இந்த்ரிய நிக்ரஹம் உள்ளவளுக்கு மட்டுமே ப்ரபத்தி அநுஷ்டானம் ஸித்திக்கும் என்பதற்கும் ப்ரமாணமில்லை ; மாறாக,

# ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

*யகுயோ நிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா*

என்கிறது, அதாவது

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவனாயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அனுஷ்டித்தானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன், அவனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமளிக்கிறான்.

# சரணாகதி அதிகார விஷயத்தை, திருமழிசை ஆழ்வார் பாசுரம் கொண்டும், திருச்சந்தவ்ருத்தத்தில், தெளியலாம்.

*குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன், நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன், புலன்கள் ஐந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித, நின்- இலங்கு பாதம் அன்றி மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே!*

என அருளினார்.

அதாவது உயர் ஜாதி என்னிடமில்லை, ஞானம் பூரணமாக இல்லை, புலனடக்கம் இல்லை, ஆகையால் ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அனுஷ்டிக்கிறேன், என அருளுகிறார்.

ஆக, சரணாகதி அனைவருக்கும் மோக்ஷ ஸாதனம் என்பதாகிறது.

# விபீஷண சரணாகதியை ஏற்றுக் கொள்ள சுக்ரீவாதிகளிடம் விவாதிக்கும் போது, ஶ்ரீராமனின் கருத்து,

*மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதௌ*

என்றிருந்தது;  அதாவது, ‘தோழனாக ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்’ என்கிறான்.

# அதனால், இந்த்ரிய நிக்ரஹம் உள்ளவளுக்கு மட்டுமே ப்ரபத்தி அநுஷ்டானம் என்பது முற்றிலும் அநுபபன்னம் ஏனெனில், ச்வேதாசுதர உபநிஷத்தில்,

*ஸர்வேந்த்ரிய குணாபாஸாம்  ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபுமீசானாம் ஸர்வஸ்தம் சரணம் ஸுக்ருத்*

என்கிறது, அதாவது கருணைமிக்க ஸர்வேஸ்வரன் அனைவராலும் சரணம் புக ஏற்றவனாக உள்ளான்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

3.2.2023
வெள்ளி கிழமை

*ஸர்வம் ப்ருஹ்மாத்மக ஞானம் - பரக்ஞானம் - யோகம் லுப்தம் - விளக்கம் - கேள்வி பதில் விஷயம்*

1. சம்சாரி ஜீவர்கள் துக்கமயமான ப்ரக்ருதி பரிணாமமான சரீரத்தோடு அவதியுறுகிறார்கள் :

# பராசர மஹரிஷி, ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் அருளியதாவது :

***அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் சம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸௌ வாசனா ரேணு குண்டிதஹ***

அதாவது,  பல ஜனமங்களாக இந்த சம்சாரத்தில் ஈடுபாடு வளர்ந்திருப்தால், மோஹம் ஸ்ரமம் என்கிற புழுதியாகிற வாசனையில் அமிழ்ந்து, உண்மை ஞானத்தை இழந்து இருக்கிறான் இந்த சம்சாரி ஜீவன், என்கிறார் பராசர மஹரிஷி.

# அனைத்து ப்ராக்ருத பலன்களிலும் ஏழு விதமான குற்றங்கள் இருப்பதாக சாஸ்த்ரங்களால் கூறப்படுகின்றன. அதாவது,

***அல்பத்வம்*** - ஸுகத்தின் அளவில் குறைவு

***அஸ்திரத்வம்*** - நிரந்தரம் அற்ற தன்மை கொண்ட ஸுகம்

***துக்க மூலத்வம்*** - அந்த ஸுகத்தை அடையும் முயற்சியில் உள்ள துக்கம்

***துக்க மிஸ்ரத்வம்*** - அநுபவிக்கும் போது துக்கம் கலந்த ஸுக ரூபமான பலன்

***துக்கோதர்கத்வம்*** - ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்

***விபரீத அபிமான மூலத்வம்*** - தன்னைப் பற்றிய உண்மையற்ற எண்ணங்கள்

***ஸ்வாபிக ஆனந்த விருத்வத்வம்***  - துக்கம் கலசாத இயல்பான சந்தோஷத்திற்கு மாறானது

2. ஜீவனுக்கு பரமாத்ம ப்ரதான சம்பந்தமானது, ஆதேயத்வம், நியாம்யத்வம், சேஷத்வம் ; இதனை ப்ரமாணங்கள் விளக்கும் போது,

***நாயம் தேவோ ந மர்த்யோ வா த்ரியக் ஸ்தாவரோபி வா ஞானானந்த மயஸ்வாத்மா சேஷோஹி பரமாதமன:***

என்கிறது ; அதாவது, இந்த ஜீவன் தேவனல்லன், மனுஷ்யனல்லன், த்ரியக் அல்லன், தாவரமல்லன் ; ஞானம் மற்றும் ஆனந்தத்தை ஸ்வரூபமாக க் கொண்ட இந்த ஜீவன் பரமாத்மாவான எம்பெருமானுக்கு சேஷன் ; சரீர ஆத்ம சம்பந்தம் உடையவன்.

# மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரத்தில், சிவன் கூறும் வரிகள் :

***தாஸபூதா ஸ்வதஸ் ஸர்வே ஹ்யதாத்மானஹ பரமாத்மனஹ. அதஹ அஹமபி தே தாஸஹ இதி மத்வா நமாம்யஹம்***

அதாவது,  எல்லா ஜீவாத்மாக்களும் பரமாத்மாவிற்கு இயற்கையிலேயே தாஸர்கள். அவ்வழியிலே, நானும் அவனுக்கு தாஸனே.

3. ஆக, ஜீவர்களின் ஸ்வாபாவிக நிலையானது, கர்ம அநுகுணமான ப்ரக்ருதி சம்பந்தமற்ற நிலையைப் பெற்று, நிரந்தரமான பகவத் அநுபவத்தைப் பெறுவதே ஆகும்.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (9-33)

*கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்*

என்கிறான். 'அர்ஜுனா ! நிரந்தரம் அற்றதாயும், துக்கமயமான இந்த உலக அநுபவத்தை விட்டு என்னை அடைவதற்காக என்னை குறித்து செயல்களை செய்.' என்று கண்ணன் இந்த ஸ்லோகத்தில் தெளிவு படுத்துகிறான்.

# ஸ்வர்க்க பலனும் அநித்யம் என்பதனை, பராசர மஹரிஷி, விஷ்ணு புராணத்தில்,

*ந கேவலம் த்விஜ ஸ்ரேஷ்ட நரகே துக்க பத்ததி; ஸ்வர்கேபி பாத பீதஸ்ய க்ஷயிணோ: நாஸ்தி நிவ்ருத்தி*

ஸ்வரக்கத்தில் இருப்பவனுக்கும் புண்ணியம் முடிந்தவுடன் பூலோகம் செல்ல நேரிடுமே என்கிற சோகம் இருந்துக் கொண்டே இருக்கும் என விவரிக்கிறார்.

# இதனை, ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (9-21) உபதேசிக்கிறான்:

*தே தம் புக்த்வா ஸ்வர்கலோக விஷால க்ஷீணே புண்யே மர்த்யலோக விஷந்தி ஏவ த்ரயீதர்மமநுப்ரபந்நா கதாகத காமகாமா லபந்தே*

அதாவது, அவரவர்கள் செய்த புண்யம் உள்ள வரை ஸ்வர்க்கத்தில் இருந்து மீண்டும், அந்த புண்யங்கள் தீர்ந்தவாறே, பூலோகத்தில் கர்ம அநுகுணமாக வந்தடைகிறான். இப்படி கர்மாக்களை செய்பவர்கள் ஸ்வர்கத்திற்கு வருவதும் போவதுமாக இருக்கின்றனர்.

# அதனால் தான் கண்ணன், பகவத் கீதையில், (8-16)

*ஆப்ரஹ்ம புவனால்லோகா: புநராவர்த்திநோர்ஜுந. மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே*

என்கிறான்; அதாவது, 'நான்முகனாகிய ப்ருஹ்மா இருக்கும் லோகம் உட்பட எல்லா லோகங்களும் அழிகின்றனவையே. என்னையே அடைகிறவர்கள் மட்டுமே மறு பிறவியை பெற மாட்டார்கள்' என்கிறான் கண்ணன். அழியக்கூடிய உலகங்களில் உள்ள அநுபவங்களும் அழியகூடியவையே, அங்கு உள்ள தேவதைகளும் அழியகூடியவர்களே என்று கண்ணன் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

4. ஆக, ப்ரக்ருதி சம்பந்தமற்ற மோக்ஷ பலன் பெற, ப்ருஹ்ம வித்யையைத் தவிர வேறு ஒரு வழி கிடையாது என்கிறது,

*நாந்யப்பந்தா அயனாய வித்யதே*

என்கிற தைத்ரீய உபநிஷத்.

# மேலும், உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ***ப்ருஹ்ம ஸுத்ரங்களும்*** இதனை அறுதியிடுகின்றன. ஸ்ரீ பாஷ்யத்தில் ***ஸாதனாத்யாயமே*** அனுஷ்டானத்தோடு கூடிய மோக்ஷத்திற்கான வழி!

அதாவது, ***நாநா சப்தாதி பேதாத்*** பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைவிக்கிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை, என்றும்,

*விகல்போ அவிஸிஷ்ட பலத்வாத்*

அனைத்து ப்ருஹ்ம வித்யைகளும் ஒரே மோக்ஷ பலனையே கொடுக்கும், போன்ற ப்ருஹ்ம ஸூத்ரங்களைக் கொண்டு, 32 ப்ருஹ்ம வித்யைகளில் இருக்கிற உபாஸனமோ அல்லது ந்யாஸ வித்யையோ (சரணாகதி அனுஷ்டானமோ) மோக்ஷத்திற்கு உபாயமாகிறது என தெளியலாம்.

# மோக்ஷ உபாயமாக சாஸ்த்திரங்கள் விதிப்பது ப்ருஹ்ம வித்யை : அதாவது, *உபாஸநம்* (பக்தி யோகம்) மற்றும் *ந்யாஸ வித்யை* (ப்ரபத்தி அல்லது சரணாகதி அனுஷ்டானம்) ; இதையே ஸம்ஹிதா வரியாவது :

*பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய மம கைங்கர்ய லிப்ஸபி*

அதாவது, வேதாந்த வாக்யங்கள் எம்பெருமானை அடைவதற்கு வழியாக பக்தி யோகத்தையோ அல்லது ப்ரபத்தியையோ (அதாவது, சரணாகதியையோ) விதித்திருக்கின்றன.

5. ஜீவனின் பரமாத்ம அநுபவத்தை, கர்ம தசை அற்ற நிலையை, சாந்தோக்ய உபநிஷத்,

*யோவை பூமா தத் ஸுகம். யத்ர நாந்யத் பச்யதி. நாந்யத் ஸ்ருணோதி. நாந் யத் விஜாநாதி. ஸ பூமா*

என்கிறது. இதையே விஷய வாக்யமாகக் கொண்டு, வேதவ்யாஸர் ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

*பூமா ஸம்ப்ரஸாதத்யுபதேஷாத்*

என அருளியிருக்கிறார். அதற்கு ஶ்ரீராமானுஜர் தனது ஶ்ரீபாஷ்யத்தில் விளக்கம் அருளியுள்ளார். அதாவது, எல்லையற்றதுமான, மிகச் சிறந்ததுமான, ஆனந்த ரூபமான ப்ருஹ்மத்தை (ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை), அவனது குணங்களோடும் ஐஸ்வர்யங்களோடும், அனுபவிக்கும் போது அனுபவிப்பவன் வேறொன்றையும் காண்கிறதில்லை; கேட்பதில்லை; அறிகிறதில்லை. காரணம், ஸர்வேஸ்வரனை ஆத்மாவாக கொள்ளாத (ப்ருஹ்மத்தின் ஆதிக்கத்தில் இல்லாத) பொருட்கள் எங்கேயும் கிடையாதபடியால் ! அநுகூலமாய் உள்ள அனைத்தும் ஸுகத்தை கொடுக்கக்கூடியது. அதனால், மேலும் ப்ருஹ்மத்தை விட உயர்ந்த ஸுக அனுபவம் வேறொன்றும் இன்மையால், முக்தன் வேறொன்றையும் காண்கிறதில்லை, எனப் படுகிறது. ஆக, வஸ்து ஸ்வபாவத்தில், அநுகூலம் ப்ரதிகூலம் கிடையாது. பகவத் ஸ்ருஷ்டியில் அனைத்தும் அநுகூலங்களே.

# இவ்விஷந்த்தை ஸ்வாமி திருப்பாணாழ்வார், அமலனாதிபிரானில் *என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே* என ஸர்வம் ப்ருஹ்மாத்மகம் என அறுதியிடுகிறார் :

*கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே*

அதாவது, காளமேகம்போன்ற வடிவையுடையனும் கோபால குமாரனாகப் பிறந்து வெண்ணெயமுது செய்த திருவாயை யுடையனும் என்னுடைய நெஞ்சை கொள்ளை கொண்டவனும் நித்யஸூரிகட்குத் தலைவனும் பூமண்டலத்துக்கு அலங்காரமான திருவரங்கத்தில் கண்வளர்ந்தருள்வபனும் எனக்குப் பரமபோக்யமான அம்ருதமாயிருப்பவனுமான அழகிய மணவாளனை ஸேவிக்கப்பெற்ற பின்னர் மற்ற விஷயங்களில் மனம் ஈடுபடாது.

இதன் தாத்பர்யமானது : ஸர்வருக்கும் ஸ்வாமியாய், ஆதாரமாய், நியந்தாவாய் இருக்கும், சக்ரவர்த்தி திருமகனுக்கே ஆராத்ய தெய்வமான அரங்கன், ஸௌலப்யத்தால் வெண்ணை திருடியவனாக அவதரித்தாலும், அவனே பரதத்வம் என்கிற எண்ணம் என் நினைவில் இருந்து எப்போதும் நீங்காது. **அவன் அந்தர்யாமியான ஸகல வஸ்துக்களும் அநுகூலமானவைகளே, என்றபடி.**

ஆக, பகவத் ஸாக்ஷாத்காரம் பெறுகிற போது, அதாவது சம்சாரி ஜீவர்களுக்கு பரக்ஞானம் என்னும் நிலையை அடையும் போது, ஸர்வம் ப்ருஹ்மாத்மகம் என்கிற தெளிவு சம்சயம் விபர்யயம் அற நிலை பெற முடியும்.

6. இந்த எண்ணமான ***ஸர்வம் ப்ருஹ்மாத்மகம்*** என்பது ப்ராக்ருத தசையில் உபஸாகநுக்கு உண்டாவதாய் இருந்தாலும், சரணாகதனுக்கு அது இந்த ப்ரபஞ்சத்தில் ஸித்திப்பது துர்லபம்.

# உபாஸகன் விஷயத்தில், ஸர்வேஸ்வரனான பகவத் கீதையில் (5-18) பண்டிதன் ஆத்மாவை எவ்வாறு காண்கிறான் என்ற விளக்கம் அளிக்கிறான்:

***வித்யா விநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி ஸூநி சைவ ஸ்வபாகே ச பண்டிதா: ஸமதர்ஸிந:***

அதாவது, கல்வியும் விநயமும் நன்கு கற்ற பிராமணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைத் தின்னும் புலையனிடத்தும், பண்டிதர் சமப் பார்வையுடையோர் ஏனெனில் அவர்களுள் உள்ள ஜீவாத்மா, இயற்கை நிலையில், ஒரே மாதிரிநாக உள்ளவையே; அதாவது அணு ஸ்வரூபமாய், ஞான ஸ்வரூபமாய், ஆனந்த ஸ்வரூபாமய், அமலமாய் இருப்பதால்; வித்யாஸங்கள் அனைத்தும் கர்ம அனுகுணமாக அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற தேஹங்களாலேயே !

# இது தைத்தீரிய உபநிஷத்- நாராயண அநுவாகத்தில், விளக்கப் படுகிறது :

***அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:***

அதாவது, எல்லா த்ரவ்யங்களுக்கும் உள்ளும் , வெளியேயும் வியாபித்து இருப்பவன் நாராயணன் என்னும் பரம் பொருள், எனப்படுகிறது. அதாவது, ஸகல சேதனர்களின் அந்தர்யாமி அவன் ஆகிறான்.

# சரணாகதனுக்கு, ***ஸர்வம் ப்ருஹ்மாத்மகம்*** என்பது பொதுவாக ஸித்திப்பதில்லை ; ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி ( 6–9–9 ) பாசுரத்தை, ஸ்வாமி தேசிகன், இவ்விஷயத்தை விளக்க, ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில், எடுத்துச் சொல்கிறார்

***ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ ? தாவி வையங்கொண்ட தடந்தாமரை கட்கே கூவிக்கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ***

அதாவது, என் மனஸ் கலங்கும்படி ஐந்து இந்திரியங்களும் எனக்குத் துக்கத்தை ஏற்படுத்த ,அல்ப ஸுக விஷயங்களை எனக்குத் தோன்றத் செய்கிறது; அதனால், உனக்குத் தாஸனான நான் , தாஸத்வம் செய்யாமல், ப்ரக்ருதியில் தங்கும்படி பாபம் செய்த என்னை , உன்னை அநுபவிக்க இயலாமல், இந்த உலகத்திலேயே மூழ்கடித்து அழிக்கப் பார்க்கிறாயா ? உலகங்களை எல்லாம், உன் திருவடிகளால் வசப்படுத்திய அந்தத் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்ய , நீயே ,என்னைக் கூப்பிட்டு ஆட்கொள்ளும் நாள் நெருங்காதோ?

7. யோக சாஸ்த்திரம் அறிந்த சரணாகதர்கள், யோக அநுஷ்டானத்தினால், இங்குள்ள காலம் பரக்ஞானமாகிற பகவத் ஸாக்ஷாத்காரம் பெற இயலும் என்பது ப்ரமாண ஸித்திம்.

# ஸ்வாமி தேசிகன் ***த்வய அதிகாரத்தில்*** ,

***அங்கோல தைல ஸிக்தானாம் பீஜானாம் அசிராத்யதா. விபாக: பல பர்யந்த: ததா அத்ரேதி நிதர்சிதம்***

என்கிறபடியே, அழிஞ்சிக் கொட்டைத் தைலத்தில் நினைக்கப் பட்ட விதையானது, விரைவில் வளரும் சக்தி கொண்டது போல, உபாஸகன் அல்லாதார்க்கும் இங்கு பகவத் சாக்ஷாத்காரம் வருவதாகக் காட்டப்படுகிறது.

***அனுக்ரஹ விசேஷேண கேநசித் பரமாத்மன: குருகாதீச நாதாத்யா: ப்ராக் அபி அந்பவன் ப்ரபும்***

என்கிறபடியே, நம்மாழ்வார் நாதமுனிகள் முதலானோர் எம்பெருமானுடைய விசேஷ அனுக்ரஹத்தால் திரு நாடு அலங்கரிக்கும் முன்பு பகவானை சாக்ஷாத்கரித்தனர். ஆக, இந்த *பரக்ஞானம்* எனும் பலனை பெறுவதற்கு, *யோக சாஸ்த்திரம் அறிந்தவர்களான* ஸ்வாமி நம்மாழ்வார், ஸ்ரீமந் நாதமுனி போன்ற நம் பூர்வ ஆசார்ய ஸ்ரேஷ்டர்கள், சரணாகதி அனுஷ்டான வேளையில் ஸங்கல்பித்துக் கொண்டதே, அவர்களுக்கு இங்குள்ள காலம் பகவத் சாக்ஷாத்காரம் ஏற்பட, காரணமானது. ஸ்ரீமந் நாதமுனிகள், குருகை காவலப்பன் போன்ற ஞான அனுஷ்டான ஸ்ரேஷ்டர்கள், இங்குள்ள காலத்திலேயே, யோகத்தில் பகவத் சாக்ஷாத்காரம் பெற்று இருந்தவர்கள்.

# ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய ஆசார்ய வைபவத்தில், யோக சாஸ்த்திரம் லுப்தம் என தெளிவிக்கப் பட்டிருக்கிறது :

ஸ்ரீமந் நாதமுனிகளிடம் இரண்டு நிதிகள் இருந்தன.

ஒன்று ***யோக சாஸ்திரம்***

மற்றொன்று ஆழ்வார்களின் ***திவ்யபிரபந்தங்கள்***

நாதமுனிகள் தம் இரு ப்ரதான சீடர்களான உய்யக் கொண்டார் மற்றும் குருகை காவலப்பன் ஆகியோரிடம் யாருக்கு எது வேண்டும் என்று கேட்க,

குருகை காவலப்பன் ***யோக சாஸ்திரத்தைப்*** பற்றி அறிய ஆவல் கொண்டு, அதை தெரிந்து கொண்டார்.

உய்யக் கொண்டாரோ ***ஆழ்வார் பாசுரங்களையே*** கேட்டுத் தெரிந்து கொண்டு அதன் அர்த்தங்களையும் குறைவரக் கற்றுத் தெளிந்தார். அதன் மூலம்தான் உலகை உய்விக்க முடியும் என்பது அவரது கணிப்பு.

குருகைக் காவலப்பனிடம் தனக்கு ***யோக ரஹஸ்யத்தை உபதேசிக்கும் படி வேண்டினார் ஸ்ரீ ஆளவந்தார்*** அதற்கு, வருகிற தை மாதம் புஷ்ய நக்ஷத்திரத்தில் தனக்கு தேஹாவஸான காலம் (மரண காலம்) என்றும் அதற்கு முன் யோக ரஹஸ்யத்தை ஸ்ரீ ஆளவந்தாருக்கு உபதேசிப்பதாயும் உறுதி அளித்தார் குருகைக் காவலப்பன். அதற்காக ஒரு நாளைக் குறிப்பிட்டு தந்தார் குருகைக் காவலப்பன்.

ஸ்ரீ ஆளவந்தார், குருகைக் காவலப்பன் குறிப்பிட்டு தந்த நாளை நினைவில் கொள்ள தவறி விட்டார்.

அந்த காலத்திலிருந்து ***யோக ரஹஸ்யம்*** அனுஷ்டானத்தில் இருந்து மறைந்து விட்டது.

# ஆக, ஸ்வாமி தேசிகன், ***த்வயாதிகாரத்தில்***, ஸ்ரீ ராமானுஜரின் சரணாகதி கத்ய வ்யாக்யானமாகக் கூறும் போது,

***பரபக்த்யாதி மூலத்வம் கைங்கர்யஸ்ய யதுச்யதே. கத்யாதீஷூ தத்ப்யாஹு: அபவர்க்க தசாஸ்ரயம்***

என அருளினார். அதாவது, கத்யம் முதலியவற்றில் கைங்கர்யத்துக்கு பரபக்தி முதலியவற்றைக் காரணமாகக் கொண்ட தன்மை சொல்லப் படுகிறதோ அதையும் மோக்ஷத்தைப் பெற்ற சமயத்தைப் பற்றியதாக ஆசார்யர்கள் கூறினார்கள்.

8. யோக சாஸ்த்திரம் லுப்தமான போதும், சிலர் இக்காலத்தில் யோகம் அநுஷ்டிப்பதாகக் கூறப் படுகிறதே என்னில், அது மோக்ஷ உபாயமான விஷயமாகாது ; பொதுவாக ***பக்தி யோகம் / உபாஸனம்*** (த்யானம்) துக்கத்தைப் போக்கும் யோகம் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன ; இதில், யோகம் என்கிற சேர்க்கை என்பதாவது, மனத்தை ஒரு நிலைப் படுத்துவது ; துக்கமாவது, எந்த பலனை பெற இயலாமல் இருக்கிறானோ அதனை துக்கம் எனக் கூறப்படுகிறது.

# சிலர், *தேவதா உபாஸனம்* இந்திரன், சூர்யன் போன்ற தாழ்ந்த ப்ராக்ருத தேவதைகளை த்யானித்து அதி அல்ப ப்ராக்ருத பலனைப் பெறுகிறார்கள்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (4-12) அருளுவதாவது:

***காங்க்ஷந்த கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர் பவதி கர்மஜா***

அதாவது, 'கர்மாக்களின் ப்ராக்ருத பலனை உடனே கால தாமதமின்றி விரும்புகிறவர்கள் ப்ரக்ருதியில் உள்ள தேவதைகளை உபாஸிக்கிறார்கள். அதன் மூலமாக விரைவிலேயை பலன் உண்டாகிறது.'

# சிலர் ***நாமோபாஸனத்தில்*** ஈடுபடுவர்; வாக்கு மனம் ஆகாயம் போன்ற அசேதனங்களில் ப்ருஹ்மமாக ஏறிட்டு உபாஸனம் ; இதன் பலனாக எங்கும் ஸஞ்சரித்தல் போன்ற பலன்களைப் பெறலாம்.

# இதை விட உயர்ந்த பலனாக ஜீவாத்ம அனுபவத்தை பெற எண்ணி, சிலர் ***ப்ரதீக் உபாஸனத்தில்*** ஈடுபடுகிறார்கள்.

கைவல்யமாகிற, ஜீவாத்ம அனுபவத்தை பெற எண்ணி, செய்யப்படும் ***ப்ரதீக் உபாஸனமாவது*** , குறிப்பிட்டபடி ஆசனத்தில் அமர்ந்து மனதை கட்டு படுத்தி ஸதாசார்யன் உபதேசத்திற்கு ஏற்ப, சாஸ்த்ரங்களில் உள்ள விதிப் படி பின்வருமாறு நான்கில் ஒரு ப்ரகாரத்தை தேர்வு செய்து த்யானிப்பது; இது, ***ஶ்ரீபாஷ்ய கார்யாதிகரணத்தில்*** , பூம வித்யா ப்ரகரணத்தில், விளக்கப் பட்டிருக்கிறது.

***ப்ரக்ருதியுடன் கூடிய தன் ஆத்மாவை ப்ருஹ்மமாக*** ஏறிட்டு த்யானம் செய்வது

***ப்ரக்ருதியுடன் கூடிய தன் ஆத்மாவை 'நான்*** என த்யானம் செய்வது

***ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்ற தன் ஆத்மாவை ப்ருஹ்மமாக*** ஏறிட்டு த்யானம் செய்வது

***ப்ரக்ருதி ஸம்பந்தம் அற்ற தன் ஆத்மாவை 'நான்*** என த்யானம் செய்வது

# ப்ராக்ருத பலன்களையோ அல்லது மோக்ஷ பலனையோ வேண்டி செய்யும் யோகத்தில், ஆரம்ப காலத்தில், முதலில் கை கூடுவது அஷ்ட ஸித்தி.

அவையாவன:

***அணிமா*** - தன் சரீரத்தைப் சுருக்குதல் ;

***மஹிமா*** - தன் சரீரத்தைப் பெருக்குதல் ;

***லகிமா*** - தன் எடையைக் குறைத்தல் ;

***கரிமா*** - தன் எடையைக் அதிகரித்தல் ;

***ப்ராப்தி*** - தான் நினைத்ததை வரவழித்தல் ;

***ப்ராகாம்யம்*** - தான் விரும்பியதை நிறைவேற்றுதல் ;

***ஈசித்வம்*** - தன் ஆணை மதிக்கப்படுதல் ;

***வசித்வம்*** - பிறரை தன் வசம் கொள்ளுதல்

இந்த ப்ரபஞ்சத்தில், இவ்வாறு அமாநுஷ்ய செயல்களைச் செய்யும் யோகிகளைக் காண்கிறோம் ; அதாவது, இல்லாத வஸ்துவை வரவழித்தல் ; அது காலப் போக்கில் யோக சக்தி அழிந்தவுடன் காணாமல் யோய்விடும். பிறகு செயலாற்றலில் அவர்களும் சாமான்ய மநுஷ்யர்கள் போலாகி விடுவர் ; இதை உணராத போது, அந்த தாற்காலிக அதி மாநுஷ்ய செயல்களைப் புரிவோரை, தெய்வமாகக் கருதும் பாமரர்களும் லோகத்தில் உண்டு. இந்த அல்ப பலனைப் பெற விரும்பும் யோகத்தை, பரக்ஞானம் எனப்படும் பகவத் ஸாக்ஷாத்காரத்தோடு ஒன்று படுத்த முடியாது. அந்த மோக்ஷ உபாய இநுஷ்டான யோகிகளின் அவாந்தர நிலையான பரக்ஞான பரம பக்தி பற்றி, ஸ்வாமி தேசினின் ***உபாய விபாகாதிகார*** வரி:

***இவ் அபேக்ஷா மாத்ரம் அடியாக வந்த பகவத் ப்ரஸாத விசேஷத்தாலே தத் கால நியதமான பரிபூரண சாக்ஷாத்காரத்தை உண்டாக்கும் ; இஸ்சாக்ஷாத்காரம் பரக்ஞானம் என்று பேசப் பட்டது ; இப்படி நிரதிசய போக்யமான பகவத் ஸ்வரூபத்தை சாக்ஷாத்கரித்தவாறே பெரு விடாய்ப் பட்டவன் தடாகத்தைக் கண்டாற் போலே பிறந்த ப்ரீதி அதிசயம் பரம்பக்தி***

***இவ் அபேக்ஷா மாத்ரம் அடியாக*** - ஆசைப்பட்டு ப்ரார்த்திப்பதால்

***வந்த பகவத் ப்ரஸாத விசேஷத்தாலே*** - பகவான் தன் அனுக்ரஹத்தாலே

***தத் கால நியதமான பரிபூரண சாக்ஷாத்காரத்தை உண்டாக்கும்*** - யோக காலத்தில் தாற்காலிகமாக முழுமையான பகவத் சாக்ஷாத்காரம் உடையதாகும்

***இஸ்சாக்ஷாத்காரம் பரக்ஞானம் என்று பேசப் பட்டது*** - இந்த பகவத் தரிசனத்தை பரக்ஞானம் எனப்படுகிறது

***இப்படி நிரதிசய போக்யமான பகவத் ஸ்வரூபத்தை சாக்ஷாத்கரித்தவாறே*** - இப் போக்ய அனுபவத்தால்

***பெரு விடாய்ப் பட்டவன் தடாகத்தைக் கண்டாற் போலே*** - தாகமுற்றவன் தண்ணீரைக் கண்டது போல

***பிறந்த ப்ரீதி அதிசயம் பரமபக்தி*** - எற்படும் மகிழ்ச்சி பரிவாஹம் பரமபக்தி எனப் படுவது

# இந்த காலத்தில், ப்ரபன்னனுக்கு பகவத் ஸாக்ஷாத்காரம் என்னும் பரக்ஞானம், யோக அநுஷ்டானம் இன்றியே பெற இயலும் என்பதற்கு ப்ரமாணம் இல்லை ; ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், சாஸ்த்திர விஷயங்களில் அவ்வாறு செய்யலாகாது என்கிறார்.

***தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது***, என்கிறார் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில், ஸ்வாமி தேசிகன்.

அதாவது, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில், வாதத் திறமையை மட்டுமே கை கொண்டு சாஸத்திரத்திற்கு விரோதமான கருத்துக்களை கூறாமல், சாஸ்த்திரத்தை ஆதாரமாய் கொண்டு விளக்குவதே ஆஸ்திகர்களின் தர்மமாகிறது, என்கிறார்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

*****

4.2.2023
சனி கிழமை

*__அயோக அந்ய யோக விவச்சேதம் ஜகத் ஸ்ருஷ்டி சேஷத்வ விஷயம் - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா__*

1. அந்ய யோக விவச்சேதம் மற்றும் அயோக விவச்சேதம்

# *__அந்ய யோக விவச்சேதம்__*

அந்ய - இதர

யோகம் - சேர்க்கை

விவச்சேதம் - மறுப்பு

ஆக, *__அந்ய யோக விவச்சேதமாவது__* இதர சேர்க்கையை மறுப்பதாகிறது ; அதாவது, விசேஷ்யததை ஒட்டிய ஏவகாரம் ; இந்த விசேஷணம், இதர விசேஷ்யங்களில் மறுப்பது ; இது *__அந்ய யோக விவச்சேதம்__*

# *__அயோக விவச்சேதம்__*

அயோகம் - சேர்க்கை இல்லாமை

விவச்சேதம் - மறுப்பு

ஆக, *__அயோக விவச்சேதமாவது__* இதன் சேர்க்கை இன்மையை மறுப்பதாகிறது ; விசேஷணம் சமபந்தமான ஏவகாரம் ; விசேஷ்யத்தில் விசேஷண இன்மையை மறுப்பது ; இது *__அயோக விவச்சேதம்__*

# உதாரணம் - *__அந்ய யோக விவச்சேதம்__*

நாய் : *__விசேஷ்யம்__*

குரைப்பது - *__விசேஷணம்__*

*__நாயே குரைக்கும்__* -

விசேஷ்யததை ஒட்டிய ஏவகாரம் - நாயைச் சார்ந்த ஏவகாரம்.

இந்த விசேஷணம், இதர விசேஷ்யங்களில் மறுப்பது - மற்ற எந்த ஜந்துவும் குரைக்காது.

இது *__அந்ய யோக விவச்சேதம்__*

# உதாரணம் - *__அயோக விவச்சேதம்__*

நாய் : *__விசேஷ்யம்__*

நான்கு கால்கள் - *__விசேஷணம்__*

*__நாய்க்கு நான்கு கால்களே__*

விசேஷணம் சமபந்தமான ஏவகாரம் - நாயின் கால்களை சார்ந்த ஏவகாரம்

விசேஷ்யத்தில் விசேஷண இன்மையை மறுப்பது - நான்கு கால்களற்ற நாய், இயற்கையில், கிடையாது ; ஆனால் நான்கு கால்கள் உடைய மற்ற ப்ராணிகள் உண்டு.

இது *அயோக விவச்சேதம்*

2. அதனால் தான், உலக படைப்புக்கு எவன் காரணமோ அவனையே த்யானிக்க வேண்டும் என *காரணம் து த்யேய:* என்கிற உபநிஷத் வரி கூறுகிறது. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே உலக காரணம் என உபநிஷத் அறுதியிட்டு கூறுகிறது;

# உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (1ம் அத்யாயம் 1ம் பாதம் 2ம் அதிகரணம்)

*ஜன்மாத்யஸ்ய யத:*

அதாவது, உலகம் எவனிடம் இருந்து உண்டாகிறதோ அவன் ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

இதற்கு விஷய வாக்யம்: தைத்ரீய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது -

*யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி*

அதாவது, எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அந்த *ஜகத் காரணனான* ஸர்வேஸ்வரனே பருஹ்மம்.

# உலகத்திலும் ப்ரமாணங்கள் ( நாம் நம்பத் தகுந்த அத்தாட்சிகள்) மூன்று வகைகளாக உள்ளன:

*ப்ரத்யக்ஷம்* ( நம் புலன்களால் அறியக் கூடியவை - உதாரணமாக, 'என் கண்ணால் பார்த்தேன்' என்றும், 'என் காதால் கேட்டேன்' என்றும் உறுதி அளிக்க நாம் கூறக் கேட்டிருக்கிறோம்.)

*அனுமானம்* (ஒரு காலத்தில் நாம் புலன்களால் அறிந்தவற்றை வேறொரு காலத்தில் நாம் அனுமானிக்கிறோம் - உதாரணமாக, ஏதோ ஒரு காலத்தில் நெருப்பையும் புகையையும் சேர்த்து கண்ட நாம், வேறொரு காலத்தில் புகையைக் கண்டவுடன் அங்கு நெருப்பு இருப்பதாக அனுமானிக்கிறோம்.)

*சப்தம்* (ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானத்தால் நிச்சயிக்கப் பட முடியாதவற்றை, நம்மிடம் அளவு கடந்த அன்பு உடைய, ஒரு நற் பலனையும் நம்மிடம் எதிர்பார்க்காத, நம் நலனில் மட்டுமே ஆர்வம் கொண்ட ஒருவரால் சொல்லப் படும் நல்வார்த்தையைக் கொண்டு நம்புகிறோம் - உதாரணமாக, ஒரு குணவதியான தாய், தன் குழந்தையிடம் அந்த குழந்தையின் தந்தையை அறிமுகப் படுத்தவதை ப்ரத்யக்ஷ அனுமானத்தினால் அறியப்பட முடியாத 'சப்த ப்ரமாணம்' ஆகும்)

# இந்த விதத்தில், சப்த ப்ரமாணமான - அதாவது, நம்ப தகுந்த அத்தாட்சியாக - வேத வேதாந்தங்களை ஒத்துக் கொண்ட மதங்களை வைதீக மதங்களாக கருதப் படுகின்றன.

# வேதாந்தத்தில் (உபநிஷத்தில்) கூறப்படும் ப்ருஹ்மத்திற்கான (ஸர்வேஸ்வரனுக்கான) இலக்கணமாவது - 'எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் இந்த லோகங்கள் காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் இந்த லோகங்கள் லயத்தை அடைகிறதோ அவனே ப்ருஹ்மம் (ஸர்வேஸ்வரன்)'

# ப்ருஹ்மம் (ஸர்வேஸ்வரன்) என்பதன் இந்த விளக்கத்தினால், பல வாதங்கள் உருவாகின:

பலரால் ஆராதிக்கப் படும் தெய்வங்கள் ( விஷ்ணு, சிவன், முருகன், சூர்யன் போன்றவர்கள்) அனைவரும் ஒருவனே என்ற வாதம்.

ப்ருஹ்மம் (ஸர்வேஸ்வரன்) செய்ய வேண்டிய மூன்று செயல்களையும் பகிர்ந்து கொள்ளும் மும்மூர்த்திகளான ப்ருஹ்மா, விஷ்ணு மற்றம் சிவன் அனைவருமே ப்ருஹ்மம் (ஸர்வேஸ்வரன்) என்ற வாதம்.

மும்மூர்த்திகளான ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன் இவர்களில் ஒருவர் ப்ருஹ்மம் (ஸர்வேஸ்வரன்) என்ற வாதம்.

மும்மூர்த்திகளான ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன் இவர்களுக்கு மேல் ஒரு தெய்வம் ப்ருஹ்மம் (ஸர்வேஸ்வரன்) என்ற வாதம்.

# இதையே, ப்ருஹ்ம ஸூத்ரத்தில், எவன் ஒருவன் இந்த லோகத்துக்கு காணமோ அவனை ப்ருஹ்ம என கூறப் படுகிறது.

# ஸ்ருஷ்டி (படைப்பு) இரு வகையாக பிரித்து சாஸ்த்ரங்கள் உரைக்கின்றன - அதாவது, சமஷ்டி ஸ்ருஷ்டி ( மூலப் பொருளின் உற்பத்தி ) மற்றும் வ்யஷ்டி ஸ்ருஷ்டி ( மூலப் பொருளை ஜீவர்களுக்கு சரீரமாக்குவது ).

சமஷ்டி ஸ்ருஷ்டியை ஸர்வேஸ்வரனான நாராயணன் தானே செய்கிறான். வ்யஷ்டி ஸ்ருஷ்டியை ப்ராக்ருத லோகத்தில் உள்ள இதர தேவதைகளை கொண்டு செய்விக்கிறான்.

அது போல தான் அனைத்து ஜகத் வ்யாபாரம் ( ஸ்ருஷ்டித்தல், காப்பாற்றுதல் மற்றும் சென்று அடைதல்) - சமஷ்டி மற்றும் வ்யஷ்டி என்ற வித்யாஸங்களுடன் அமைகின்றன.

இருபத்தி நான்கு அசித் தத்வங்களை (ஞானமற்ற ஜடப் பொருட்கள் ) சமஷ்டி ஸ்ருஷ்டியில் உண்டாக்கி, இதர தேவதைகளை கொண்டு வ்யஷ்டி ஸ்ருஷ்டியை - அதாவது அசித் தத்வங்களை ஜீவாத்மாக்களுக்கு சரீரமாக்கி - செய்விக்கிறான்.

# ஆக, வேதாந்தங்கள் உபயோகித்த வரிகளைக் கொண்டு, ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா), அதாவது சமஷ்டி ஸ்ருஷ்டி, ரக்ஷணம் மற்றும் லயம் என்ற செயல்களைக் கொண்டவன், என தெளிவு படுத்தப் படுகிறது:

ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம், பரம்ஜோதி, பரப்ருஹ்மம் என வேநாந்தங்கள் கூறுகின்ற படியால்

'நாராயணன்' என்ற சம்ஸ்க்ருத சொல்லுக்கு பொருளாவது - அவன் அன்றி ஒன்றும் இயங்காது என்பதுவும், அவன் எல்லாவற்றிர்க்கும் அந்தர்யாமி என்றபடியால்

நாராயணனுக்கு உற்பத்தி சொல்லாமல் (அனைத்து காலங்களிலும் 'அவன் இல்லை' என்று சொல்ல முடியாதபடி இருக்கின்ற படியால்), மற்ற அனைத்து பலரால் ஆராதிக்கப் படும் தெய்வங்களுக்கும் உற்பத்தி (அதாவது அசித் தத்வங்களை ஜீவாத்மாக்களுக்கு சரீரமாக்குதல்) சொல்லுகின்ற படியால்

3. ப்ருஹ்மத்திற்கு ஜகத் காரணத்வம் உபலக்ஷணமா விசேஷணமா?

***லக்ஷியத்தை*** உணர்த்த தேவையானது ***லக்ஷணம்***.

# ***லக்ஷியமாவது*** ஒரு இலக்கைக் குறிப்பது ; அதாவது, உணர்த்த வேண்டிய வஸ்துவையே அல்லது நிலையையோ குறிப்பதாகும்.

உதாரணமாக :

ஸ்வர்க்கதிதில் ஆசை உள்ளவன், ***ஸ்வர்க்க காமோ யஜேத*** என்கிற சாஸ்த்திர விதிப்படியே யாகத்தை செய்கிறான். ஆக, ஸ்வர்க்கத்தில் இச்சை உள்ளவனுக்கு, ஸ்வர்க்கத்தை அடைவது ***லக்ஷியமாகிறது*** ; ஆக, லக்ஷியத்தை காட்டும் லக்ஷணம் ஒரு தன்மையாகவோ அல்லது செயலாகவோ இருக்கலாம்.

# ***லக்ஷணமாவது*** ஒரு இலக்கை அடையாளம் காட்டுவதானது ; அதாவது, ***லக்ஷியத்தை*** உணர்த்த தேவையான தன்மைகள்.

உதாரணமாக :

ஒருவனின் உத்யோகத்தை குறிப்பிட்டோ அல்லது உயரத்தை குறிப்பிட்டோ சொல்லும் போது, அந்த தன்மை எப்போதுமே மாறாதது. இதனால் அவனது உடல் நிறம் மற்றும் உயரம் போன்றவைகள் அவனுக்கு லக்ஷணமாகும் (இலக்கணமாகும்).

*லக்ஷியத்தை* உணர்த்த தேவையான *லக்ஷணங்கள்* இரு வகைகளாக பிரிந்து இருக்கும்.

# *விசேஷணம்* - விசேஷ்யத்தை ( *லக்ஷியத்தை* ) விளக்குவதாவது. அதாவது, விசேஷ்யத்தில் உள்ள நிரந்தரமான தன்மை.

உதாரணமாக :

ஒருவனை 'காதில் கடுக்கன் அணிந்திருப்பவன்' என்று சொல்லும் போது, அந்த தன்மை பொதுவாக மாறாதது. இதனால் இந்த சொற்கள் அவனுக்கு விசேஷணமாகும்.

# *உபலக்ஷணம்* - விசேஷ்யத்தை ( *லக்ஷியத்தை* ) ஒரு ப்ரகரணத்தில் விளக்குவதாவது. அதாவது, விசேஷ்யத்தில் உள்ள நிரந்தரம் அற்ற தன்மை

உதாரணமாக :

ஒருவன் வீட்டை அடையாளம் காட்டும் போது, 'அந்த காகம் அமர்ந்திருக்கும் வீடு' என்று சொல்லும் போது, அந்த தன்மை நிரத்தரமற்றது. இவ்விஷயத்தை வ்யவஹரிக்கும் போது, அந்த வீட்டில் காகம் அமர்ந்திருந்தால், அந்த தன்மை, அத்தருணத்தில் மட்டுமே பொருந்தும். இதனால் இந்த சொற்களால் கூறும் அடையாளம் உபலஷணமாகும்.

# எப்படி கொண்டாலும், இந்த 'ஜகத் காரணத்வம்' ஸ்ரீமந் நாராயணனான ப்ருஹ்மத்திற்கு (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா) உள்ள அடையாளம் என்பது சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதலால், ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா) என ஜகத் காரணத்வத்தைக் கொண்டு சொல்லப் படுகிறது ; இதை முதலில் ஒரு ஸம்ஸ்க்ருத ஸ்லோகம் கொண்டு ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸங்க்ரஹிக்கிறார் :

*ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகசமதிகதா துல்ய தைக்யம் த்ரயாணாம் அந்யத்ர ஐஸ்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ ஆத்ரியந்தே ந சந்த த்ரயந்தை ஏக கண்டை தத் அனுகுண மனு வியாச முக்ய உக்திபி ச ஸ்ரீ மான் நாராயணோ ந பதி அகிலதநு முக்தித முக்த போக்ய*

அதாவது,

பல வைதீக மதங்கள் (வேத வேதாந்தத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்ட மதங்கள்) பரம்பொருள் யார் என்பதை பலவிதமாக அறிவிக்கின்றனர்.

# *ஆத்மைக்யம்* என்கிற பதம் கொண்டு, அனைத்து ஆத்மாக்களும் ஒன்றே - ஜீவன் வேறு ஈஸ்வரன் வேறு என்பது கிடையாது என்கிற அத்வைத பக்ஷம்

# *தேவதைக்யம்* என்கிற பதம் கொண்டு, வேத வேதாந்தங்களில் கூறப்படும் அனைத்து தேவதைகளும் ஒரே ஈஸ்வரன் என்கிற பக்ஷம்

# *த்ரிகசமதிகதா துல்ய* என்கிற பதம் கொண்டு, மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரும் ஞானம் சக்தி முதலியவற்றை சமமாகக் கொண்ட ஈஸ்வரன் என்கிற பக்ஷம்

# *த்ரயாணாம் ஐக்யம்* என்கிற பதம் கொண்டு, மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரும் ஒரே ஈஸ்வர தத்வத்தின் பல ரூபங்கள் என்கிற பக்ஷம்

# *அந்யத்ர ஐஸ்வர்யம்* என்கிற பதம் கொண்டு, மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரைக் கட்டிலும் உயர்ந்த பரம் பருளான ஈஸ்வரன், என்கிற பக்ஷம்

# *இத்யாதி* என்பதால், இது போன்ற பக்ஷங்கள்

# *அநிபுணா பணிதீ ஆத்ரியந்தே ந சந்த* என்பதால், அப்பக்ஷங்கள் அனைத்தும் வேத வேதாந்தங்களை முறையோடு கல்லாதவர் கூற்று என வேதமறிந்த நிபுணர்கள் எற்பதில்லை

# *த்ரயந்தை ஏக கண்டை* என்பதால், உபநிஷத்துக்கள் ஒரே குரலில் கூறுவது என்னவென்றால்,

# *தத் அனுகுண* என்பதால் மேலும் அந்த உபநிஷத்துக்களுக்கு அனுகுணமாக

# *மனு வியாச முக்ய உக்திபி ச* என்பதால் மஹரிஷிகளான மநு, வ்யாஸர் போன்றவர்களின் விளக்கம் என்னவென்றால்

# *ஸ்ரீ மான் நாராயணோ ந பதி* - பெரிய பிராட்டியோடு கூடிய ஸ்ரீமந் நாராயணனே அனைவருக்கும் ஆத்மா (அதாவது பரமாத்மா)

# *அகிலதநு* என்பதால் அவனே ஸகல சேதன அசேதன வஸ்துக்களையும் தனக்கு சரீரமாகக் கொண்டவன்

# *முக்தித முக்த போக்ய* என்பதால் அவனே சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷம் அளிப்பவனாயும் மோக்ஷத்தில் அனுபவிக்கப் படுபவனாயும் இருக்கிறன்,

என்பதாயிற்று.

4. ஜகத் காரணத்வத்வமானது பெரிய பிராட்டியோடு சேர்ந்த ஈஸ்வரனுக்கே பொருந்தும் ; ஏனெனில் மற்ற தேவதைகள் மஹா ப்ரளய காலத்தில் இருப்பதில்லை.

# மஹோபநிஷத்தில்,

***ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஸாந நேமே ஜாவா ப்ருத்வி நக்ஷத்ராணி***

என்கிறது. அதாவது, நாராயணன் ஒருவனே, மஹா ப்ரளய காலத்தில், இருந்தான்; சதுர்முக ப்ருஹ்மாவும் இல்லை; சிவனுமில்லை; லோகங்கள் இல்லை; நக்ஷத்திரங்கள் இல்லை என்று மஹாப்ரளய காலத்தில் பல இல்லாத வஸ்துக்களையும் உபநிஷத் கூறுவதினால், மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே *ஜகத் காரணனான* ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா), என்பதாகிறது.

# ஐந்தாவது வேமாக க் கொண்டாடப்படும் மஹா பாரதத்தில், வேதவ்யாஸர் அருளும் போது,

***ஆபூத ஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீனே ப்ரக்ருதௌ மஹான் ஏகஸ்திஷ்டதி விச்வாத்மாச ஸ து நாராயண பிரபு***

அதாவது, பஞ்ச பூதங்கள் அனைத்தும் மூல ப்ரக்ருதியில் லயம் அடைந்த மஹா ப்ரளய காலத்தில், உலக நாயகனான ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே இருந்தான், என்கிறது. ஆக, மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா) ஸ்ரீமந் நாராயணனே ***ஜகத்**

**காரணனான*** ஈஸ்வரன், அதாவது பரதத்வம், பரம் பொருள், பரமாத்மா என்பதை மேலுமுள்ள சாஸ்த்திர வரிகளைக் கொண்டு தெளிய வேண்டும்.

# கண்ணன் கீதையில் (7-6)

***ஏதத் யேநீநி பூதாநி ஸர்வாணி இதி உபதாரய அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலய ததா***

என, ஸ்ருஷ்டி ப்ரளயம் இவைகளுக்கு நானே காரணம் என்றான். அதாவது, நானே ஸமஷ்டி வ்யஷ்டியான உலகிற்கும் உபாதான காரணமாயும் அவ்வாறே அழிவிற்கு காரணமாயும் இருக்கிறேன், என்கிறான் கண்ணன்.

# ஜகத் காரணத்வம் (உலக படைப்பிற்கு காரணம்) - பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், ***பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை ஸர்வேஸ்வரன்*** என கொள்ள வேண்டும்.

***மாயா வா ஏஷா நாரஸிம்ஹி ஸர்வமிதம் ச்ருஜதி ஸர்வமிதம் ஸம்ஹரதி ஸர்வமிதம் ரக்ஷதி***

என்று ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத் பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் உண்டு (ச்ருஜதி, ஸம்ஹரதி, ரக்ஷதி) என ஸ்பஷ்டமாகக் கூறுகிறது.

# மேலும் தனிப்பட்ட ப்ரகாரத்தில், பிராட்டியை குறிப்பிடாத உபநிஷத் வரிகளுக்கு, ஸம்ப்ரதாய விளக்கங்கள், நம் பூர்வ ஆசார்யர்கள் அருளியுள்ளனர்:

***தத் அந்தர்பாவாத்வாம் ந ப்ருகபிததே ஸ்ருதிரபி***

என பட்டர் ஸ்ரீகுணரத்னகோஸத்தில் அருளினார். அதாவது, எம்பெருமானுடன் சேர்ந்தே இருப்பதினால், பிராட்டியை தனியாக ஸ்ருதிகள் கூறவில்லை.

# ஸ்வாமி தேசிகனின் ***ஸித்தோபாய சோதனாதிகார*** வரிகளாவது :

***எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்றாம் - என்று தொடங்கி உடையவர் அருளிச் செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்***

5. அதனால், பெரிய பிராட்டியோடு கூடிய எம்ப்ருமானுக்கே, ஜகத் காரணத்வம் ஸித்திக்கும் ; இது ***அந்ய யோக விவச்சேதம்*** ஏனெனில் மற்ற எந்த தேவதைகளுக்கும் ஜகத் காரணத்வம் ஸித்திக்க வாய்ப்பில்லை.

# ஸ்வாமி தேசிகனின் அதிகார ஸங்க்ரஹத்தில் அருளியது :

***வாதியர் மன்னும் தருக்கச் செருக்கின் மறை குலையச் சாது சனங்கள் அடங்க நடுங்கத் தனித்தனியே ஆதி எனா வகை ஆரண தேசிகர் சாற்றினர், நம் போது அமரும் திருமாதுடன் நின்ற புராணனையே***

அதாவது, துர்வாதிகள் ஸ்திரமான தர்க்கம் செய்யும் கர்வத்தாலே வேத வேதாந்தங்களும் சாஸ்த்ரீயர்களும் நடுங்கும் படி தன் மனத்திற்கு தோன்றிய படி ஜகத் காரணமான ஸர்வேஸ்வரனை விளக்குவதை நம் சமய ஆசார்யர்கள் ஸர்வேஸ்வரனாக ஸ்ரீமந் நாராயணனே என சாஸ்த்திர விஹிதமாக தெளிவு படுத்தி உள்ளனர்.

# ஸ்வாமி தேசிகனின் ***பரதேவதா பாரமார்த்ய அதிகார*** வரி :

***இவர்கள் சேஷ பூதர்கள் அவன் சேஷி என்னும் இடத்தை - 'தாஸபூதா ஸ்வதஸ் ஸர்வே ஹ்யதாத்மான: பரமாத்மன: அதஹ அஹமபி தே தாஸ இதி மத்வா நமாம்யஹம்' - என்று மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரத்திலே ஸர்வக்ஞனான ருத்ரன் தானே சொன்னான்***

இதன் பெருளாவது,

***இவர்கள்*** **-** சதுர்முக ப்ருஹ்மா, முக்கணனனான சிவன் ஆகியோர்

***சேஷ பூதர்கள்*** **-** அடிமைப் பட்டவர்கள்

***அவன் சேஷி*** **-** ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாயணனே அடிமை கொள்ளும் ஆற்றல் பெற்றவன்

***என்னும் இடத்தை*** **-** என்கிற விவரணத்தை

***தாஸபூதா ஸ்வதஸ் ஸர்வே ஹ்யதாத்மானஹ பரமாத்மனஹ. அதஹ அஹமபி தே தாஸஹ இதி மத்வா நமாம்யஹம்*** **-** எல்லா ஜீவாத்மாக்களும் பரமாத்மாவிற்கு இயற்கையிலேயே தாஸர்கள். அவ்வழியிலே, நானும் அவனுக்கு தாஸனே

***என்று மந்த்ர ராஜ பத ஸ்தோத்திரத்திலே*** **-** என்று தான் அருளிய துதியிலே (மந்த்ரராஜபதம்)

***ஸர்வக்ஞனான ருத்ரன்*** **-** சாஸ்த்திர ஞானமுடைய ருத்ரன்

***தானே சொன்னான்*** **-** தன் வாய் மொழி கொண்டு வெளியிட்டான்

சம்சாரி ஜீவர்களில் (தேவ-மநுஷ்ய-த்ரியக்-தாவரம்) தேவர்களின் தர்ம பூத ஞானம் ஒரளவிற்கு விகசித்து இருக்கிறது ; இங்கு ஸ்வாமி தேசிகன் ருத்ரனை ஸர்வக்ஞனாகக் குறிப்பிடுவது, மற்ற சம்சாரி ஜீவர்களைக் காட்டிலும் ஞான உத்க்ருஷ்ட அவர தத்வமான ருத்ரன் தன் வாக்கினாலே, தான் பரதத்வமல்ல என்பதனை அறுதியிடுவது சொல்லப் படுகிறது.

# சிவன், தான் கூறியதைப் பார்க்கும் போது, சதுர்முக ப்ருஹ்மாவும் சிவனும் உற்பத்திக்கு விஷயமானவர்களே என விளங்கும்.

***க இதி ப்ருஹ்மணோ நாம ஈஸோஹம் ஸர்வ தேஹிநாம்; ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவான்***

***க*** என்பது சதுர்முக ப்ருஹ்மாவைக் குறிக்கும்;

ஸகல உயிரினங்களுக்கும் ஈசன் நான்;

நாங்கள் இருவரும் உன் திருமேனியிலிருந்து உண்டானபடியால், தேவரீருக்கு கேசவன் (க + ஈசன்) என்கிற திரு நாமம் ஏற்பட்டது.

ஆக, சதுர்முகன், ருத்ரன் ஆகியோரே ஸ்ருஷ்டி காலத்தில் உற்பத்திக்கு விஷயமாகும் போது, மற்ற தேவதைகளுக்கு, ஜகத் வ்யாபாரத்வம் ஸித்திக்க வாய்ப்பில்லை, என்பதாலும் ஜகத் வ்யாபாரத்வம் ***அந்ய யோக விவச்சேதமாக*** ஶ்ரீமந் நாராயணனுக்கே பொருந்தும் ; வேதவ்யாஸரின் ப்ருஹ்ம ஸூத்ரங்களில், ஜீவ ஈஸ்வர பேதம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

***ஜகத் வ்யாபார வர்ஜம் ப்ரகரணாத் அஸம்நிஹிதத் வாச்ச***

அதாவது, வகர்மாக்கள் தொலைந்த பின்பு முக்த ஜீவர்களுக்கு பரிபூர்ண ப்ருஹ்மானுபவம் உண்டு, ஆனால் ஸ்ருஷ்ட்யாதிகளன வ்யாபாரம் கிடையாது என்பதாலும்,

***போக மாத்ர ஸாம்ய லிங்காஸ்ச***

அதாவது, பரிபூர்ண ப்ருஹ்மானுபவம் ஸுக அனுபவத்தில் மட்டுமே என்பதாலும் தெளிவாகிறது.

6. ஜீவர்களுக்கு பகவத் சேஷத்வம் ***அயோக அந்ய யோக விவச்சேத*** பரமாக ஸாத்யம் :

# பராசர பட்டரின் அஷ்ட ஸ்லோகி :

***அகாரார்தோ விஷ்ணு: ஜகத் உதய: ரக்ஷா ப்ரளய க்ருத் ; மகாரார்தோ ஜீவ: தத் உபகரணம் வைஷ்ணவம் இதம் ; உகாரோ: அநன்யார்ஹம் நியமயதி சம்பந்தம் அநயோ: த்ரயி சாரஸ்த்ரயாத்மா ப்ரணவ இமம் அர்த்தம் ஸமதிஷத்***

அதாவது,

***அகாரார்தோ விஷ்ணு: ஜகத் உதய: ரக்ஷா ப்ரளய க்ருத்* -** உலகத்தை படைத்து காத்து அழிக்கும் செயலான ஜகத் வ்யாபாரத்தை அகார வாச்யனான விஷ்ணுவைக் குறிக்கும்

***மகாரார்தோ ஜீவ: தத் உபகரணம் வைஷ்ணவம் இதம்* -** மகாரம் விஷ்ணுவின் சேஷ பூதனான ஜீவனைக் குறிக்கும் ;

***உகாரோ: அநன்யார்ஹம் நியமயதி சம்பந்தம் அநயோ: -** உகாரத்தினால் அவதாரணம் ( ***ஏவ* - *மட்டும்* - *ONLY*** ) ஸித்திக்கும் ; அதனால் மகார வாச்யனான ஜீவன் அகார வாச்யனான எம்பெருமானுக்கே சேஷ பூதன் ஆகிறான் ; வேறொருவருக்கும் இல்லை என்பது ***அந்ய யோக வ்யவச்சேதத்தால்*** ஸித்தம்

***த்ரயி சாரஸ்த்ரயாத்மா ப்ரணவ இமம் அர்த்தம் ஸமதிஷத்* -** மூன்று வேத சாரத்திலும் ப்ரணவத்தில் உள்ள மூன்று அக்ஷரங்களினாலும் (அ, உ, ம) இந்த விளக்கம் சொன்னபடி.

# இதனை, ஸ்வாமி தேசிகன் மூல மந்த்ராதிகாரத்தில்,

***இம்மத்யம அக்ஷரம் ஸ்ரோத ப்ரயோகத்தாலே அவதாரண பரமான போது இத் தம்பதிகளை ஒழிந்தார்க்கு நிரூபாதிக சேஷம் என்று சங்கியாமைக்காக அந்ய யோக வ்யவச்சேதம் இங்கே சாப்தம்***

என அருளினார் ; அதாவது, ப்ரணவத்தில் உள்ள மூன்று அக்ஷரமாகிய அ, உ, ம என்கிறதில், உகாரத்துக்கு அவதாரணம் ( **ஏவ - மட்டும் - ONLY** ) என்கிற அர்த்தம் கொள்ளும் போது மகார வாச்யனான ஜீவன் அகார வாச்யனான எம்பெருமானுக்கே சேஷ பூதன் ஆகிறான்; வேறு ஒருவிருக்கும் இல்லை, என்பது * **அந்ய யோக வ்யவச்சேதத்தினால்*** ஸித்திக்கும்.

# கடோபநிஷத் கூறும் போது,

***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்***

என்று

***அ*** என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; ***உ*** என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு ***ம*** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் அனைத்து காலத்திலும் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

# ஆக, இதனை, ஸ்வாமி தேசிகன் மூல மந்த்ராதிகாரத்தில்,

***இப்படி அந்ய யோக வ்யவச்சேதம் சாப்தமாகப் பெற்றால் அயோக வ்யவச்சேதமும் கால ஸங்கோசம் இல்லாமையாலே ஸித்தம்***

என அருளினார் ; அதாவது, முன்பு சொன்னபடி உகாரத்தை அவதாரணமாகக் ( **ஏவ - மட்டும் - ONLY** ) கொள்ளும் போது, *அந்ய யோக வ்யவச்சேதம்* (அகார வாச்யனுக்கே மகார வாச்யன் சேஷன் ; மற்றவருக்கு இல்லை) ஸித்திக்கிறாப் போலே, இந்த *மகாரஸ்து தயோர் தாஸ:* (ஜீவன் திவ்ய தம்பதிஞுக்கு தாஸன்) என்று காலம் குறிப்படாத படியால், இந்த தாஸத்வம் நித்யம் என்பதாகிறது ; அதானல் * அயோக வ்யவச்சேதமும்* (ஜீவனுக்கு பகவத் சேஷத்வம் இல்லாத காலமே இல்லை) என்பதுவும் ஸித்தம்.

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

******

4.2.2023
சனி கிழமை

*ஸ்வப்ந தசையில் வஸ்துக்களின் நிலை  - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா*

1. தூங்கும் போது, மனம் தவிர்த்து, மற்ற அனைத்து புலன்களும், செயல் படாத காலத்தில், கனவு காணும் நிலையாகக் கருதப் படுகிறதே, அதுவே *ஸ்வப்ந தசை* எனப்படுகிறது. *மனம் எனும் புலனின் செயல் பாட்டால் ஸ்வப்னம் காண முடிகிறது; ஆனால் அப்போது,  சரீரமும் மற்ற இந்த்ரியங்களும் இயங்குவதில்லை*

*ஸ்வப்ந அஸ்தாநோ அந்த ப்ரஜ்ஞ ஸப்தாங்க ஏகோ நவிம் ஷதிமுக ப்ரவி விக்த புக்தைஜஸோ த்விதீய பாத*

என்கிறது ஸ்ரீ மாண்டூக்ய உபநிஷத். *ஸ்வப்ன நிலை* ; அதாவது,  பாஹ்ய விஷய அனுபவம் இல்லை -மனஸ் மட்டும் இயங்க, ப்ருஹ்மம், தர்ம பூத ஞானம் மூலம், ஸ்வப்ன ஸ்ருஷ்ட்டி செய்யும் தசை.

2. ஸ்ரீபாஷ்ய *ஸந்த்யாதிகரணம்* (3-2-3)

ஸ்வப்பன தசையில் ஸ்ருஷ்டிக்கப் படும் பதார்த்தம் பற்றிய விசாரம்.

*மாயா மாத்ரம் து கார்த்ஸ்யேந அநபிவ்யக்த ஸ்வரூபத்வாத்*

என்கிறது ஸுத்ரம்.

அதாவது, ஸ்வப்நத்தில் தேர் குளம் முதலிய பொருள்களை எல்லாம் மாயயால் மட்டுமே பரமாத்மாவால் ஸ்ருஷ்டிக்கப் பட்டன, என பொருள். இந்த ஸ்வப்ந பதார்த்த ஸ்ருஷ்டியில், உறங்குபவனைத் தவிர அவன் அருகில் உள்ள மற்றவர்கள் காண இயலாது. *ஸ்வப்னத்தில் கூட சின்ன பாப புண்யம் தொலைக்கப் படலாம்*.

3. இவ்விஷயத்தில் வரும் சங்கைகள் :

# ஸ்வப்ந தசையில் ப்ராக்ருத லோக சேதந அசேதந வஸ்துக்களின் உற்பத்தி ப்ரகாரம் ?

# ஸ்வப்ந்த்தில் தோன்றும் சேதநர்களின் தர்ம பூத ஞான விஷய தாத்பர்யம் !

# ஸ்வப்ந பதார்தங்கள் அத்வைதிகள் ப்ரபஞ்சத்தை சொல்வது போல மித்யா விஷயமா ? அதாவது தோற்றமா ?

4. *ஸ்வப்ந தசையில் ப்ராக்ருத லோக சேதந அசேதந வஸ்துக்களின் உற்பத்தி ப்ரகாரம் ?*

ஶ்ரீபாஷ்ய ஸந்த்யாதிகரணம் (3-2-1)

ஸ்வப்பன தசையில் ஸ்ருஷ்டிக்கப் படும் பதார்த்தம் பற்றிய விசாரம்.

***ஸந்த்யே ஸருஷ்டி: ஆஹஹி*** - பூர்வ பக்ஷ ஸூத்ரம்

ஸ்வப்ந பதார்த்தம் ஜீவனால் ஸருஷ்டிக்கப் படுகிறது ஏனெனில் வேதம் சொல்வதால்.

அதாவது, ***ஸந்த்யம் த்ருதீயம் ஸ்வப்ந ஸ்தானம்*** என்கிற வேத வரியினால்.

***நிர்மாதாரம் ச ஏகே புத்ராதய:*** - பூர்வ பக்ஷ ஸூத்ரம்

ஸ்வப்ந படைப்பாளியாக ஜீவன் சொல்லப் படுகிறான்.

ஸித்தாந்த ஸூத்ரமாவது :

***மாயா மாத்ரம் து கார்த்ஸ்யேந அநபிவ்யக்த ஸ்வரூபத்வாத்***

அதாவது,

ஸ்வப்நத்தில் தேர் குளம் முதலிய பொருள்களை எல்லாம் ப்ரக்ருதி பரிணாமமான மாயயால் மட்டுமே பரமாத்மாவால் ஸ்ருஷ்டிக்கப் பட்டன, என பொருள்.

5. *ஸ்வப்நத்தில் தோன்றும் சேதநர்களின் தர்ம பூத ஞான விஷய தாத்பர்யம் !*

கர்ம அநுகுணமாக தர்ம பூத ஞானமானது, ஸங்குசிதமான போது, அந்த சேதநனின் ஞானமானது, அதன் அளவே ஸ்வப்ந தசையிலும் வ்யவஹரிக்க ஸாத்யமாகும் என்பது ப்ரத்யக்ஷ ப்ரமாண ஸித்தம் ; மேலும், ஸ்வப்னங்கள் வர இருக்கும் நிகழ்வுகளுக்கு ஸூசகம் என்பது புராணங்களிலும் ஆழ்வார்கள் ஶ்ரீஸூக்திகளிலிருந்தும் தெளியலாம் :

**# நாச்சியார் திருமொழி பாசுரம் :**

***வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து நாரண நம்பி நடக்கின்றான் என்று எதிர் பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும் தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ நான்***

அதாவது, ஶ்ரீமந்நாராயணன் என்னை மணம் புரிவதற்காக நிச்சயித்து ஆயிரக்கணக்கான யானைகளைப் புறப்பட திருவீதிப் பிரதக்ஷிணமாக எழுந்தருளுகிற செய்தியை அறிந்த நகரத்திலுள்ளார் யாவரும் “பெரியவர்கள் எழுந்தருளும்போது பூர்ணகும்பம் வைக்கவேணும்“ என்ற சாஸ்த்ரவிதிப்படியும் சிஷ்டாசார முறைப்படியும் தங்கள் தங்கள் திருமாளிகைக்கெதிரில் பூர்ணகும் பங்களை வைத்தும் தோரணங்கள் நாட்டியும் இப்படிப்பலவகையாக மங்களாலங்காரங்கள் செய்வதாகக் கனாக்கண்டேன் தோழீ!

ஆக, ஸ்வப்னம் வர இருக்கும் ஆண்டாள் கல்யாணத்திற்கு சூசகம் என்றாயிற்று. இது நாச்சியார் திருமொழி (6ம் திருமொழி) 11 பாசுரங்களாலும் கனவில் கண்டவற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

**# மஹா ஸாத்வீகரான விபீஷணனின் புதல்வியான திரிஜடையையுத், அசோக வநத்தில், சீதை பிராட்டியைத் துன்புறுத்த ராவணன் நியமித்திருந்தான்.**

திரிஜடை அப்போது ஒரு கனவு கண்டாள் ;

ராவணன் தன் க்ருஹத்தில் வளர்த்து வந்த அக்னி ஹோத்திர அக்னி அணைந்து போவதாகக் கண்டாள்.

பேயும் கழுதையும் இழுத்துச் சென்ற தேரில் இரத்த ஆடையனாய் இராவணன் தென்திசை நோக்கி இறுதி யாத்திரை செய்வதைக் கனவில் அவள் கண்டாள்.

சிங்கங்கள் இரண்டு, புலிகளோடு வந்து யானைகளை அடித்துக் கொன்ற கனவும் வந்தது.

ஶ்ரீராமனும் இளைய பெருமாளும் ஹனுமனோடு வந்து இலங்கை வேந்தனை வெல்லும் நிகழ்ச்சி, இதில் உருவகப்படுத்தப் பட்டுள்ளது.

காட்டில் சிறைப் பட்டிருந்த தோகை மயில், விடுதலை பெற்று, விண்ணில் பறந்து சென்றது என்றும் கூறினாள்.

சோகத்தில் அகப்பட்டிருந்த சீதைக்கு விரைவில் விடுதலை கிடைக்கும் என்பதை அது தெரிவித்தது.

திருமகள், திருவிளக்கு ஒன்றனை ஏந்தி இராவணன் மனையிலிருந்து வெளிப்பட்டு வீடணன் கோயிலில் அடி எடுத்து வைத்தாள்.

ஆட்சி மாறும் ராவணன் வீழ்ச்சியை இக் கனவு உணர்த்தியது.

இதைக் கனவாகக் கண்ட திரிஜடை, சீதை பிராட்டியிடும் கனவின் உள் அர்த்த்தை வினவி அறிந்தாள். உடனே மற்ற ராக்ஷஸிகளுக்கும் விளக்கி,

*ததலம் க்ரூர வாக்யைர்வ: ஸாந்த்வமேவ அபிதீயதாம். அபியாசாம வைதேஹிமே தத்தி மம ரோசதே*

அதாவது, கொடிய சொற்களினால் சீதையை துன்புறுத்துவதை நிறுத்தி விடுங்கள், என பணித்தாள்.

6. *ஸ்வப்ந பதார்தங்கள் அத்வைதிகள் ப்ரபஞ்சத்தை சொல்வது போல மித்யா விஷயமா ?*

கர்ம பலன்கள் சம்சாரி ஜீவ ஸுக துக்க பலன்களாகும் ; அந்த ஸுக துக்க பலன்கள் அநித்யமாயும் துக்க கலப்போடும் இருக்கும் என்பது ப்ரமாணத்தால் ஸித்தம் ; ஸ்வப்ந பதார்த்தங்களும் பாப புண்ய கர்மத்தினால் உண்டாவதால், அவைகள் அநித்யமே அன்றி மித்யா என்பது பொருந்தாது

# கர்மாக்களான புண்யம் மற்றும் பாபம் என்ற சொல்லின் விளக்கம்:

*புண்யமாவது* இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்

*பாபமாவது* இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்

# கர்ம மீமாம்ஸை வரி :

*சாஸ்த்திர பலம் ப்ரயோக்தரி*

அதாவது, சாஸ்த்திரம் விதித்த கர்மாக்களை அனுஷ்டிப்பவனுக்கே அதற்காக சொல்லப் படுகிற பாப புண்ய பலன்கள் ஸித்திக்கும். அதாவது, சாஸத்திர விதிகளை மீறும் போது பாபங்களும், சாஸ்த்திர விதிகளை பின்பற்றும் போது புண்யங்களும் ஸித்திக்கும்

***ந புக்தம் க்ஷீயதே கர்ம கல்ப கோடி ஸதைரபி***

என்கிற சாஸ்த்திர விதிப்படி, கல்ப கோடி காலங்களானாலும், பாப புண்ய கர்மாக்கள் அனுபவியாமல் அழியாது.

# உலக விஷயங்கள் துக்கம் நிறைந்தது.

***கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்***

என்கிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (9-33)

'அர்ஜுனா ! நிரந்தரம் அற்றதாயும், துக்கமயமான இந்த உலக அநுபவத்தை விட்டு என்னை அடைவதற்காக என்னை குறித்து செயல்களை செய்.' என்று கண்ணன் இந்த ஸ்லோகத்தில் தெளிவு படுத்துகிறான்.

ஆக, ப்ராக்ருத பலன்களான வஸ்துக்களும் அநுபவமும் ஸத்யம் ; ஆனால் அநித்யம் ; துக்க கலப்புடையது.

# ஸ்வாமி தேசிக வ்ருத்தாந்தம் : ஒரு நாள், காலையில் ஶ்ரீநிவாஸன் ஸந்நிதி திறக்கப்பட்டது. அர்ச்சகர் உள்ளே சென்றார். திகைத்து நின்றார். ***கண்டை*** எனப்படும் மணியைக் காணவில்லை.

அந்த கோவில் அதிகாரிகள், இதற்காக அனைத்து அர்ச்சகர்களையும் தண்டிக்க நினைத்தனர்.

அதற்கான ஆயத்தமும் செய்தனர். அங்கு எழுந்தருளிய திருமலை ஜீயர்,

***திருமணியை, திருவேங்கடமுடையான் ஒரு தம்பதிகளுக்கு கொடுக்க அந்த அம்மையார் அதை விழுங்கி விட்டாள்***

என தம் கனவில் திருவேங்கடமுடையான் ஸாதித்ததை கூறினார். பலரும் இவ்வாறு கனவு, அனந்த ஸூரி தம்பதிகளுக்கு, ஏற்பட்டதாக கூறினார். கோவில் அதிகாரிகள் அனந்த ஸூரி தம்பதிகளை விசாரித்தனர். அதன் பிறகு அர்ச்சகர்களை தண்டிக்காமலே விட்டுவிட்டனர் கோவில் அதிகாரிகள்.

ஸ்வாமி தேசிகனின் திருக்குமாரரான ஶ்ரீ நயினாராச்சார்யர் அருளிச் செய்த ***ஶ்ரீ தேசிக மங்களம்*** என்பதில்,

***வேங்கடேச அவதாரோயம் தத் கண்டாம்சோ அதவா பவேத்! யதீந்த்ர அம்சோ அதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம்!!***

ஸ்வாமி ஶ்ரீ தேசிகனை, நித்யஸூரியான கண்டாவதாரமாகவும், திருவேங்கடவனின் அம்சம் கொண்டவராகவும் அருளப் பட்டிருக்கிறது.

ஆக, ஸவப்ந பதார்த்தங்கள் ஸத்யம் ; ஆனால் அநித்யம் என்பதாகிறது.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

5.2.2023
ஞாயிறு கிழமை

*அநாதியான ஸஹேதுக நிர்ஹேதுக க்ருபை - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா*

1. அநாதி என்கிற பதமானது, எப்போது துவக்கம் என்று சொல்லமுடியாத கால அளவை அநாதி என்பர்.

உதாரணமாக,

# சம்சாரி ஜீவர்களின் கர்மா அநாதி ; இந்த சம்சார பந்தத்தை விளக்கும் போது, ஸ்வாமி தேசிகன் *உபோத்காதாதிகாரத்தில்*

***கர்ம அவித்யாதி சக்ரே ப்ரதிபுருஷம் இஹ அநாதி சித்ர ப்ரவாஹே தத் தத் காலே விபக்தி: பவதி ஹி விவிதா ஸர்வ ஸித்தாந்த ஸித்தா***

என அருளினார். அதாவது, அந்தந்த உரிய காலங்களில், அநாதியாக கர்ம-அவித்யா-வாசனை-ருசி-ப்ரக்ருதி சம்பந்தம்  என்கிற சக்ரத்தில், ஒரு வட்ட வடிவத்தில், சுழன்று இருக்கும் சம்சாரி ஜீவன்களுக்கு, அவரவர்கள் கர்ம வினைக்கு ஏற்ப பலன்கள் பலவாறாக வருகின்றன. இந்த சம்சாரி ஜீவர்களின். கர்ம அனுகுணமான பிறப்புக்களுக்கு, தொடர்பு உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

***அவித்யை* -** சரீரத்தையே ஆத்மாவாகவும், ஆத்மாவை சுதந்திரனாகவும் நினைத்தல் போன்ற உண்மைக்கு மாறான எண்ணங்கள்.

***கர்மம்* -** அவித்ய்யையால் ஜீவன் செய்யும் சாஸ்த்திரத்தை மீறிய செயல்கள்.

***வாஸனை* -** அவித்யா மற்றும் கர்மம் காரணமாக ஜீவனுக்கு உண்டாகும் ஸம்ஸ்காரம் (தன்மை).

***ருசி* -** வாஸனைக்கு ஏற்ப உண்டாகும் செயலில் விருப்பம்.

***ப்ரக்ருதி சம்பந்தம்* -** மேலுள்ள நான்கு காரணங்களினால் உண்டாகும் ப்ராக்குத சரீர சம்பந்தம்.

இந்த சரீர சம்பத்தினால் மீண்டும் அவித்யை, கர்மம், வாஸனை, ருசி மற்றும் ப்ரக்ருதி சம்பந்தம். அதுவே மீண்டும் மீண்டும் ஏற்படும் பிறவி. இதையே பிறவிப் பிணி என்கிறோம். இச்சுழலே மோக்ஷ பலனுக்கு தடையாகிறது.

# ***பீஜாங்குர ந்யாயம்* -** விதை முதலில் வந்ததா அல்லது செடி முதலில் வந்ததா என்று அறிய முடியாதபடி அநாதியானது

2. ஜீவர்கள் அநாதியாவர்கள் என்பது ப்ரமாண ஸித்தம் ; ப்ருஹ்ம ஸூத்ர ஆத்மாதிகரணமானது,

***நாத்மா ஸ்ருதே நித்யத்வாச்சதாப்ய:***

என்பதால், ஜீவன் நித்யமாயும் அதன் ஞானம் ஸங்கோச விகாசங்களை உடையதாயும் இருக்கும் என விளக்கப் பட்டிருந்தது.

# கடோபநிஷத்தில்,

***நித்யோ நித்யானாம் சேதனஸ்சேதனானாம் ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான் தமாத்மஸ்தம் யேனுபஷ்யந்தி தீராஸ் தேசாம் சாஸ்வதீ நேதரேசாம்***

எந்த ஒன்று அழிவனவற்றுள் அழியாததாகவும், உயிரினங்களுக்குள் உயிராகவும், அனைவருடைய ஆசைகளையும் பூர்த்தி செய்கிறதோ, அந்த ஒன்றாகிய பரமாத்மாவை எந்த தீரர்கள் அறிகிறார்களோ, அவர்களுக்கு நிலையான அமைதி கிடைக்கிறது. மற்றவர்களுக்கு இல்லை,

# ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (2-20)

*ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந் நாயம் பூத்வா பவிதா வா ந பூய: அஜோ நித்ய: ஸாஸ்வதோSயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஸரீரே*

அதாவது,

'ஞானத்தை உடைய ஆத்மா எக்காலத்திலும் இறப்பதுமில்லை; இவன் ஒரு காலத்தில் இருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை; இவன் பிறப்பற்றான்; இவன் சாச்வதன்

என்பதால் ஞான சங்கோசங்களும், சரீர சேர்க்கையும் பிரிவும், கர்ம அனுகுணமாக உண்டாகிறது, என்பது ஸித்தாந்தம். ஆக, நித்யமான ஜீவர்களின் இருப்பு அநாதி என்பது தெளிவாகிறது.

3. பகவான் ஸஹஜ காருணிகன் என்பது ப்ரமாண ஸித்தம் :

# ச்வேதாசுதர உபநிஷத்தில்,

***ஸர்வேந்த்ரிய குணாபாஸாம் ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம் ஸர்வஸ்ய ப்ரபுமீசானாம் ஸர்வஸ்தம் சரணம் ஸுக்ருத்***

என்கிறது, அதாவது கருணைமிக்க ஸர்வேஸ்வரன் அனைவராலும் சரணம் புக ஏற்றவனாக உள்ளான்.

# தொண்டரடிப்பொடி ஆழ்வார், பகவத் ஸைஜ காருண்யத்தை, திருமாலையாக அருளியுள்ளார்.

***நாட்டினான் தெய்வம் எங்கும் நல்லதோர் அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம் கேட்டிரே நம்பி மீர்காள் கெருட வாகனனும் நிற்க சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்து இருக்கின்றீரே***

அதாவது, தேவதாந்தர வ்யாவ்ருத்தி உடைய எம்பெருமானை ஆழ்வார் விளக்கியுள்ளார் ; சாஸ்த்திர விதிகளை மதித்து நடப்பவர்களுக்கு ***பத்துடை அடியவர்க்கு எளியவன்*** என்னும்படியாகவும், சாஸ்த்திர விரோதிகளுக்கு ***பிறர்களுக்கு அறிய வித்தகன்*** என்னும் படியாகவும், விளக்கினார்.

***நாட்டினான் தெய்வம் எங்கும்* -** என்பதால், பலத்த துஷ்க்ருதத்தினால், தாழ்ந்த தேவதைகள் தெய்வமாக பாபாத்மாக்கள் ஆராதிக்கும் படி

***சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்து இருக்கின்றீரே* -** என்று, இவர்களின் சக்திக்குட்பட்ட சம்சார பந்தத்தை வளர்க்கக் கூடிய செல்வத்தை வேண்டி நிற்பதாக

ஆனால்,

***உய்பவர்க்கு உய்யும் வண்ணம்* -** முமுக்ஷுவிற்கு ஸித்தோபாயமாக நிற்கிறபடி

***நல்லதோர் அருள் தன்னாலே* -** அதாவது, இதனைத் தன் ஸஹஜ காருண்யத்தால்

***கெருட வாகனனும் நிற்க* -** ராஜாதிராஜனாக கருட வாகனத்தில் அமர்ந்திருக்கிற

*காட்டினான் திருவரங்கம்*- பெரிய பெருமாளை திருவரங்கத்திலே காட்டி,

ஆழ்வார் அருளுவதாவது, ஸ்வேஸ்வரன் பாபிஷ்டர்களை மோஹிக்கச் செய்து சம்சார பந்தத்தை நீடிக்கச் செய்து, மற்றவர்களுக்கு தன்னை அடைய வழியைக் காட்டி உபஹரிக்கிறான்.

# வேதவ்யாஸர், மஹாபாரதத்தில்,

*பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸனஸ்ய வக்தா நாராயண ஸ்வயம் ஸர்வேஷு ச ந்ருப் ஸ்ரேஷ்ட ஞாநீனீஷ் வேதேஷு த்ருஷ்யைதே*

என அருளினார்.

அதாவது, வேத சாரமான பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் தானே வெளியிட்டான், என்பதாகிறது. *நூற்றுக்கும் மேற்பட்ட ஸம்ஹிதைகள், பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில் உள்ளன*

# பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில்,

*ஸர்வக்ஞோ அபி விச்வேச: ஸதா காருணிகோபி ஸந். சம்சார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷிதே*

எனப்படுகிறது ; அதாவது, அனைத்தையும் நியமிக்கும் எம்பெருமான் ஸர்வக்ஞனாகவும் கருணை உள்ளம் கொண்டவனாயும் இருந்த போதிலும், லீலா விபூதியை நிர்வஹிக்கும் பொருட்டு ஸாத்யோபாயமான ரக்ஷக ப்ரார்த்தனையை எதிர் நோக்கியே இருக்கிறான்.

# இந்த சம்சார பந்தம் விலக, விளக்குமிடத்தில், ஆசார்ய சம்பந்தம் பெற,

*ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம், யத்ருச்சா ஸுஹ்ருதம் ததா, விஷ்ணோ: கடாக்ஷம், அத்வேஷம், ஆபிமுக்யம் ச ஸாத்விக: ஸம்பாஷணம், ஷடேதாநி: ஆசார்ய ப்ராப்தி ஹேதவ:*

என்ற ப்ரமாணத்தைக் கொண்டு, ஸ்வாமி ஶ்ரீ தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காத அதிகாரத்தில் அருளிச் செய்தார்.

அதாவது இயற்கையிலேயே ஜீவர்களிடம் கருணை கொண்ட எம்பெருமான், அவனை நல் வழி படுத்த ஒரு ஸதாசார்யனை அடைவிக்க, தருணத்தை எதிர் பார்த்து காத்திருக்கிறான் என பொருளாகிறது.

இதில் *ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம்* என்பதால், *ஆசார்ய ப்ராப்தி ஹேதவ:* என்னும்படியாக ஆசார்ய சம்பந்தத்துக்கு ஹார்தனனான எம்பெருமானின் ஸஹஜ காருண்யம் ப்ரதான ஹேதுவாகிறது.

4. திவ்ய தம்பதிகளின் ப்ரதான சரணாகத ரக்ஷண குணங்களாவது, அவர்களது பரத்வமும் (அதாவது, மோக்ஷம் அளிப்பதை தடுக்க வல்லார் யாரும் கிடையாது) மற்றும் ஸௌலப்யமும் (ஸகல ஜீவர்களிடம் தங்களுக்கு உண்டான இயல்பான சம்பந்தத்தினால் காக்கும் இயல்பை கொண்டவர்கள்)

# ஸ்வாமி தேசிகன் *ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்* ,

*நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ரியம் பாதகம்; அஸ்வதந்த்ரனுடைய காருண்யம் பரர்க்கும் அனுபகாரமாய் தனக்கும் க்லேசாவகமாய் இருக்கும் ; ஸ்வதந்த்ரனுடைய காருண்யம் நினைத்தது முடிக்கையாலே தனக்கும் அதிரஸமாய் ஆஸ்ரயிப்பார்க்கெல்லாம் அன்றே அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் உடலாய் இருக்கும்*

என அருளியுள்ளார். இதன் பொருளாவது: கருணை இல்லாதவனுடைய ஸர்வ சுதந்திரம் தீங்கை உண்டு பண்ணும் ; அதாவது, ***ஸௌலப்யம்*** அற்ற ***பரத்வம்*** கேடு விளைவிக்க காரணமாகும் ; சுதந்திரம் அற்றவனுடைய கருணை மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய், தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும் ; அதாவது, ***பரத்வம்*** அற்ற ***ஸௌலப்யம்*** மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய், தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும் ; கருணையோடு கூடின ஸர்வ சுதந்திரம் தனக்கு சந்தோஷிக்கத் தக்கதாயும் ; அதாவது, ***பரத்வம்*** மற்றும் ***ஸௌலப்யம்*** இரண்டும் சேர்ந்து இருக்குமாகில், அது தனக்கு சந்தோஷிக்கத் தக்கதாக இருக்கும் ; மற்றவருக்கும் உதவி பெறக் கூடிய வகையிலும் அமையும்.

# ஆக, பகவானுக்கு ***பரத்வத்தோடு கூடிய பரம காருணிகத்வம்*** ஸ்வாபாவிகம் - ஸகல ஜீவர்களிடம் இயல்பாக உள்ள கருணை. தன் அடியார்களின் குற்றத்தைப் பாராமல் ஏற்றுக் கொள்வது அவன் தன்மை - அஹங்காரம் கொண்ட ராவணனை ***யதிவா ராவண ஸ்வயம்*** என்று அருளியபடி, அவனை திருத்தி பணி கொள்ள செய்த ஸர்வ சேஷியான பகவானின் ஶ்ரீராமாவதார செயல்களும் அவனுடைய க்ருபா கார்யமே.

இதனால், சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்க வல்ல, அவனிடம் உள்ள, ஒப்புயர்வற்ற மூன்று ப்ரதான குணங்கள் வெளிப் படுகின்றன:

***வாத்ஸல்யம்*** - ஒரு சிறிய செயலாகிய சரணாகதி அனுஷ்டானத்தினால், தன் அடியார்களின் குற்றத்தைப் பாராமல் ஏற்றுக் கொள்வது

***ஸௌசீல்யம்*** - ஸர்வேஸ்வரனான கண்ணன், பாப புண்ய கர்மவஸ்யனான அர்ஜுன ன் போன்றவர்களுடன் கலந்து பழகுதல்; அர்ஜுனனுக்கு தேரோட்டியாய் பணி புரிதல்.

***ஸௌலப்யம்*** - மஹா யோகிகளுக்கும் எளிதில் கிடைக்கப் பெறாத தன் விஸ்வரூபத்தை, தனக்கு ப்ரியமான அர்ஜுனனின் ஆசைக்கு இணங்கி காட்டியது.

இப்படிப் பட்ட ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனையே  ஸர்வ விதங்களிலும் சரண்யன் என உணர்ந்து, அவன் சாஸ்த்திரத்தில் விதித்த சரணாகதி அனுஷ்டானத்தை, அவன் திருவடிகளில் செய்வதே முமுக்ஷுவான அகிஞ்சனனுக்கு செய்யப் ப்ராப்தம்.

***ஶ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே***

என்கிற பகவத் ராமானுஜரின் ***சரணாகதி கத்ய*** வரிகளால், ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன் திருவடிகளில் ஸ்வ நிஷ்டையாக சரணாகதி அனுஷ்டானம் செய்ததாயிற்று.

# விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில், சக்ரவர்த்தி திருமகன் வாக்கு :

***மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதௌ***

அதாவது, ‘தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்’. இங்கே ***ஸௌலப்யம்*** தெளிவிக்கப் படுகிறது.

# ராம ராவண யுத்தம் முடிவு பெற்ற பின்னர், திருவடியானவர் பிராட்டியை துன்புறுத்திய ராக்ஷஸஇகளை தண்டிக்க வந்த போது, பிராட்டியின் காருண்யத்தை, ஸீதா பிராட்டி, ராக்ஷஸிகளுக்கு பரிந்து பேசும், வரி கொண்டு தெளியலாம்:

***பாபானாம் வா ஷுபானாம் வா வதார்ஹாணாம் ப்ளங்கம கார்யம் கருணம் ஆர்யேண ந கஸ்சித் நாபராத்யதி***

பாபம் பண்ணவாளோ, நல்லவாளோ, வதம் பண்ணக் கூடிய அளவுக்குத் தப்பு பண்ணவாளோ, யாரா இருந்தாலும் மன்னிக்க வேண்டும். உலகில் ஒரு தப்புக் கூடப் பண்ணாதவன்னு யாருமே கிடையாது, அபராதமே செய்யாதவன்னு, ஒருத்தனுமே கிடையாது.

ஆக, பரம காருணிகனான ச்ரீயப்பதி ஸகல ஜீவர்களுக்கும் ரக்ஷகனாகிறான்.

5. சம்சாரி ஜீவர்களிடம் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ள ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணன், இந்த ஜீவர்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக, சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

அதாவது, அவனது க்ருபை (கருணை) இருவிதம்:

*நிர்ஹேதுக க்ருபை* (காரணம் இல்லாமல் வரும் கருணை)

*ஸஹேதுக க்ருபை* (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை)

ஆனால் இந்த இரண்டு க்ருபைகளுக்கும் உள்ள விஷயங்கள் வேறுபட்டிருக்கின்றன :

அதாவது,

# *நிர்ஹேதுக க்ருபை* (காரணம் இல்லாமல் வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஆத்மாவை நித்யமாக வைத்திருத்தல், அவனது ஞானத்தை நித்யமாக வைத்திருத்தல், ப்ரளய தசையில் அசித் துல்யமாக இருந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரத்தையும் புலன்களையும் கொடுக்க ஸங்கல்பித்தல், இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்குதல், சம்சாரி ஜீவர்களின் நலனுக்காக சாஸ்த்திரத்தை வெளியிடுதல், அந்த சாஸ்த்திரத்தில் எளிமையான மோக்ஷ வழியை அமைத்துக் கொடுத்தல், முக்தரை ஶ்ரீவைகுண்டத்திலிருந்து மீண்டும் சம்சாரதிதிற்கு அனுப்பாமல் இருத்தல் போன்றவைகள் எம்பெருமானுக்கே உள்ள, ஜீவர்களிடம் எதையும் எதிர் பார்க்காத, ஒரு கருணையின் காரியம்.

# *ஸஹேதுக க்ருபை* (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரத்தில் விதித்த கார்யங்களை செய்து போகின்ற சம்சாரி ஜீவர்கள் பக்கலிலே உண்டாகும் கருணை. அதாவது, ஸஹேதுக க்ருபைக்கு காரணமாவது, அவனால் சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்ட, விதி (செய்ய வேண்டுவன) மற்றும் நிஷேத (செய்யக் கூடாதவன) என்கிற பாகுபாடு, பயன் உள்ளதாக இருப்பதற்கு.

# ஸர்வேஸ்வரனான கண்ணன் சரமஸ்லோகமாக பகவத் கீதையில் (18-66) அருளிவதாவது,

***ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:***

அதாவது,

இஷ்ட பலனுக்காக, ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிற நீ, அந்த சாதன உபாயத்தை விட்டு என் ஒருவனையே சரணமாகப் பற்று; அந்த பலனுக்கு தடையான அனைத்து பாபங்களில் இருந்தும் உன்னை விடுவிக்கிறேன். இதில், *ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என கண்ணன் அருளியது, *நிர்ஹேதுக க்ருபையால்* மோக்ஷ காரணமாக, ஒரு லகு உபாயத்தை விதித்து, பரம காருணிகனான எம்பெருமான், அம்முகத்தாலே, பல கோடி ஜந்மாக்களை பெற வழியாக்கும் கர்மாக்களை, தன் *ஸஹேதுக க்ருபையாலே* சரணாகதன் விஷயத்தில் களைகிறான், என்றபடி.இதனை சாஸ்த்திரம் கொண்டு அறிய வேண்டும்.

# பாஞ்சராத்ர சாஸ்த்திர அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில்,

***யத்யேன காமகாமேந ந ஸாத்யம் ஸாதாநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேன யோகேந ந ச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேனைவ மஹாமுனே பரமாத்மா ச தேனைவ ஸாத்யதே புருஷோத்தம:***

எனச் சொல்லப் பட்டது. அதாவது,

தான் விரும்பிய பலனை, எவனால் அதற்கான உபாயத்தைக் கொண்டு அடைய முடியாதோ, முமுக்ஷுவால் எந்த பக்தி யோகத்தை அனுஷ்டித்து மோக்ஷ பலனை பெற முடியாதோ, மஹாமுனியே! அவன் ப்ரபத்தியை அனுஷ்டித்து பலனைப் பெறுகிறான். முமுக்ஷுவானவன் திரும்பி வருதல் இல்லாத புருஷோத்தமனையும் ப்ரபத்தியாலே அடைகிறான்.

# ஆக, ஜீவர்கள் நித்யம் ; அதனால் ஜீவர்கள் அநாதி (எப்போது துவக்கம் என்று சொல்ல முடியாத கால அளவு கொண்டவர்கள்) ; எம்பெருமானுக்கு ஜீவர்களிடம் உள்ள ஸஹஜ காருண்யம் ப்ரமாண ஸித்தம் ; ஆக, அநாதியான ஜீவர்களிடம் எம்பெருமானின் க்ருபை அநாதி எனக் கூறக் குறையில்லை ; ஸ்வாமி தேசிகன், இவ்விஷயத்தை ***ஸித்தோபாய சோதநாதிகாரத்தில்*** விளக்குகிறார்.

***இப்படிப் பட்ட க்ருபாவிசிஷ்டனான ஈஸ்வரன் 'க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்' என்கிறபடியே ஸித்தோபாயம். இவனுக்குப் ப்ரஸாதனதங்களான பக்தி ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள்***

இதன் பொருளாவது :

***இப்படிப் பட்ட க்ருபாவிசிஷ்டனான ஈஸ்வரன்*** **-** இவ்வாறு இரு வகையான நிர்ஹேதுக ஸஹேதுக க்ருபையை இயல்பாகக் கொண்ட ஸ்வ சேஷியான எம்பெருமான்

***க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்*** **-** வ்யாஸ பகவான் மஹாபாரதத்தில், ***யே ச வேத விதோ விப்ரோ யே ச அத்யாத்ம விதோ ஜநா: தே வதந்தி மஹாத்மானம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்*** என அருளினார். அதாவது, எந்த அந்தணர்கள் வேதத்தின் முன் பாகத்தை அறிகிறார்களோ எந்த ஜனங்கள் பரமாத்ம விஷயமான உபநிஷத் பாகத்தின் அர்த்தத்தை உணர்கிறார்களோ அவர்கள் ஸர்வேஸ்வரனான கண்ணனையே ஸநாதன தர்மமாகச் சொல்லுவர்.

# ***என்கிறபடியே ஸித்தோபாயம்*** **-** என்கிற ப்ரமாணத்தால், அவன் நிர்ஹேதுக ஸஹேதுக க்ருபை காரணமாக பலன் அளிப்பவனாகிறான்

# ***இவனுக்குப் ப்ரஸாதனதங்களான பக்தி ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள்*** **-** இந்த பலனை, தன் ஸஹேதுக க்ருபையால், அளிக்க அவன் விதித்த உபாயங்களான உபாஸநம் மற்றும் ப்ரபத்தி, ஜீவர்களால் அநுஷ்டிக்க வேண்டுவது

இதனால் தெளிய வேண்டுவதாவது, அநாதியான ஜீவர்களிடம் ஸஹஜ காருண்யம் கொண்ட (நிர்ஹேதுக மற்றும் ஸஹேதுக க்ருபா விசிஷ்டனான) எம்பெருமானின் க்ருபையையும் அநாதி (எப்போது துவக்கம் என்று சொல்ல முடியாத கால அளவு கொண்டவர்கள்) எனக் கூறக் குறையில்லை.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******

5.2.2023
ஞாயிறு கிழமை

*பர்மாண ப்ரமேய ப்ரதியோகி - விளக்கம் - விவாத மேடை விஷயம் - ஒலி நாடா*

1. ப்ரமாணமாவது நம்பத் தகுந்த அத்தாட்சி - ப்ரமாணங்கள் மூன்று வகைப்படும். அவை:

# *ப்ரத்யக்ஷம்* : நம் புலன்களைக் கொண்டு ஒரு உண்மையை அறியும்போது, நம் புலன்கள் ப்ரத்யக்ஷ ப்ரமாணமாகும்.

*ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் உண்டாகும் அறிவு* - நம் புலன்களால் அறியக் கூடியவை - உதாரணமாக, 'என் கண்ணால் பார்த்தேன்' என்றும், 'என் காதால் கேட்டேன்' என்றும் உறுதி அளிக்க நாம் கூறக் கேட்டிருக்கிறோம்.

இதில், புலன்களின் செயல்கள் முக்கியமாகிறது ; ஆனால், புலன்களின் குறைபாடுகள் *விபரீத ஞானத்திற்கு* ஹேதுவாகிறது.

# *அனுமானம்* : ஒரு விஷயத்தை அனுமானித்து ஒரு உண்மையை அறிகிறோம் என்றால் அது அனுமான ப்ரமாணமாகும்.

*அனுமான ப்ரமாணத்தினால் உண்டாகும் அறிவு* - ஒரு காலத்தில் நாம் புலன்களால் அறிந்தவற்றை வேறொரு காலத்தில் நாம் அனுமானிக்கிறோம் - உதாரணமாக, ஏதோ ஒரு காலத்தில் மழை பெய்வதையும் அதனால் ஏற்படும் தண்ணீர் தேக்கமும் சேர்த்து கண்ட நாம், வேறொரு காலத்தில் தண்ணீர் தேக்கத்தைக் கண்டவுடன் அங்கு மழை பெய்திருந்ததாக அனுமானிக்கிறோம்.

இதில், ஹேது-ஸாத்ய சம்பந்தம் முக்கியமாகிறது ; அதன் குறைபாடுகள் *விபரீத ஞானத்திற்கு* ஹேதுவாகிறது. உதாரணமாக : தண்ணீர் தேக்கமானது, மற்ற காரணங்களினாலும் (தண்ணீர் வாகனத்திலிருந்து வெளியேறியதாலும்) உண்டாக வாய்ப்புண்டு.

# *சப்த ப்ரமாணத்தால் உண்டாகும் அறிவு* - ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானத்தால் நிச்சயிக்கப் பட முடியாதவற்றை, நம்மிடம் அளவு கடந்த அன்பு உடைய, ஒரு நற் பலனையும் நம்மிடம் எதிர்பார்க்காத, நம் நலனில் மட்டுமே ஆர்வம் கொண்ட ஒருவரால் சொல்லப் படும் நல்வார்த்தையைக் கொண்டு நம்புகிறோம் - ஆக, வைதீக மதங்கள், வேத வேதாந்தங்களான சப்த ப்ரமாணமாகக் கொண்டு, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களை வாதிட இயலும்.

ஒரு குணவதியான தாய், தன் குழந்தையிடம் அந்த குழந்தையின் தந்தையை அறிமுகப் படுத்தவதை ப்ரத்யக்ஷ அனுமானத்தினால் அறியப்பட முடியாத 'சப்த ப்ரமாணம்' ஆகும்.

ஆக, ஸர்வேஸ்வரனையும் அவனது ஆணைகளையும் சப்த ப்ரமாணத்தைக் கொண்டே அறிய வேண்டும். அதாவது, வேத வேதாந்த சாஸ்த்திரங்கள். அதனால் தான்,

*மாதாபித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் சாஸ்த்ரம்*

எனப் படுகிறது ; அதாவது, ஆயிரம் மாதா பிதாக்களைக்காட்டிலும் ,சாஸ்த்ரம் நம்மிடம் வாத்ஸல்யம் கொண்டது என்பது இதன் அர்த்தம்.

இதில், சப்த ப்ரமாணத்தை, முன் பின் விரோதமற்று க்ரஹிக்கும் போது, அது சம்சய விபர்யயம் அற தெளிவிக்க உகந்தது.

# ப்ரமாணங்களால் அறியப்படுவது *ப்ரமேயம்*

லோக விஷயத்தில், ப்ரமாணமே ஆதாரமாகிறது ; அதனால் அறியப் படுவது, உண்மை நிலை.

நீதி மன்றங்களில், குற்ற வழக்குகள், பதிவாகும் போது, ப்ரமாண ப்ரமேயங்களாவது :

ப்ரமாணம் : ***சாக்ஷியங்கள்***

ப்ரமேயம் : ***அதனால் நிரூபிக்கப் படும் குற்றம்***

***ப்ரத்யக்ஷ ப்ரமாணம்*** - நிகழ்ச்சியை நேரில் பார்த்து சொல்லப் படும் சாட்சி (Eye Witness) ; குறுக்கு விசாரணையில், இந்த ப்ரத்யக்ஷ ப்ரமாணம் குறை அற்றதா என தெளிய வேண்டுவதாகிறது.

***அனுமான ப்ரமாணம்*** - குற்றத்திற்கான நோக்கம் (Motive) ; குறுக்கு விசாரணையில், இந்த அனுமான ப்ரமாணமான நோக்கம் குற்றத்திற்கான காரணமா என அறிய வேண்டுவதாகிறது.

***சப்த ப்ரமாணம்*** - இதற்கு சப்த ப்ரமாணம் கிடையாது ; ஆனால், குற்ற நிகழ்வுக்கு சூழுநிலை ப்ரமாணமாகிறது (Circumstancial Evidence) ; இது பொதுவாக ஏற்கப் படக் கூடியது.

# புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆத்ம விஷயத்தில், இந்த ***சப்த ப்ரமாணங்கள்*** எவை என்றால் வேதம் மற்றும் உபநிஷத்துக்கள் ; மேலும் உப ப்ருஹ்மணங்களான ஸ்ம்ருதிகள், இதிஹாஸ புராணங்கள், ஆழ்வார்கள் பாசுரங்கள் மற்றும் அவற்றுக்கு ஆசார்யர்கள் செய்த வ்யாக்யானங்கள் அனைத்தும் ***சப்த ப்ரமாணங்களாகும்***. ஆக,

***ப்ரமாணம்*** : வேத வேதாந்த சாஸ்த்திரங்கள்

***ப்ரமேயம்*** : வேத வேதாந்தங்களில் விதிக்கப் பட்ட நியதிகள்

# ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (15-15) சாஸ்த்ர ப்ரமாணம் அவனையே ப்ரமேயமாகக் காட்டுகிறது என வலியுருத்துகிறான் :

***வேதேஸ்ச ஸர்வே அஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேத விதேவ சாஹம்***

அதாவது,

வேதத்தால் அறியப் படுபவனும் பலன் தருபவனும் நானே, என வலியுருத்துகிறான். வேத ப்ரமாணத்தால் அறியப்படும் ப்ரமேயம் ஸர்வேஸ்வரனே, என்றாகிறது.

2. ***ப்ரதி*** என்கிற பதம் விஷய சம்பந்தமான, சார்ந்தாகவும் இருக்கலாம் ; அல்லது அதே விஷயத்துக்கு எதிராகவும் இருக்கலாம். இப்போது, ***ப்ரதியோகி*** என்கிற பதத்திற்கு அகராதியில், அர்த்தங்கள் காணின், பல உள்ளன :

# ***போட்டியாளர்*** - விளையாட்டு, பேச்சுப் போட்டி போன்றவற்றில்

# ***பங்கேற்பாளர்*** - கூட்டு முயற்சியில் அங்கம் வகிப்பவர்

# ***எதிர்ப்பாளர்*** - வாதங்களில் விரோத கொள்கைகளை வெளிப்படுத்துபவர்

# ***எடுத்துக்காட்டு*** - பிறர் பின்பற்ற முன்டோடியாக இருத்தல்

ஆக, ஒரு விஷயத்தை வ்யவஹரிக்கும் போது, ***ப்ரதியோகி*** என்பதாவது, அதைச் சார்ந்ததாகவோ அல்லது விரோதிப்பதாகவோ அல்லது மாற்று தன்மை கொண்டதாகவோ இருக்கலாம்.

ஸம்ப்ரதாய உதாரணமாக,

ப்ரணவம் மூன்று அக்ஷரம் கோண்டது; அதாவது ***அ***, ***உ*** மற்றும் ***ம*** என்கிற அக்ஷரங்கள்.

கடோபநிஷத் கூறும் போது,

***அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேணோவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்***

என்று

***அ*** என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; ***உ*** என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு ***ம*** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

அதாவது, மகாரவாச்யனான ஜீவன் திவ்ய தம்பதிகளுக்கு தாஸனாகிறான் என்னும் போது, ஜீவனுக்கு ***ப்ரதியோகியாகிற*** திவ்ய தம்பதிகள் ஸ்வாமி ஆகிறார்கள்.

3. இந்த ***ப்ரமாணங்களை*** நமக்கு எடுத்துரைத்து, ***ப்ரமேயத்தைக்*** காட்டுத்தரும் ஆசார்யர்களே ***ப்ரமாதாக்களாவர்***

# சப்த ப்ரமாணமான வேத வேதாந்தங்களும் அதன் உப ப்ருஹ்மணங்களும், ஒரு ஸத் ஆசார்ய அனுக்ரஹத்தாலே தெளிவைக் கொடுக்கும்.

***சாஸ்த்திர ஞானம் பஹு க்லேசம் புத்தே: சலன காரணம் உபதேசாத் ஹரிம் புக்த்வா விரமேத் ஸர்வ கர்மஸு***

என்கிறபடி,

மனவுருதி அற்ற சாமான்ய சம்சாரி ஜீவர்கள், பல விதமான சாஸ்த்திர வரிகளுக்கு அர்த்த நிர்ணயம் செய்வது கடினம். அவ்வர்த்தங்களில் கலக்கம் ஏற்படும்.

அதனால், அவர்கள், தெளிவான தத்வ ஞானம் கொண்டு ஸதாசார்ய பரம்பரையில் வந்த தன் ஆசார்யன் முகத்தாலே மிக முக்கியமான சாஸ்த்திர விஷயங்களை பிழையற கற்று அறிய வேண்டும்,

என்கிறது, ஸ்வாமி தேசிகனின் ***தத்வ த்ரய சிந்தனாதிகார*** வரிகள்.

# யக்ஷன் தருமரிடம் நூறு கேள்விகள் கேட்டான்.

அதில்,

***அனுஷ்டிக்க வேண்டிய தர்மம் என்பதை எதைக் கொண்டு நீ தீர்மானிக்கிறாய்?***

என்று யக்ஷன் வினவினான்.

அதற்கு தர்மர்,

***ஸ்ருதிர் விபின்னா ஸ்ம்ருதயோ விபின்னா: நைகோ முனி: யஸ்ய மதம் ப்ரமாணம். தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம் மஹா ஜநோ ஏன கத: ஸ பந்தா:***

என பதிலளித்தார். அதாவது, வேதங்கள் ஒன்றுக்கொன்று முரண் பட்டவை போல் தோன்றுகிறது. ஸ்ம்ருதிகளும் அவ்விதமே. ரிஷிகளோ பலர். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை பேசி வைக்கின்றனர். தர்மம் குகையில் அடைக்கப் பட்டது போல் ரஹஸ்யமானதாக உள்ளது. ***ஆகையால் மஹான்களின் மார்க்கத்தையே தர்மமாக பின்பற்றுகிறேன்*** என்றார்.

***ஆக, ஞான அனுஷ்டான சீலர்களான சிஷ்டர்களின் ஆசாரமே சிறந்த ப்ரமாணம்*** என்பதாகிறது.

4. ஆக, ஸர்வேஸ்வரனை நாம் ப்ரமாணம் கொண்டு அறிய வேண்டும் ; வேத வேதாந்தங்களை ப்ரமாணங்களாக ஏற்கும் பல மதங்களில் ப்ரமேயமான ஈஸ்வர தத்வ விஷயத்தில் தெளிவு இன்மை ஏற்படுகிறது ; **ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், பரதேவதா பாரமார்த்யத்தை, ஸங்க்ரஹிக்கிறார் :**

***ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகசமதிகதா துல்ய தைக்யம் த்ரயாணாம் அந்யத்ர ஐஸ்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ ஆத்ரியந்தே ந சந்த த்ரயந்தை ஏக கண்டை தத் அனுகுண மனு வியாச முக்ய உக்திபி ச ஸ்ரீ மான் நாராயணோ ந பதி அகிலதநு முக்தித முக்த போக்ய***

அதாவது,

பல வைதீக மதங்கள் (வேத வேதாந்தத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்ட மதங்கள்) பரம்பொருள் யார் என்பதை பலவிதமாக அறிவிக்கின்றனர்.

# ***ஆத்மைக்யம்*** என்கிற பதம் கொண்டு - அனைத்து ஆத்மாக்களும் ஒன்றே - ஜீவன் வேறு ஈஸ்வரன் வேறு என்பது கிடையாது என்கிற அத்வைத பக்ஷம்

# ***தேவதைக்யம்*** என்கிற பதம் கொண்டு - வேத வேதாந்தங்களில் கூறப்படும் அனைத்து தேவதைகளும் ஒரே ஈஸ்வரன் என்கிற பக்ஷம்

# ***த்ரிகசமதிகதா துல்ய*** என்கிற பதம் கொண்டு - மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரும் ஞானம் சக்தி முதலியவற்றை சமமாகக் கொண்ட ஈஸ்வரன் என்கிற பக்ஷம்

# ***த்ரயாணாம் ஐக்யம்*** என்கிற பதம் கொண்டு - மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரும் ஒரே ஈஸ்வர தத்வத்தின் பல ரூபங்கள் என்கிற பக்ஷம்

# ***அந்யத்ர ஐஸ்வர்யம்*** என்கிற பதம் கொண்டு - மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரைக் கட்டிலும் உயர்ந்த பரம் பருளான ஈஸ்வரன், என்கிற பக்ஷம்

# ***இத்யாதி*** என்பதால் - இது போன்ற பக்ஷங்கள்

# ***அநிபுணா பணிதீ ஆத்ரியந்தே ந சந்த*** என்பதால் - அப்பக்ஷங்கள் அனைத்தும் வேத வேதாந்தங்களை முறையோடு கல்லாதவர் கூற்று என வேதமறிந்த நிபுணர்கள் எற்பதில்லை

# ***த்ரயந்தை ஏக கண்டை*** என்பதால் - உபநிஷத்துக்கள் ஒரே குரலில் கூறுவது என்னவென்றால்,

# ***தத் அனுகுண*** என்பதால் - மேலும் அந்த உபநிஷத்துக்களுக்கு அனுகுணமாக

# ***மனு வியாச முக்ய உக்திபி ச*** என்பதால் - மஹரிஷிகளான மநு, வ்யாஸர் போன்றவர்களின் விளக்கம் என்னவென்றால்

# *ஸ்ரீ மான் நாராயணோ ந பதி* என்பதால் - பெரிய பிராட்டியோடு கூடிய ஸ்ரீமந் நாராயணனே அனைவருக்கும் ஆத்மா (அதாவது பரமாத்மா)

# *அகிலதநு* என்பதால் - அவனே ஸகல சேதன அசேதன வஸ்துக்களையும் தனக்கு சரீரமாகக் கொண்டவன்

# *முக்தித முக்த போக்ய* என்பதால் - அவனே சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷம் அளிப்பவனாயும் மோக்ஷத்தில் அனுபவிக்கப் படுபவனாயும் இருக்கிறன்,

என்பதாயிற்று.

# ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தை ஏற்கும் ஏகதேசிகளால், அவர் அருளிய ஸாத்யோபாய அநுஷ்டானத்தையும், பிராட்டியின் ஸித்தோபாயத்வத்தை ஸஹிக்க முடியாத போது, ப்ரமாணத்தால் ப்ரமேயத்தை க்ரஹிக்க, தெளிவான ப்ரமாண ஞானம் தேவையாகிறது ; இதிஹாஸ ஸமுச்சயத்தில், வ்யாஸ மஹரிஷி,

***ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்***

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

# அதனால், ஸகல உபநிஷத் சாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (4-34)

***தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஷ்னேன ஸேவயா. உபதேஷ்யந்தி தே ஞானம் ஞாநிநஸ் தத்வதர்ஷிந:***

அதாவது,

ஆத்ம ஞானத்தை பெற விரும்பும் நீ அந்த ஞானத்தை பிழையற உணர்ந்த தத்வ வித்துக்களான பெரியோர்களிடம், ப்ரணாமாதிகளை செய்து பணிவுடன் அடங்கி கேட்டு அறிய வேண்டும்.

5. ஆக, ப்ரமேய அநுபவம் முமுக்ஷுவிற்கு உசிதமானாலும், திருமழிசைபிரான் அருளிச்செய்த ***நான்முகன் திருவந்தாதியில்***

***தரித்திருந்தேனாகவே தாரா கணப்போர், விரித்துரைத்த வெந்நாகத் துன்னை, - தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது***

கூறியபடி

எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களைப் பற்றிய விஷயங்களை ***ப்ரமாண பூர்வகமாக வாசித்தும், கேட்டும்*** அதற்கு மேல் ***ப்ரமேயமான அவனை வணங்கி, வழிபட்டும், பூஜித்தும்*** பொழுதை போக்க வேண்டுவதே உத்தரக்ருத்யம்.

ஸ்ரீ ராமாநுஜர் தன் ஸத் சிஷ்யர்களிக்கு, தனது அந்திம தசையில், உத்தரக்ருத்யத்தை விளக்கினார் ; ஸ்ரீபாஷ்யகாரர் சொன்ன விஷயத்தை, ஸ்ரீஸ்வாமி தேசிகன் தமது ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்ததாகவே ஐந்து உத்தரக்ருத்ய கைங்கரியங்களைச் சுட்டிக் காண்பித்திருக்கிறார்:-

ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்.

அதுக்கு யோக்யதை இல்லையாகில் அருளிச்செயல் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல்.

அதுக்கு யோக்யதை இல்லையாகில் உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி திருவிளக்கு திருமாலைகளை உண்டாக்குதல்.

அதுக்கு யோக்யதை இல்லையாகில் த்வயத்தினுடைய அர்த்த அநுஸந்தானம் பண்ணுதல்

அதுக்கு யோக்யதை இல்லையாகில் என்னுடையவன் என்று அபிமானிப்பான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்திலே ஒதுங்கி வர்த்தித்தல் செய்யலாம்.

# இதில், ஸ்ரீ ராமாநுஜர் தனது ப்ராசார்யனான ஸ்வாமி நம்மாழ்வார் க்ரந்த அநுபவத்தை இரண்டாவதாகக் கூறி, முதலில் தனது க்ரந்தமான ஸ்ரீ பாஷ்யத்தை க்ரஹிக்கும் படி அருளினார் ; ***ஸ்ரீ பாஷ்ய க்ரந்தமானது, ப்ரமாண பூர்வகமாக, ஆத்ம ஞானத்தை விளக்கக் கூடியது*** :

***பர தத்வம் ஸ்ரீமந் நாராயணனே* -**

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

***அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி***

எனக் கூறி, பிராட்டியின் தன்மை எம்பெருமானைப் போன்றதே என்கிறார்.

***பரம ஹிதமானது அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அனுஷ்டானம்* -**

உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸுத்ரங்கள்

***நாநா சப்தாதி பேதாத் ; விகல்ப: அவிஸிஷ்ட பலத்வாத்***

என்கின்றன; அதாவது பலவாறாக உள்ள ஸகல ப்ருஹ்ம வித்யைகளுக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

***பரம புருஷார்த்தமானது பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்* -**

ஸ்ரீராமானுஜரின் ஸ்ரீ பாஷ்ய விளக்கமானது, முக்தர்களுக்கு பரிபூர்ண ப்ருஹ்மானுபவம் ஸ்ருஷ்ட்யாதிகளைத் தவிர. அதாவது,

***போக மாத்ர ஸாம்ய லிங்காஸ்ச***

பரிபூர்ண ப்ருஹ்மானுபவம் போகத்தில், என விளக்கினார்.

# இப்படி ப்ரமாணத்தை சரிவர உணராத போது, ஆழ்வார் அருளிச் செயல்களில் உள்ள பகவத் விஷயத்தை விபரீதமாக அநுபவிக்க வழி உண்டு ; பல ப்ரமாணங்கள், ஈஸ்வரனை பல ப்ரகாரங்களில் கூறும் போது, பிராட்டி விசிஷ்டன் எனக் கூறாதிருப்பது, ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் கலக்கத்துக்கு ஹேதுவாகிறது :

***மாம் ஏகம் சரணம் வரஜ* -** என் ஒருவனையே சரணமாகப் பற்று - என்றான் கண்ணன்.

தைத்ரீய உபநிஷத்தில்,

***நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருஸ்யதே ஸ்ரூயதேபி வா அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:***

என்கிறது. அதாவது, நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனே பரதத்வம், நாராயணனே பரஞ்சோதி, நாராயணனே பரமாத்மா, இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாக எந்தெந்தப் பொருள்கள் உள்ளனவோ, அவையனைத்திலும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குபவன் நாராயணனே.

இப் ப்ரமாணங்களை தனியே ஆராய்ந்து, ***அகலகில்லேன்*** என்னும்படியாக பிராட்டி விசிஷ்டனான எம்பெருமானே பரம்பொருள் என்பதனை யுக்தி வாதங்களினால் நிரஸிக்கும் போது, ஸித்தாந்த பூர்பக்ஷிகள், மற்ற சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாண விரோத நோக்கை கொள்வதால், அது ஸ்ரீ ராமானுஜ ஸித்தந்த க்ரந்த நோக்கோடும் விலகுகிறது.

# ஸ்வாமி தேசிகன், ***சாஸ்த்ரீய நியமனாதிகாரத்தில்***

***ஆக்ஞா அநுக்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய பத்ததி: நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத் தத் பல ஆப்தயே***

என அருளியுள்ளார். அதாவது,

சாஸ்த்ரங்களில் கூறப்ப ட விதிமுறைகள் ***ஆக்ஞை*** (செய்தே தீர வேண்டும்) மற்றும் ***அநுக்ஞை*** (செய்தால் பலன் விளையும்) என்று இரு வகைப்படும்.

***ஆக்ஞா கைங்கர்யம்*** (செய்தே போக வேண்டிய நித்ய நைமித்திக கர்மாக்கள்)

***அநுக்ஞா கைங்கர்யம்*** (கோவிலில் பகவத் கைங்கர்யம், புனித நதியில் நீராட்டம் போன்றவை)

# ப்ரமாணத்தில் தெளிவில்லாத போது, அநுக்ஞா கைங்கர்யமான ப்ரமேய அநுபவத்தில் குறைபாடுகள் உண்டாக வழி உண்டு ; இது ப்ரத்யவாயகரம் ; ஸ்வாமி தேசிகன், ***சாஸ்த்ரீய நியமனாதிகாரத்தில்***

***அநுக்ஞயா ப்ரவ்ருத்தே அபி கர்ம கோப ஆதி ஸம்பவே ஆக்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய:***

என அருளினார் ; அதாவது, அநுக்ஞை விதியால் தொடங்கப்பட்ட கைங்கர்யம் என்ற போதும், அதில் ஏதேனும் முறை தவறுதல் போன்ற குற்றங்கள் உண்டானால், ஆக்ஞையை மீறினால் எந்த விதமான தோஷங்கள் உண்டாகுமோ, அதுவே உண்டாகும் .

ஆகவே சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கட்டுப்பாட்டுகளை மீற இயலாதவை ஆகும் .

உதாரணமாக, பெருமாளுக்கு துளஸி ஸமர்ப்பிப்பது ஒரு உன்னதமான அனுக்ஞா கைங்கர்யம், ஆனால், துளஸி க்ரஹிப்பதற்கு (பரிப்பதற்கு) சாஸ்த்ர விதிமுறைகள் உண்டு. ஸ்நாநம் செய்து மந்த்ர உபதேசம் பெற்ற மந்த்ரத்தை உச்சரித்து, உரிய தினங்களில் (வெள்ளி, செவ்வாய், ஞாயிறு, பித்ரு தினங்கள், வ்ரத தினங்களை தவிர்த்து) துளஸியைய, நான்கு இதழ்கள் கொண்தாக, க்ரஹிக்க வேண்டும். கடைகளில் துளஸி வாங்கி பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க கூடாது ஏன் எனில் துளஸி க்ரஹித்த முறையை உறுதி செய்து கொள்ள முடியாதபடியால். புஷ்பங்களை ஸமர்ப்பிக்க இந்த விதிமுறைகள் கிடையாது.

6. சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாணத்தினால் ப்ரமேயமான ஸர்வேஸ்வரனின் உண்மை தன்மைகளை உணராத போது, கைங்கர்யங்களில் குற்றங்களுக்கு ப்ரசக்தி உண்டு ; அதனால் நம் பூர்வாசார்யரான ஸ்வாமி நம்மாழ்வார், தான் அருளிச்செய்த திருவாய்மொழியில் இதனை விளக்கினார் :

***ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம், தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து, எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே***

அதாவது,

எம்பெருமானான ஶ்ரீமந் நாராயணனின் அர்ச்சா வடிவத்தை இடைவிடாததாகவும், குற்றமற்றதாகவும் செய்து போகிற கைங்கர்யத்தை எம்பெருமானின் சந்தோஷத்திற்காக என்ற எண்ணத்தோடு செய்ய வேண்டும்.

ஆக, ப்ரமாணத்தினால் எம்பெருமானின் ஸ்வரூப, ரூப, குண விபூதிகளை பிழை அறத் தெளிந்தால் மட்டுமே, பிறகு அவன் கைங்கர்யமாவது குற்றமற்று இருக்கும். இல்லையேல் இது விபரீத எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் ஹேதுவாகும் :

# ஸ்வாமி தேசிகன் ***சாஸ்த்ரீய நியமனாதிகாரத்தில்***

***இச் சேஷத்வ சம்பந்தம் காரணமாக வரும் பகவத் பாகவத கைங்கர்யம் சாஸ்திர சாபேஷை ருசியாலேயோ  அல்லது சாஸ்திர நிரபேஷ ருசியாலேயோ என்னில் இருள் தரும் மாஞாலத்துள் இருக்கிற இவனுக்கு சாஸ்திரம் கை விளக்காக வேண்டுகையாலே யதா சாஸ்த்ரமாய் மற்றும் சாஸ்திரம் விகல்பபித்த வற்றில் யதா ருசியாகக் கடவது***

ஆக, ப்ரமாண பலத்தினால் ப்ரமேய கைங்கர்யம் குற்றம் அற்றதாகும்.

# வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஶ்ரீ ராமானுஜர்,

***பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி***

என்று 'சேஷ - சேஷி' சம்பந்தத்தை விளக்கி அருளியுள்ளார். அதாவது,

***சேஷன்*** - தன் செயலினால் சேஷிக்கு உகப்பை ஏற்படுத்துபவன்.

***சேஷி*** - சேஷனின் செயலினால் உகப்பை அடைபவன்.

அதனால், சேஷனான ஜீவர்கள், எம்பெருமானை மகிழ்விக்க, அவன் திரு உள்ளத்தை சாஸ்த்திரத்தினால் அறிந்து, அதில் கூறப்பட்டவைகளை செய்ய வேண்டும், என்பதாகிறது.

# இதையே, ஸ்வாமி தேசிகனின் ***ரஹஸ்ய ரத்னாவளி*** வரி :

***கைங்கர்யமாவது ஸ்வாமி உகந்த ஏவல் தொழில் செய்கையாலே இது யதா சாஸ்திரம் பண்ணினால் உகப்பாம்***

இங்கு செய்யும் பகவத் கைங்கர்யமும் சாஸ்த்திர விதிப்படியே செய்ய வேண்டும். என்று தெளிவிக்கிறார்.

***ந தைவம் தேசிகாத் பரம்***

***தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்***

******